தூண்டில்

வே. புவிராஜ்

ഉണ

ගෙන

என் இனிய பெரியம்மா

இலட்சுமணன் பாக்கியம் அவர்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

தலை

ஆசிரியர்
வே. புவிராஜ்

ஓலை
கவிதைத் தொகுப்பு

ஆசிரியர் : வே. புவிராஜ்
கைதடி மேற்கு, கைதடி,
யாழ்ப்பாணம், இலங்கை
+4745565299

பக்கங்கள் : xvi+152

முதற்பதிப்பு : ஏப்ரல் 2015

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

நூலழகு : நோபிள்பிரின்ரேர்ஸ்

அச்சழகு : நோபிள்பிரின்ரேர்ஸ்

வெளியீடு : கைதடி கலை, இலக்கிய
நண்பர்கள் வட்டம்

வாழ்த்துரை

"புவிக்கு ஈர்ப்பு உண்டென்று கண்டறிந்தான் நியூட்டன். இவன் எழுத்துக்களில் ஈர்ப்பை தந்துவிட்டான். இந்த புவி" வெறும் எழுத்துக்களால் என்ன செய்யமுடியும்? என்ற கேள்வி எனக்குள் இருந்தது.

ஆனால் அவற்றின்மூலம் எம் தாய்மொழியின் சிறப்பையும் எம் தனித்திறனையும் வெளிக்கொணரலாம் என்பதை உணரவைத்தவர் புவியண்ணா.

எனக்குள்ளும் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தை உண்டுபண்ணி உந்துசக்தியாக இருந்தவர்.

வாசிக்கும் பழக்கம் வெகுவாகவே குறைந்துவிட்ட எம்மிடத்தில் தன் தேடலை விரிவுபடுத்தி தன் கற்பனைகளாலும் மொழித்தேர்ச்சியாலும், புதுக்கவிதை, மரபுக்கவிதை அதுமட்டுமல்ல கட்டுரைகள், சிறுகதைகள் எல்லாவற்றையும் சிறப்பாக எழுதிவரும் புவியண்ணாவின் ஆற்றல்களை எல்லோரிடமும் சேர்க்கும் ஊர் ஊடகமாக இந்த ஓலை விளங்குமென்று நம்புகிறேன்.

புலம்பெயர் தேசங்களில் இயந்திரத்தனமான வாழ்க்கையில் நேரம் கிடைப்பதென்பது கடினம். கிடைக்கும் நேரத்தில் தமிழில் கொண்ட நேசத்தை எழுத்துக்களின்பால் வெளிப்படுத்தி வாசிக்கக்கூடிய நல்ல ஆக்கங்களை தரும் இவரின் இந்த முயற்சிக்கு என்னுடைய வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

புவி எழுதும் கவிகளிலே எனக்குமொரு ஈர்ப்பு உண்டு. இலக்கியத்திலும் பயணிப்பார். இலக்கணத்தையும் சுட்டி நிற்பார். சமூகத்தின் தவறுகளை இனங்காட்டுவார். அவை தவிர்ப்பதற்கான வழிகளையும் காட்டுவார்.

ஆதங்கங்களை, ஆட்சேபனைகளை, அற்புதமாய் வடித்தெடுப்பார். புதுக்கவிதையிலும் தடம்பதிப்பார். அதில் புதுமைகளை காண்பிப்பார். இராமாயண, மகாபாரதத்தையும் தொட்டுச்செல்வார். அதை நயத்தோடு வர்ணிப்பார்.

புத்தகத்தின் வடிவத்திலே தன் வித்தகங்கள் காட்டிடுவார், பார்த்திடுவேன் படித்திடுவேன் பரவசமாவேன்.

நண்பர்களின் சார்பிலே பணபுடனே வாழ்த்திடுவேன் வளர்கவே.

முன்னுரை

நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று தம்மைப்பற்றிச்
சிங்கநாதம் செய்தவன் யுகக் கவிஞன் பாரதி.

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மாகவிதை" என்றும் கவித்துவப் புலமையையும் புதுமை யையும் காட்டி தனக்குப் பின்னான காலத்தில் கவிதைப் போக்கின் மாற்றம் கருதித்தானோ என்னவோ அவன் வசனகவிதை என்று; நவ கவிதையாக வடித்த புதுக்கவிதை யையும் தந்து சென்றான். அவன் தந்த புது வசன கவிதை யில் ஒன்றினைப் பாருங்கள்.

மழை பெய்கின்றது காற்றடிக்கின்றது.
இடி குமுறுகின்றது மின்னல் வெட்டுகின்றது.
புலவர்களே மின்னலைப் பாடுவோம் வாருங்கள்.

மின்னல் ஒளித் தெய்வத்தின் ஒரு லீலை - நமக்குத் தொழில் கவிதை. என்றவன்... சுவை புதிது - பொருள் புதிது - சோதி மிக்க நவகவிதை என்றெல்லாம் அழுத்திக் கவி தீட்டியவன். மழை, இடிமின்னல் அனைத்தையும் புதிய நவீன வசனகவிதையாகத் தந்து வாழ்கின்றான். அவன் கவிதை களும் வாழ்கின்றன.

எமது மகாகவி (உருத்திரமூர்த்தி) யும் இன்னவை தான் கவி எழுத ஏற்ற பொருளென்று பிர் சொன்னவற்றைப் பாடாதீர் மீந்திருக்கும் இன்னல், இடி, முழக்கம், உழைப்பு இவற்றைப் பாடுக, என்றே ஆணையிடுகின்றார்.

இவ் இரு மாகவிகளின் பார்வையூடாக வே. புவிராஜ் என்ற இக்கவிஞன் தனது கவிதைவரிகளை நர்த்துவதை காணவும் களிக்கவும் இவ் "ஓலை" சாட்சியமளிக்கின்றது.

புற்றீசல்போல் கவிதை நூல்களின் வெளியீடுகள் நாளாந்தம் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன. அனேக மானவற்றில்வெற்றுச்சுலோகவரிசைகளையும், வார்த்தைக் கோப்புக்களையுமே காணமுடிகிறது.

ஆனால் புவிராஜ் என்ற இந்த "ஓலை" க்கான இளம் கவிஞனின் கவிதைகள் யாவும் அற்புதமானவையாகவும் எழுச்சிக்கு வித்திடுவதாகவும் ஆனந்தமளித்து முழக்கமிடு வதையும், கவிதா நாட்டமும் ஆர்வமும் உடையவர்க்கு நிறைவும் மகிழ்வுமளிப்பதாகவே உள்ளமை மனங் கொள்ளத்தக்கது.

இன்னல் இடி முழக்கம் தரும் உணர்வின் உணர் வையே காணவைக்கின்றார். மகாகவி (உருத்திரமூர்த்தி) குறிப்பிட்ட மீந்திருப்பவற்றை தனது கவித்தடங்களாக்கி உலவவிட்டுள்ளார். இவரது இத்தொகுப்பினுள் உள்ள அனைத்துக் கவிதைகளிலும் இவரது அப்பளுக்கற்ற உணர் வின் வெளிப்பாட்டையும் எழுச்சியையும் காணமுடியும். இவரது கவிதா வளமும் பரப்பும் மிகப் பரந்தும் அகலித்தும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். தனதான ஊர், மொழி, இழப்புகள் எனப் பலவற்றை வீரியமும் கற்பனைச் செறிவும் வளமும் கொண்டதாகப் பின்னியுள்ளமையையும் காண முடிந்தது. சிலவரிகளில்மனக்கொதிப்பையும், ஆழப்புதைந்து போன உண்மைகளைக் கேள்வியாகவும் கேட்டு நிறுத்தி விட்டு

தனதுகிராமத்தை எனதுஊர்க்கவிதையில் - கைதடி இப்படியா? இத்தனை வளமுடையதா? அப்படி அதிசயப்பட

வைக்கின்றார்.

பருவப் பெண் பாவாடைகட்டி
பச்சை வண்ணத் தாவணி போட்டால்

பாறையிலும் வேர் ஊன்றும் பசுமைநிறைந்த ஊர்

.....

காற்றினிலே கீற்றெறிந்து ஈஞ்சு பாளை தள்ளும்

.....

கற்பனையில் கண்டதில்லை அப்படி ஓர் பேரழகு
இப்படிப் பலப் பல...

ஊரின் சிறப்பை மட்டுமா காட்டினார். அழிந்து சிதைந்து போன எமது ஊர்களை "பண்பாடும் பழக்கவழக் கங்களும் மண்ணோடு எருவானது... நாகரீகம் தலை விரித்தா முகமூடி போட்டு...காத்தாட உலவுதிங்கு கேட்க இங்கே நாதி இல்லை..." என்று ஊரின் இடரைப் படம்பிடித்து நம் கண்முன் வைக்கின்றார்.

நாம் அடைந்த இன்னலெல்லாம்
ஓர் இரவில் கரைந்துவிடும் - என்று நாம்
காளை மடிவருடிப் பால் சுரக்கும் என்பது போல்...

எனத்தன் மனக்குமுறலைப் புலப்படுத்துகிறார். அதேபோலத் தாய்க்கும் - மனைவிக்குமான பண்பாட்டு மரபு வழித்தொடரை இப்படிக் காட்டுகிறார்.

மரணத்தில் பாடைதன்னில் தாய் மாரடிப்பாள்
மனைவி அமங்கலிப் பட்டம் வாங்கிப் பொட்டழிப்பாள்

இப்படியே தாய்மையில் ஆழ்ந்து மறையாது நனைந்து திழைத்து மிதவையாகி மேன்மையையும் மென்மையையும் புலப்படுத்தி காதலில் பாலியல் கவர்ச்சி யையோ, வாலிப வனப்பையோ சுகித்துக் கொட்டித்தீர்க்காது பண்புடைமை வரம்பிற்குள் நின்று பாடுகிறார்.

மரம் நிலவு பற்றிய பார்வையில் வெறும் கவிஞ னாக அன்றிப் புகுத்தறிவு வாதமும் புரிந்துள்ளார். மொத்

தத்தில் இவர் கவிதை தித்திக்கும் தேன் சுவைக் கவிதை கள்.

மொழிகளின் ஆரம்ப காலம் களிமண் தகடுகள் குகைக் கற்கள் பாறைகளில் வடித்ததுபோல் தமிழரின் முந்தையோர் ஓலைச்சுவடிகளிலேயே பொறித்து மொழியை வளப்படுத்திக் காத்தனர். அந்த மரபு வழிவந்த புவிராஜ் என்ற கைதடிக் கவிஞன் ஓலையில் தன் கவி ஆரங்களைப் பதித்து காலத்தால் அழியாத வைரங்களாகத் தந்துள்ளார். இவரது கவிதைகள் தாங்கிய நூலுக்கு ஓலை எனப் பெயரையும் சூட்டி ஓலையென்றால் ஆவணம். சுவடி எனத் தமிழ் கூறும் அர்த்தமும் ஆழமும் இந்த ஓலைக்குக் கிடைக்கவேண்டுமென்ற அவரது நம்பிக்கையும் எதிர் பார்ப்பும் ஓலையில் வைரங்களாகப் பட்டை தீட்டிய வைரங் களாக ஒளிர்வதால். இக்கவிதைகள் காலத்தீயில் வெந்து போகாது. கவிதா உலகில் நிலைத்த ஒரு இடத்தை தனதாக்கிக்கொள்வார் எனக்கூறி நிலைத்து நிற்கும் என்றும் கூறி இவர் ஆற்றல் சிறக்க வாழ்த்துகின்றேன்.

வளவைவளவன்.
இல. 5, அறிவியல்நகர்,
கிளிநொச்சி.

என்னுரை

வணக்கம் வைக்கிறேன்
தயக்கம் எனக்கு இல்லை.
வாசகரே எனத் தொடங்கவில்லை
என் உறவுகளே என எழுதுகிறேன்.
காலம் காலமாய் எனக்குள்
கசிந்த கவிதைகளை
நான் ஒன்றாய்ப் பக்கம் வடித்தேன்.
பூக் கொத்தாய் கட்டிமுடிக்க
தித்திக்கும் தேன் கலந்து
திகட்டாத தமிழ்கலந்து
அருந்தலின் விருந்தாய்
அமுதுகள் கொண்டுவந்தேன்.
மருந்திலும் நூறுசுகம்
வெறும் கட்டெறும்புக்கரிதல்ல.
நாமகள் துணையுடன் நாசிக்கும்
இதம் என செந்தமிழ் கொண்டுவந்தேன்.
உங்கள் ஆசிகள் வேண்டும் என்று
உயிர் இருக்கும் என் எழுத்தில்
உம்மால் மூச்சுவிட ஏங்குகின்றேன்.
எதற்கும் தரங்குறைந்து போனதில்லை,
அதனால் விளம்பரங்கள் தேவையில்லை.
உங்கள் முகங்களில் என்

முகவரி தேடுகின்றேன்.
என் பாதையை திடப்படுத்த
எழுத்தாணியும் ஏர்முனையும்
பதப்படுத்தும் தளமானால்...
தண்ணீரிலும் கோலம் இடலாம்
பாறையிலும் விதைக்கலாம்
அதன் தரம் அறிந்தால்,
என் பதம் உங்கள் வசம்
ஓர் அங்கீகாரம் வேண்டி என் எழுத்துக்களை உங்கள்
முன் படைக்கின்றேன்.
என் எண்ணங்களை விதைக்கின்றேன்.
எனக்கு நான் முகவரி கேட்டு
நன்றியும் சொல்லி.
நானும் குறுகி இதில் வரும்
அறியாமைக்கு அறிந்ததைச் சொல்லி
என் எழுத்துக்களுக்கு ஓர் அரங்கு கேட்டு
நிற்கின்றேன்.
உங்கள் ஆசிகளுடன்.

நன்றி

புவிராஜ்

நன்றி

ஒன்றுகூட்டி ஒருவர் பால் அன்பு கூட்டி,
நன்றிக்கடன் செய்வது என் வேர்களுக்கு
நானே நீர் ஊற்றுவது என்பது.
நான் நன்றி சொல்ல விரல் மடித்தால்...
வான் வெள்ளிக்கூட்டம் போதாது.
அவர் பெயர்கள் எல்லாம் எழுதிவைக்க
நூறுபக்கம் போதாது.
பக்கம் பக்கமாய் எழுதிவைத்தால்
என் பண்புக்கது போதாது
என் மனச்சுவரில் பதித்து வைத்தேன்.
உடல் வேகும்வரை அழியாது.
நான் நானாக இருப்பதற்கு நன்றி.
என் தாய் தந்தைக்கு.
நான் அறிவார்ந்து இருப்பதற்கு நன்றி.
என் பள்ளியும் பள்ளியறைப் பாடமும் அதைச்
சொல்லித்தந்த குருவும்.
என் சுற்றமும் சூழலும் நூல்பிடித்தது.
என் பாதை வழுவாமல் நித்தம் எனக்கொரு பாடம்
உரைத்தது.
சிந்தை விலகாமல் நன்றி நன்றி.
நாள் எல்லாம் நன்றி.
இன்றல்ல என்றைக்கும் நன்றி
என் உறவு, வின்சன், ரஞ்சன்
என் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு நன்றி.

என் அறிமுகப் பலகையில்
அகல்விளக்கில் நெய்ஊற்றி ஒளி ஏற்றியவர்
என்.கே. துரை அண்ணாவுக்கு நன்றி
என் செதுக்கல்களை சிதைத்திடாமல்
தன் முற்றத்தில் ஊன்றியவன்
ப. றொபின்சன் அவனுக்கும் நன்றி
நான் என் முகம் பார்த்துப் பேசவைத்தவன்
என்எழுத்துக்களின் மறுபக்கம்
என் விழுதுகளைச் சுமந்தவன்
தம்பி அரவிந்தன் அவனுக்கும் நன்றி.
என் ஊரில் நான் மதிக்கப்பட வேண்டியவர்களில்
எழுத்துக்கூட்டச் செய்வித்தவர்களில்
தம்பி கயுந்தன், உடன் நிசாகரன் அவர்களுக்கும்
நன்றி.நால்வகை கருத்தையும் என் அறியாமை
இருளையும்
வல்லின பேதத்தையும் சொல்லிடையில்
சொல்லித்தந்த
என்கவிதைத்துறையின்வளர்ச்சிக்கானஆலோசனை
யையும் எனது இந்நூலுக்கான தகுந்த முன்னுரையி
னையும் எழுதி வழங்கிய என் பள்ளித்தோழன் நீ-
திவளவனின் தந்தை வளவை வளவன் ஐயா அவர்
களுக்கும் என் ஓலையை நூர்த்து நூலாக்கி அட்
டைப்பட ஓவியத்தை வரைந்துதந்த ஆசை இரா
சையா அவர்களுக்கும் அச்சேற்றித் தந்த நோபிள்
அச்சகத்திற்கும் அரங்கில் அறிமுகப்படுத்திய என்
பள்ளி மேடை யாழ்.கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயத்திற்கும் என் சிரம் தாழ்ந்த நன்றி
கள்.

சமர்ப்பணம்

தாயே பாக்கியமே!
நான் பெற்ற தவமே!
நாலு பிள்ளை பெற்றவளே!
தவமிருந்து பெற்றதுபோல்
தத்தென்னை எடுத்தவளே!
உன் முலைப்பால் குடிச்சதில்லை - ஆனாலும்
உன் உயிர்கசிந்து எனை வளர்த்தாய்
மடியில் தூங்கவச்சு...!
என் முடிவருடி விழிமூளிச்சாய்;
எனக்கடுத்து என் தங்கை என் தாய் கருவில்
உட்கார,
உனக்கிருக்கு என்மடி கண்ணயர்ந்து,
கண்ணுறங்கு கண்மணியே என்றவளே
உன் பொழுது எனக்காச்சு!
நானறிஞ்ச காலம்வரை தாயே
உனக்காக என்னதான் செய்துவிட்டேன்
பாவிநான்.

என் உயிர் பிடிச்சு வெளிநாடு வந்துவிட்டேன்
பக்கமாய் நானிருந்து கடைசிவரை பாக்கலையே!
சக்கரை நோய்பிடிக்க, அக்கறை நான் படலையே

நீ வெளிநாடு வந்தபோதும் உனை வந்து
பாக்கலையே
பெற்ற பிள்ளை பேரப்பிள்ளை பத்துப்பிள்ளை
இருந்தபோதும்...
ஒத்தைப்பிள்ளை நீயென்று சொல்லி நீ
அழுகையிலே
விம்மி நெஞ்சு வெடிச்சதம்மா!
பாழாய்ப்போன அந்த நோயுந்தன் உயிர்குடிக்க
பெத்தபிள்ளை யாருமின்றி பரிதவிச்சு
போயினையே!
கொள்ளிபோட உரிமையில்லை!
தெளிவுவிட அருகில் இல்லை பாவியடி! நான்;
என்னதான் அவசரமோ? காலன் உனை கூட்டிச்
சென்றான்
தாயே உன் மடியின் சூட்டினிலே சூடுகண்ட
எனக்கு
என்மடியின் சூட்டினிலே நீ வந்து விளையாட
சேயாக வந்துவிடு வரும்வரை காத்திருப்பேன்
வாசல்வரை பார்த்திருப்பேன்
என் கவி நூலில் மாலை கட்டி
உனக்காக சாற்றி வைப்பேன்
தாயே வந்துவிடு
மறுபடியும் நீயே எனக்குத் தாயாக...

தாய்

நான் கரு இருந்த கோயில்,
அவள் தெய்வத்தின் அவதாரம்
அன்புக்கு அடையாளம்
இந்த பிரபஞ்சம் எல்லாமே தாயின்றி எனக்கேது?
கனவுகள் பல கண்டு பத்தியத்தோடு
கரு சுமந்து இடுப்புவலி பொறுத்து...
ஈன்று என்னை எடுக்கவே
செத்துப் பிழைத்தவளே!
உன் வேதனை நான் அறிந்ததில்லை
நீ சொல்லிப் பேசவில்லை.
என் சிரிப்பில் நீ மறந்தாய்
பெத்த கடன் நான் மறந்தேன்
கோடை மழை கொட்டுகையில்
ஊரெல்லாம் கொள்ளை நோய்
பேதியிலை நான் கிடக்க மாறாப்பு சேலையிலே
மொட்டாக்கு போட்டென்னை
காட்டாசுப்பத்திரிக்கு
கால்நடையாய் கொண்டுபோய்வருவாள்.
அம்மலோ தும்மலோ மடியிலை தலைவைத்து
முடிகோதிக் கதைசொல்லி
தூங்கவச்சு கண்விழித்து காத்திருப்பாள்.
நான் பள்ளிக்கு போகையிலே பாதி வழியனுப்பி
இடுப்பில் எனைத்தாங்கி அடுப்பில் வெந்தென்னை
ஆளாக்கிவிட்டவளே...
சிணுங்கி விளக்கெரியும்
அனுங்கி கோழிகூவும் முன்னே...
நெல்லரிசி குத்தி முட்டிப் பானையில்
சுண்டக்கஞ்சி செய்து இளம் சூட்டோடு நீ
தருவாய்...
சொல்ல வாயூறும் சில்லுப்புட்டும்,
கதகதக்கும் மீன் குழம்பும்

இன்னும் நினைக்கையில் அடி நாவில் நீரூறும்...
பஞ்சமும் பட்டினியும் தலை விரிச்சு ஆடையிலே
தன் வயித்தைக்கட்டி என் வயிற்றை
வளர்த்தவளே...!
பொல்லாப்பு வந்ததென்று ஊரெல்லாம் ஒப்பாரி
என்னுயிர் நீ காக்க நீ பட்ட பெரும்பாடு
சொன்னாலும் தீராது.
தாயே உன்கடன் எப்படி நான் தீர்த்திடுவேன்.
சீமையிலே நான் வந்து சிந்தனைகள் சிதறியது
சீர்கெட்ட வாழ்வான செந்தமிழர் எம்பெருமை
சொல்ல வாய் கூசியது.
சொந்தங்கள் நான் மறந்தேன்.
யாரெவரோ பேர் மறந்தேன்.
காலங்கள் போனபின்னும்
பெத்தவளே என் நினைவு
உன்னைவிட்டுப்போகலையே.
தொலைபேசி தந்தியிலே என் சுகத்தை நீ அறிஞ்சா
உன் சுகத்தை மெய்மறந்தாய்
பேரன் பேத்திகளை அங்கலாய்ப்பாய் பார்க்க
எண்ணி
சித்திரையில் வெய்யிலென்றாய்...
மார்கழியில் குளிரென்றாய்...
தையிலே பொங்கலென்று சொல்லாம சொன்னாய்
எழுத்தறிஞ்சு படிச்சதில்லை...
ஊருலகம் தெரிஞ்சதில்லை...
உன்னுலகம் எல்லாம்,
உன் பிள்ளை உன் மக்கள் தாயே
உன்பெருமை சொல்ல
என் நாட்கள் போதாது
நான் விம்மி அழுதால் உன் நெஞ்சம் தாங்காது.
அரசன் அன்று கொல்வான்,
தெய்வம் நின்று கொல்லும்
தாயுள்ளம் ஒன்றே என்றும் அன்பு கொள்ளும்.

***

பெற்றவளே என் பெயர் சூட்டி வைத்தவளே
நான் கற்றறிந்த பாடமெல்லாம்
தெய்வம் நீ அன்றி
வேறொன்றும் சொல்லவில்லை

உன் உயிர் கூட்டில் எனைத்தரித்து
நீ மூச்செடுத்து உயிர் கொடுத்தாய்.
நான் பிறக்க நீ பிறந்தாய்.
உடல் வருத்தி உயிர் சுமந்தாய்
என்னை ஈன்று கொடி அறுத்து
மறுஜென்மம்தான் எடுத்தாய்

நினைந்து பால் கொடுத்தாய்.
நீங்காமல் உடன் இருப்பாய்.
அசதி என்று ஓய்ந்ததில்லை
மார்பில் எனை வளத்தி
நான் கண்ணுறங்க பாட்டெடுப்பாய்
பால்சோறு பழம் என்று வண்ணமாய்
கதைசொல்லி
வெண்ணிலா தான் காட்டி
உண்ணவா என்று சொல்லி
எனைக்கூட்டி நீ மகிழ்வாய்.
உன்னைப் பிடித்து நடை பழகி,
நான் கல்லோடு இடறி விழ,
நீ நெஞ்சுநொந்து பதறினாய்.
பிஞ்சு விரல் நொந்ததென்று
கண்ணில் ஒத்தி வருடினாய்.
பாதி வழி பள்ளி வந்தாய்.
பள்ளிப்பாடம் சொல்லித்தந்தாய்
கூடிவிளையாட விட்டு
ஓரமாய்ப் பார்த்து மகிழ்ந்தாய்.
மழலைத் தமிழ் கேட்டு பூசித்தாய்
குறும்புபல நான் செய்வேன்
அதில் புதுமை கண்டு மெய் சிலிர்ப்பாய்

அதட்டி நீ பேசவில்லை.
நான் யாரிடமும் கைநீட்டவில்லை.
தும்மலோ காச்சலோ விரட்டி எனைப் பிடிச்சா
உன் விழியில் தூக்கமில்லை.
மூடப்பழக்கங்களை நீ சொல்லித் தந்ததில்லை.
தெய்வமே இல்லை என்று நான்
சொல்லத்தேவையில்லை.
என் கண்கண்ட தெய்வம் இங்கு நீ இன்றி ஏதும்
இல்லை.
உன் முந்தானைத் நுனி பிடித்து
காசு வேண்டி நான் அள
என்னமோ கதைபேசி முடிந்த பையில் பணம்
எடுத்து
பஞ்சுமிட்டாய் வேண்டாம் என்று
குச்சி ஐசு தின்னச் சொல்வாய்.
உன் பாட்டை நீ மறந்து முடிந்து வைத்த
காசெடுத்து
உன் தேவைதனைச் சொல்லாமல்
என் ஆசைக்கு நீ தருவாய்.
பஞ்சமோ பசியோ நான் அறிஞ்சுகொண்டதில்லை.
வடிகஞ்சி நீ குடிச்சு சுடு சோறுதான் தருவாய்.
எழுத்தறிந்து படிச்சதில்லை
வேறு உலகம் உனக்கு இல்லை.
உன் உலகம் எல்லாமே
எனக்காக மட்டும்தான்.
உன்பிள்ளை மக்கள்தான்...
கூடிக் குடியிருந்து சொந்தங்களும் அருகிருந்து
ஓடித்திரிந்த ஊரில் கருநாகம் புகுந்ததுவோ?
யார்பாட்டை யார் அறிவார்?
விழிநொந்து தான் அழுவாள்.
பண்பாட்டை சீரழித்து எம் தமிழைக்
கொன்றழித்து
எம்மண்ணில் நாம் அடிமை எது மிஞ்சும் எம்
உடைமை?

எம் உயிர்கூட எமக்கான சொந்தம் இல்லை.
முள்வேலி முகாமுக்குள் முடங்கி நாம் போனோம்.
வல்லூறு வட்டமிட வாழ்விழந்து போனோம்.
அடைகாத்த குஞ்சுகளால் எம் உயிரை நீ காக்க
பட்ட பெரும்பாடு சொன்னாலும் மீழுமோ.
விளைநிலத்தை ஈடுவைத்து விளைந்த
நெல்லைக் கதிரறுத்து
இறுகச் சேர்த்ததெல்லாம்...
பாவியர்க்குப் பலிகொடுத்து,
பத்திரமாய் நீ இரண்டு
கண்ணிரண்டும் கதகதக்க..
கதிர்காமக் கந்தனுக்கு
பலநூறு நேர்த்திவைத்து
வளிஅனுப்பிவைத்தாய்.
உன் அருமை தெரியாமல்,
ஊர்ப்பெருமை புரியாமல்
தாய்நிலத்தைப் பறிகொடுத்து
வேர் நிலத்தில் அகதியென
மனம் பொசுங்கி வாழ்கின்றோம்.
எதுநாள் வரை தொடரும் இந்நாள்?
போய் ஒழிய அந்நாள் எட்டுமோ?
எம்வாழ்வு வளம் நிறைய.

இறைவன்

இறைவன் ஜீவனுக்காய் ரட்சித்த உலகை
ஜீவநதிகள் இரட்சித்தது இறைவனை
இறைவன் மனிதனைத்
தெரிந்துகொண்டான்.
மனிதன் இறைவனைத் தேடி மதங்களை
வளர்த்துக்கொண்டான்
எல்லா உயிருக்கும் வயிற்றில் பசி
எல்லா படைப்புகட்கும் முகத்தில் கண்,
எல்லா உயிருக்கும் அர்த்தம் ஒன்றே
அந்த உயிர்கள் அனைத்திற்கும் தலைவன்
ஒருவனே!
அவன்தான் இறைவன்.
மதங்கள் என்று முத்திரை குத்தி இனங்கள்
பிரிந்தது.
அதனால் இறைவன் தொலைந்துபோனான்..
மதம் என்பது சாக்கடை.
நீ வீழா வரைக்கும் ஞானி.
இறைவனை மட்டும் அறிந்து கொள்.
உன் நன்மை தீமை அவன் அறிவான்.

***

உறைந்துபோனகல்.
மனிதன் உருக்கொடுத்தான்,
அதனால் உருக்குலைந்துபோனான்.
மதம் என்ற பெயரால் பிரிந்தது.
மனித மமதைக்குள்தானே விழுந்தது.
சாத்திரம் சடங்குகள் பிறந்தன.
தன்நம்பிக்கை அங்குதான் உதிர்ந்தது.
பாவங்கள் செய்திடத்துணிந்தான்.
அதன் பரிகாரம் பணம்விட்டு எறிந்தான்.
இறையாமை வேகத்தை ஓர் அருகாமை
ஆக்கினான்.
பழிகளில் செய்த வலிகளை பலிசெய்து
இறமையைச் சாற்றினான்.
பாவம் அந்த இறைவனின் தலையில் சூட்டினான்.
தெய்வத்தை நம்பினோர் கண்ணுக்கு பரிகாரத்தின்
ஆறுதல் போதுமா?
பாவியர் பரிகாரம் பாவத்தைப் போக்குமா?
கொள்ளையும் கொலையும் மலிந்தது.
ஏன் அவன் தடுக்கவில்லை?
அவன் தன் வாசலின் சாவினைத்
தொலைத்துவிட்டான்.
அவன் காவலர் யாவரும் அங்கு இல்லை.
காவி கட்டிய யாவரும் உண்மையில்லை.
அவள் சன்னதி வாசல் கள் பல உண்டு.
அதில் உள்வீதி வெளிவீதி இரண்டுண்டு
அதில் அவன் கருவறை.
தாண்டிட பல வாசல்படி உண்டு.
அவன் எப்படிக் குரல் தருவான்.
இங்கு எவ்விதம் தான் வருவான்.
கல்லறைச் சுவருக்குள் கிடக்கிறான்.
கருவறை பிள்ளைபோல் நடிக்கிறான்.
பிள்ளைக்கு தொண்டு செய்
அவன் தொண்டை நீ வேண்டிக் கேளாதே.
அவன் காதினில் என்றைக்கும் விளாது.

உன் கஸ்ரங்கள் என்றுமே தீராது.
அன்றைக்கு யாரோ எழுதிவைத்தான்.
நன்நெறிவார்த்தைகள் கூறிவைத்தான்.
நன்மைகள் தீமைகள் பிரித்து வைத்தான்.
வாழ்க்கையின் இலக்கணம் வகுத்துத்தந்தான்.
இல்லறம் நல்லறக் கருத்துவைத்தான்.
பொதுநலம் பேணி வாக்குரைத்தான்.
பொருள் உள்ளவன் கொள்வது வெறும் கை என
எழுதநினைத்தான்.
அன்புதான் சிவம் என மோட்சத்தின் வளி என
நம்பு.
போர் வாழ்ந்திட வளி வகுத்தான்...
அதை மெய் என்றும் பொய் என்றும் வாழ்பவர்
தானுண்டு
அவர் தலைவிதி யார் வகுப்பார்.
தெய்வம் உள்ளதால் யார் நினைப்பபார்
இருந்தால் அவன் ஆழுமை தரவேண்டும்?
எம் கேள்விக்கு பதில் வேண்டும்.

***

ஆற்றல் உள்ள மனிதனுக்கு
நிந்திக்கும் எண்ணம் ஏன் வந்தது?
மானிட வர்க்கம் இதுவென்று அறிந்தோ
வருவேன் என்ற இறைவன் வராமல் போனான்.

இறைவன் அவன் உண்மையானால்,
இன்னல்கள் தீர்க்க வருவானானால்...
மீண்டும் என்றோ ஒரு நாள் வந்திருப்பான்.
வந்தால் மனிதன் அவனை கொன்றிருப்பான்.
உண்மைக்கு சாட்சியில்லா உலகமிது.
உவமைகள் சொன்னால் ஏற்குமா?
கைக்கெட்டாமல் எரிக்கின்ற சூரியனும்,

தொட்டாலே போதுமென்ற தென்றலும்
வற்றாமல் ஓடுகின்ற கடலும் சினக்காமல்
வந்திறங்கும் மழையும் மதம் இனம்
கேட்டதுண்டா?
நிறம் குலம் பார்த்ததுண்டா?
மனிதா நீ மட்டும் ஏன் அடையாளம்
காட்டுகிறாய்?
சுவாசம் வேறல்ல, உணர்வு வேறல்ல,
உதிரம் வேறல்ல உண்மை வேறாகுமா?
காலைச்சூரியன் அந்தியில் வேறல்ல.
தென்றல்தான் புயலாகும் புயல்தான்
தென்றலாகும்.
உண்மையை அறிந்திடு.
ஓர்நாள் பொழுதில் வாழ்நாள் அர்த்தம் புரிகிறது.
உறக்கத்தில் உன் முன் நடப்பது தெரிகிறதா?
உடல் உளறும் சிலவேளை உடை விலகும்
உனக்கது புரியுமா?
மதி மயங்கும் உறக்கத்தில் உடல் அசைவது
புரியாது
உயிர் அடங்கிப்போனபின் மறுஜென்னம்
தெரியுமா?
இறைவன் வாழ்நாள் நெறியை கற்கசொன்னான்
மனிதன்
மதவாழ் நெறியை கற்றுக்கொண்டான்.
வேறு நிலைப்படுத்தி மதங்களை வளர்த்து
பாகுபாடு காட்டும் மனிதன் வடிவில் இறைவன்.

குரு வாழ்த்து

பேச வார்த்தையில்லை; எழுதுகிறேன்.
எழுதவரிகள் குவிகிறது... திணறுகிறேன்.
கள்ளிக்காட்டில் ஒரு துளசி மரம்.
சுற்றி வந்து வணங்குகின்றேன்...
ஆம் என் குருவை வணங்குகிறேன்.

கொண்டலும் எருக்கலையும் பூத்தகாட்டில்
தாழம்பூ தலைகாட்டியது.
செம்புழுதியில் செதுக்காத வைரம்
எனது குரு... திருவாளர் ப. செல்லத்துரை
தொண்டனாய்த் தோழனாய்
தோழர்தம் தலைவனாய், ஆசானாய்
சீர்திருத்தவாதியாய்...
தந்தையாய், தனயனாய்
ஊருக்காய் உழைத்ததால்;
தேகம் கறுத்ததுவோ?
அனுபவம் அரங்கேற
வெண்முடி சூடி
மணிவிழாக் கண்டீரோ?

கனவுகளுக்குச் சொந்தக்காரன்.
காலத்தைக் காணக்கிட்டவன்.
நாளைய உலகிற்கு

நம் ஊரில்
நடுகல் நட்டவன்.
எள்ளோடு எலிப்பிளுக்கை ஆகாமல்
தனக்கென்று பாதைவகுத்து
எங்களையும் ஈர்த்தவன்.
நாள்முழுதும் செம்மண் குளித்து
கால்வயிறுக் கஞ்சிக்கு
உழைக்கும் பாமரர் நம்மூரில்
ஏரைக் கட்டியிழுத்து
ஏட்டினைத் தலையிற் சுமந்தவர்.
ஆற்றலைத் தன்னுள் வளர்த்து
அடம்பனாய் ஏர்பிடித்தான்.

கள்ளிப் பூ பூக்கும்...
முள்ளுக்காட்டில்... நெருஞ்சிமுள் நிக்கிறது.
செந்தாமரை பூத்தது...
சுற்றமும் சூழலும் புதுப்பாடம் கற்பித்தது.
சிந்தனைகள் பிறந்தன;
சினந்தெழவைத்தது.
முள்ளுச் செடிக்கு ஏன் முள்வேலி
வைராக்கியம் வெற்றிப்படி கட்டியது.

பள்ளிப் பருவம்...
பகலில் கனவு
பாவை மோகம்;
பருவம் அனைத்தும்...
எட்டிக் கடந்து
ஊருக்கு உழைத்தாய்...
அரசஊழியமும் தொண்டு நிறுவனமும்
வாசலில் நின்று வா! என்று
வரவேற்று நின்றன.
சென்றான் வென்றான்...
மலர்மாலைகள் வாங்கினான்.
எவரும் எட்டிப்பிடிக்கா இடம்

ஓலை

தான் படித்த பள்ளியில்
தலைமை ஆசிரியர்.

எனக்கும் நீ ஆசான்
என் குருவே எதைத்தொட எதை விட?
என்ற திண்டாட்டம் இல்லை உனக்கு.
தொட்டதெல்லாம் உன்வசம்
உலகறிந்த குருவி நீ...

அன்பும் அறமும்...
பண்பும் பணிவும்...
அமைந்த ஒரு திலகம் - நீ
அறியார்க்கு உளியாய்
ஊர் இணைந்த உழைப்பை
ஒற்றுமையாய் கட்டிவைத்தாய்
எல்லைகளைப் பிடுங்கிவிட்டு
ஒரு குலமாய் ஒன்றுபடப் பாடுபட்டாய்.
அவதூறு வந்தபோது;
கனிதொங்கும் மரமானாய்.
என்னூரின் வளம் காக்க
நிலபாகல் கொடியானாய்.
காலங்கள் உருண்டோட
வான் பார்த்து அசைமீட்டாய்...
மண்ணின் கரு மணியே
கருமணியின் மணிக்கொழுந்தே!
பொன்னே கற்கண்டே
பொழுது கொள்ளாத் திரவியமே
ஊர் கூடிக் கரம் வைத்து
மணிவிழாக் காணவந்தோம்.
வாழ்த்துகின்றேன்
உன் புகழ்
இயற்கையோடு இணைந்திருக்க
வாழ்த்தி வணங்குகின்றேன்.

கலைவாணி

கலைவாணி என் தமிழுக்கு விலை நிர்ணயித்த
தாய் நீ.

ஏட்டில் அடி எடுத்து
எழுத்தில் சுவை படைத்து
என் கனவை அரங்கமைத்து
எனக்கோர் வடிவம் தந்தாய்.
நீ வளர்த்ததில் நானும் ஓர் தத்துப்பிள்ளை.
உன்னை வணங்குகிறேன் தாயே.
பெற்றவளே உன் மனம் குழிர
கசடறக் கற்றதில்லை நான்
உன்னால் கற்றறிந்த பாடங்களில்
என் உள்ளம் குளிர்ந்ததம்மா.
தாய்பிள்ளை பாசம்
அதை மறந்துபோகச் செய்யும்.
அந்தப் பள்ளிக்கூட வாசம் அது.
ஊன் அடங்கி உயிர் பிரியும் வேளைவரை
நூறு கதை- பேசும்
அம்மா என் ஊனும் உயிரும் என் தாய் தமிழும்
தாயே நீ தந்த கொடை.
கலைவாணியே என் சந்ததியும் பயிலவேண்டும்.
நீ வேண்டும் துணை.
என்றும் வாழ்க நீ வளிகாட்டியாய்.
மீண்டும் வணங்குகிறேன்
என் சிரம் தாழ்த்தி.

மனைவி

இறைவன் நினைத்த உறவு
விதியால் கூடி முடிந்தது.
கண்டதில்லை பார்த்ததில்லை
காரணம் சொல்லத் தேவையில்லை.
காலமும் கூடிவந்து அறிமுகமாக்கியது.
முடிவும் முதலும் இவள்தான் என்று திணித்தது.
என் தாய்க்கொடியோடு வராத சொந்தம்.
என் தாரமானது.
என் ஆழுமைக்கு அதிகாரமிட்டவள்
உணர்வுகளை உள்வாங்கி என் மறுபக்கமானவள்.
உதிரம்வேறு சரீரம் வேறு
என் சரீரம் ஆனவள்.
முந்தானை முடிச்சென்ற கட்டுக்குள்
முழுவதையும் அடக்கி என் வழி நடப்பவள்.
எனக்காய் அழுபவள். என்னோடு சிரிப்பவள்.
ஆனந்த மழைக்குள் கூடி நனைபவள்.
தன் பொட்டிலும் பூவிலும் நான் வாழ
நினைப்பவள்.
தாலிக் கயிற்றிலே என்னுயிரை
இணைத்துக்கொண்டவள்.
கருவலி என்பது மரணத்திற்கு ஒத்திகை
அதை மடியிலே தாங்கி தோளிலே சுமந்து
என் தலைமுறை என்று அறிமுகம் செய்தவள்.
என் தாய்க்கு நான் பிள்ளை
தான் பெற்ற பிள்ளையில் மேலென கொள்பவள்
மனைவி
மரணத்தில் பாடைதன்னில் தாய் மாரடிப்பாள்
மனைவி அமங்கலிப் பட்டம் வாங்கி
பொட்டழிப்பாள்.
பிள்ளைகள் என்பது கொம்பேறு கொடிகள்.
மனைவி எணவன் என்ற விருட்சத்தின் ஆணிவேர்.
நான் வீழ்வதுமில்லை சாய்வதுமில்லை.
என் காலடி மண்ணும் காற்று எடுத்ததில்லை.
பேளை பெண்ணாய் நான் நினைத்ததில்லை
பேயும் இரங்கும் பெண்ணில் நான் மயங்கவில்லை.
எனக்காய் அழும் என் மனைவியை
என் உயிரைப்போல நான் சுமப்பேன்.

காதல்

கண்கள் விரிக்கும் வலைக்குள்
உள்ளம் வந்து மாட்டிக்கொள்வது காதல்.
காதல் விதிவிலக்குகளுக்கு கட்டுப்படாதது.
நியாயம் தர்மம் தெரியாதது.
உயர்வெது தாழ்வெது புரியாதது.
அறிந்து நடப்பவன் அறியாது கொள்வது காதல்.
அரட்டை பண்ணி அடிசறுக்கேன் என்று
சொல்வோர்
குருட்டுத்தனமாய் அடி பணிந்து கிடப்பதும்
காதல்.
ஏன் கருவண்டுக்கும் காதல் வரும்.
காதலிலே போதை வரும் அந்தப் போதைதனை நீ
அறிவாய்
காதல் ஜீவப்பசி மோகப்பசியாகி காமப்பசி
கொள்கிறது.
ஜீவ ஆத்துமா உணர்வைத் தீண்டுகிறது
உடலோ உறவைத் தேடுகிறது.
அந்தத் தேடலில் ஆத்மா சங்கமமாகி ஒரு
சந்ததியைத் தருகிறது.
காதல் தவிர்க்கமுடியாததல்ல, மறுக்க
முடியாததொன்று,
எவ்வண்ணம் விதை விழும்?
எவ்வண்ணம் முளைவிடும் ?
காரணம் சொல்ல முடியாது.
காற்றோடு காதல் சுவாசத்தில் நுழைகிறது.
எப்போது மனதில் வேரூன்றுகிறதோ...

அப்போது காதல் வெளிப்படையாகிறது
இதயங்கள் இடம்மாறும்பொழுது இடைவெளி
குறைகிறது.
ஒரே சுவாசத்தில் இரு ஜீவன்கள் ஊசலாடும்
பிரிவென்று ஒடிகின்ற இதழ் மரணத்திலும்
கொடியது
காதல் சித்தனுக்கு வராததல்ல...
பித்தனுக்கும் வருவது காதல்
புத்தனுக்கும் வந்திருக்கிறது...
வெந்து நொந்து நோய்வாய்ப்பட்டு
தனிமையை விரும்பி போதனை செய்தானே தவிர
மனித சுகத்தை அனுபவிக்காதவர் அல்ல.
புத்தனின் காதல் ஞானத்தை ஊற்றி வளர்த்தது.
பித்தனின் காதல் மரணத்திற்கு கூட்டிச் சென்றது.
காதலில் உடல் நகராமல் மனம் நகர்கிறது.
மனம் நகர்ந்து கால் நழுவுகிறது.
கால் நழுவி கதை மாறுகிறது
இதற்கு எச்சரிக்கை அடையாளம் கிடையாது.
விதியென்று முக்காடு போட்டு முழுநாளும்
புழுங்கித் தவிப்பவரே!
காதல் கண்களால் எடையளக்கமுடியாது.
எடையளந்து காதலிக்க முடியாது
காதலில் மண்டியிடக்கூடாது.
மண்டியிட்டால் மீண்டுவர முடியாது.
பெண்ணிடத்தில் அவள் புன்னகைக்கு
மயங்கினால்
உன்னகத்தில் தன்னலத்தை விரும்புவாள்.
மூழ்கித் தத்தளிப்பவன் வாழவின் வகை மறந்தவன்
காதல் வாழ்க்கையெனும் கடலைக்
கடைந்தெடுக்கும் மத்து.
இதில் பித்துக்கொண்டால் யாவும் பற்றறுந்து
போகும்
இதில் பற்றுக்கொண்டால் தொட்டதெல்லாம்
துலங்கும்.

என் ஊரைப்பற்றி

என்னைப்பற்றிப் பிடித்தவை என் ஊர்க்கிராமம்
பருவப் பெண் பாவாடை கட்டி
பச்சைவர்ண தாவணி போட்டால்
சித்திரை வெய்யிலிலும் சிணுங்காதவள்போல்
பாறையிலும் வேர் ஊன்றும் பசுமை நிறைந்த ஊர்
கைதடி நீர் பிடித்த தரை எல்லாம்வேர்பிடித்தகாடு.
வீம்புக்கென பனைமரங்கள் தலைநிமிர்ந்து நிற்கும்.
விருட்சத்தில் விழுதூன்றி ஆலமரம் ஆடும்.
கொள்ளையில் தென்னங்கீற்று
ஊர் கதையைப் பேசும்.
கோடை வெய்யில் தரைபிளந்து
கானல் நீர் பெருக்கெடுத்து ஓடும்.
கடல் அலை துவண்டு தசைவறண்டு
உப்புக்கல் கண்சிமிட்டும்
தரைபோர்த்த புல் வாடிவிட
காட்டுக் கள்ளிப்பால் சொரியும்.
எருக்கலையும் புடைப்பெடுக்கும்
உச்சி வெய்யில் தலைக்கேற
உடல் வேர்த்து உப்புக்கைக்கும்.
உழைப்பாளர் வற்றாத வேர்வை
தரைவிழுந்து வேர்வைக்கும்.

ஓலை

மாரிமழை கொட்டுகையில்
ஏரிகுளம் நீர் பிடிக்கும்
வறண்ட கடல் தரை எல்லாம்
அலை புரண்டு பாட்டிசைக்கும்.
பாலை மீன் கெழுத்தி எல்லாம்
அங்குதான் படை எடுக்கும்.
கொக்கு, நாரை, கடல்காகம் எல்லாம்
தம் விடுமுறைக்கு வந்துபோகும்.
கரையோர தாழை எல்லாம்
பொட்டுடைத்து பூத்துநிற்கும்.
காற்றினிலே கீற்றெறிந்து
ஈஞ்சு பாளை தள்ளும்.
பூவிரிக்கும் காட்டில் உள்ள செடி கொடிகள்
மொட்டவிழ்ந்து பூமலரும்.
கால்நடைகள் மண்டியிட்டு
குளக்கரையில் நீர் பருகும்.
வேடிக்கைக் கதைபேசி
குருவி எல்லாம் கூடுபின்னும்
காட்டு முயல் கூட்டம் எல்லாம்
சோடி கட்டிப் புல் மேயும்.
தேனி சேகரித்த தேன் எடுத்து
மரப்பளுவில் கூடுகட்டும்.
ஊர் முழுக்க வண்ண நிலாபட்டாம் பூச்சி
சிறகுலர்த்தி பறக்கும்.
மழைநீரை நம்பி உழுநிலங்கள் காத்திரும்.
உலர்நிலத்தை நம்பி நின்றால்
கோடிபல அது கொடுக்கும்.
ஏர்பிடித்து தோற்றவங்க ஊருக்குள் இல்ல.
வேர்வைக்கும் அதன் உண்மைகளைக்
கண்டவர்க்கு பஞ்சம்பசி இல்லை.

மாலையிலே வீடுவரும் மடிநிறையப் பால்தரும்
ஆடுமாடு கோழி எல்லாம் குடும்பத்து உறவு
சொல்லும்.

பகல் இரவாய் காவல் நிற்கும்
பறன் ஏறி எலிபிடிக்கும்.
பூனை நாய் இரண்டும்
எம் ஊர் உள்ள சொத்து.
ஊர் கூடிக் கதிர் அறுப்போம்.
காற்றடிக்க தூற்றி வைப்போம்.
ஒற்றுமையாய் நாம் இருந்தோம்.
ஆடுகால் துலா மிதித்து தவணைமுறை நீர்
இறைச்சு வரப்புயர நாம் நிமிர்ந்தோம்.
ஆனந்தத்தில் மிதந்தோம்
ஊர் எல்லையிலே கோவில் உண்டு.
அவன் கருணை என நாம் உணர்ந்தோம்.
வயல்காட்டில் விளைந்ததெல்லாம்
ஆடியிலே பொங்கல் வைத்து
ஊர்கூடித் தேர் இழுப்போம்.
தேர் அசைந்து தெருவில் வர,
ஊர் கொள்ளை கொள்ளுமே
காவடிகள் ஆடிவரும்.
வாத்தியங்கள் முளங்கிவரும்.
தீச்சட்டி பால்செம்பு பயபக்தி பணிவோடு
பாவாடை தாவணியில்
கன்னியர்கள் கூட்டம் வரும்.
மஞ்சத்துத் திருவிழா மனசெல்லாம் பறிபோகும்.
மயில் ஆடும் சோலை அது.
கற்பனையில் கண்டதில்லை.
அப்படியோர் பேர் அழகு.
காற்றலையில் மனம் கரையும்.
எனக்குள்ளே உருக்குலைந்தேன்
என் பள்ளியிலே பார்த்தவளோ
இன்று தாவணிக்குள் வந்தவளோ
என் ஊன் உறக்கம் பறித்துவிட்டாள்.
என் உயிரை வறுத்தெடுத்தாள்.
இரட்டை ஜடைப்பின்னலில் உச்சி
வகுத்திருப்பாள்.

நெத்தி கூசும் புருவம் - பக்தி தரு விழிகள்
கத்திமுனை மூக்கு அரிந்து வைத்த கனியோ?
கத்தாளைப்பழமோ அவள் செவ்வாய்
செம்மாதுளைக் கன்னம் அதில் - பல்லாங்குழி
மொத்தத்தில் அவள் மார்கழி நிலவு
அச்சத்தை உடுத்தி நாணத்தை வளர்த்து
வெக்கத்தை விதைப்பாள்
என் பக்கத்தில் நினைத்தேன்
பரிசத்தில் தவித்தேன்
என்மேல் பற்றுவைத்தேன்
அவள்மேல் காதல் வைத்தேன்
யாருக்கும் தெரியாமல்
நெஞ்சுக்குள் பொத்திவைத்தேன்.
கண்மூடித் தூங்கவில்லை
காலம் எங்கோ ஓடியது
பெண்ணே இன்னும் நீ பத்திரமாய்
நெஞ்சுக்குள் இருக்கின்றாய்.
சொந்த பந்தம் எல்லாமே
ஊருக்குள் என்றாச்சு
வடக்கென்றும் கிழக்கென்றும் வேறுபாடு இல்லை
ஒருதாய் பிள்ளைகளாய் உயிராய் இருக்கிறோம்.
ஊர் வம்பு வந்ததில்லை
எவர் வம்புக்கும் போனதில்லை
வீண் வம்பிளுக்க வந்தவங்க
உயிர்தப்பிப் போனதில்லை.
நாம கற்றறிந்த பாடம் எல்லாம்
சத்தியத்தின் சோதனைகள்.
ஊர் எல்லைகளை நாம் மறந்து
நல் கொள்கையோடு வாழ்வதற்கு
பள்ளி அறை சொல்லித்தந்த பாடம் எமக்கு
உண்டு.
வட்டாரப் பள்ளிகளிலும்மாற்றுத் திறனாளிகளும்
நலன் குறைந்தோர் விடுதிகளும்
சிறுவர் காப்பகமும் பொது நூல் கூடங்களும்

ஆயுள்வேதமும். அரசினர் வைத்தியமும்
பனந்தொழில் கூட்டுறவும் வர்த்தக நிலையங்களும்
கைத்தொழிற்சாலைகளும் பரஸ்பரம் பலன்
அடைய வளம்பல நிறைய உண்டு
என்னென்னவோ பல நினைவு கண்முன்னே
வந்துவிழும்.
சொல்லாமல் சொல்ல உடல் சிலிர்க்கும்
கண்ணுக்கு எட்டும் தூரம் காட்சி தந்து
அரங்கமைக்கும்.
புயல் வந்து போனதுபோல்
ஊர் அழிந்து போனதின்று.
தேர் விழுந்து தெருவில் வந்து
கால் உடைந்து நின்றதிங்கு.
வாய்விட்டுச் சொல்லியழ
வரமுறை தெரியவில்லை.
ஒப்பாரி பாடக்கூட துப்பறிய கூட்டமுண்டு.
எப்படித்தான் வாழ்வதிங்கு.
கறையான்கள் கூட்டுக்குள் யார்வருவார்.
யார் அறிவார்.
பாம்புக்கு முகம் காட்டி மீனுக்கு வால் காட்டி
ஆட்காட்டி கூட்டத்தில் நாம் யாரென்று
புரியாமல்
அடைகாத்து வாழ்கின்றோம்.

நிலவும் மதியும்

துவளும் மனம் துடிக்கும் தினம்
தூயவளே உன்னை துருவமாய் எண்ணி
தூங்காமல் துதிபாடும் தூயவன் நான்
துளசிப்பூவே துறந்துபார் நெஞ்சை
தூசித்துவளாய் துவழ்ந்து கிடக்கும்
உன் துருப்பிடித் நினைவு
தூறல் தந்து துவட்டிவிடு
தூது சொல்லி தூங்கவிடு
தூதுக்கு தூதை தூதர்தான் யாரோ?
தூரத்து நிலவை துருவிப்பார்த்தேன்
தூறல் மழையில் உலவிப்பார்த்தேன்
தூசி மேகம் துலக்கிப் பார்த்தேன்
தூய்மை துவண்டு கிடக்கு
தூரத்து நிலவும் நான் துணை கொண்ட மதியும்
நேருக்குநேர் இனி...

நதி

மலை முகட்டில் பிறப்பெடுத்து
தரைதழுவி தவழ்ந்து வரும் நதியே
உன் குலத்து கோத்திரம் என்ன?
உயர்விடத்தில் பிறந்ததினால்
உனக்குள்ளும் தாழ்வினை உண்டோ?
மானிடர் நம் இனத்தினிலே
உயர்வென்றும் தாழ்வென்றும்
ஒற்றிணையார் கூட்டம் உண்டு.
அவர்பாட்டை எண்ணும்போது
பரிதாபம் தோன்றுதடி
நதியே உன் கதை எப்படி?
பிறந்த உடனே நடக்கத் தொடங்குகிறாய்
பாறைகளிலும் குதித்து ஓடுகிறாய்.
தாழ் நிலங்களை விரும்பித் தேடுகின்றாய்.
சாக்கடையை அடித்து விரட்டுகிறாய்.
வயல்வெளிகளை நிரப்பி ஆற்றுகிறாய்.
காடுகளை குளிர்ச்சி ஊட்டுகிறாய்.
மானிடரின் சோகம் நீக்குகின்றாய்
கால்நடையின் தாகம் நீக்குகின்றாய்.

பட்சிகளை நானும் காதலித்து
கால் கடுத்து நானும் நின்றதில்லை.
அலை அடித்து பாதை நான் திறப்பேன்
யாரிடமும் வஞ்சம் எனக்கு இல்லை.
தாழ்நிலத்தில் தவழ்ந்து ஓடிவர
கடல் அன்னை என்னை வாரி அணைக்கின்றாள்.
நான் மலை முகட்டில் பிறந்ததினால்
வான் முகில்கள் குடிப்பதில்லை
வந்து முகம் துடைத்துச் செல்கிறது.
தரை ஓடி கடல் சேர்வதினால்
அதன் சுவைதேடி முகில் ஓடி குடிக்கிறது.
நதியே உனக்கு அகந்தை உண்டா?
இருந்தால் தரைதொட்டுத் தவள்வேனா?
நதியே உனக்கு கோபம் உண்டா?
இருந்தால் தரைதொட்டுத் தவள்வேனா?
நதியே உனக்குக் கோபம் உண்டா?
இருந்தால் உன் பாவங்களைக் கரைப்பேனா?
நதியே உனக்கேதும் ஏக்கமுண்டா?
என்னை வேண்டுவோர் எண்ணம்போல
சேர இந்த வையகம் யாவிலும்
ஓட தினம் எழிற் பச்சைகள் எனக்கண்டு வாழ
நதியே இந்த வையத்தில் நீ கண்ட சுகம் என்ன?
ஏழை விவசாயி எனைக் கண்டு சிரிப்பானே
காட்டு விலங்குகள் எனைத்தேடி வருவீரோ
தாய்மை பெயர் சொல்லி தன்பாவம் கரைப்பீரே
மானிடர் நாம் நதிக்கரையில் நீந்தையிலே
சஞ்சலம் நீ பட்டதுண்டா
இல்லை நானும் உங்களில் ஒருவன்
என்னுள் ஆனந்தம் பொங்கிடும்
பெண்கள் நாணத்தைக் கண்டதும்
வெட்கம் எனக்குள்ளும் வந்திடும்.
அவர் அந்தரங்கள் ஏதும் கண்டதுண்டா
நான் பெண் நீ கேக்கின்ற கேள்விதான்
நல்லதுண்டா?

பாவத்தைக்கண்டு நீ சினந்ததுண்டா
இங்கு பாவி நான் இல்லை என்பேன் யாரும்
உண்டா?
நீ நெஞ்சு நொந்து அழுததிங்கு ஏதும் உண்டா?
என்னை கட்டிவைத்து ஒருவர் தன் சொத்து என்று
சொந்தம் கொள்ளவந்தவரை நொந்ததுண்டு.
ஆனால் பாவம் பழி தீர்ப்பதில் என் எண்ணம்
இல்லை.
நதியே கடலோடு ஏன் சேருகிறாய்.
ஏன் பயன் அற்றுப் போகிறாய்.
மனிதா நீ இறவாமல் வாழ்ந்ததுண்டா
இல்லை உன் இளமைதான் நிலைத்ததுண்டா
முன் ஜென்மம் அறிந்ததுண்டா
நீ மறு பிறவி எடுத்ததுண்டா இதில்
எது உண்மை அறிந்ததுண்டா?
எனக்கருகிலே கேள்விமூட்டி
நதி அடக்கத்தோடு நடந்தது
மறுத்துப் பேசமுடியாமல்
நான் மௌனித்து நின்றேன்.

மரம்

நடமாடத்தெதிந்திருந்தால்
ஐநாவின் படி ஏறிப் போயிருக்கும்.
அறைகூவத் தெரிந்திருந்தால்
ஆள்பறிப்போர் பெயர்சொல்லி அழுதிருக்கும்.
அசைந்தாடும் மரம் அது
இயற்கைக்கும் மனிதனுக்கும்
இசைந்தாடவேண்டும்
பூமிச் சுழல் பற்றி எத்தனையோ அற்புதங்கள்
படைத்தான் இறைவன் மனிதனுக்கு பொக்கிசமாம்
பிரித்தான் மனிதன் பலநூறு பக்குவமாய்
அதில் மரமே பெரும்பங்கு
உயிர்மூச்சுக் காற்றுமுதல் உடல் வெந்து
வேகும்வரை மரம்தான்.
மனிதன் மறந்தான்
காடு நகரம் ஆச்சு
நகரம் மழைவிளமறுக்கும் நரகமாச்சு.
ஏரி குளங்கள் எல்லாம் தரிசு நிலம் ஆச்சு.
மாரி மழையின்றி வாழ்வு பொய் ஆச்சு.
மறந்தாய் மனிதா
மரம்தான் வாழ்வின் அடுத்த சந்ததி
நீ உணர்ந்தால் ஊற்று இன்று ஒரு செடி
மரத்தால் மனிதனுக்கு அழிவில்லை
மனிதனால் மரத்துக்கு அழிவு.
ஆனால் இம் மண்வாழ்வு உயிருக்கு அழிவு.
மரம் இவ்வையத்து உயிர்க்கெல்லாம் வரம்
வேற்றுமைகள் இல்லாத இனம் மரம்.
நடமாட முடியாமல் அசைந்தாடும் உயிரினம்.
காலநிலை மாற்றத்தை தோழில் தாங்கிடும்.
மாதம் பன்னிரண்டும் பருவங்கள் பலவாய் உண்டு.
பருவப் பெயர்ச்சியினால் பலதும் பல உண்டு.
இனங்கள் வரிசையிலே நாளும் பலன் உண்டு.
இயற்கை தந்த கொடை.

நம் உடலுக்கு தீங்கில்லை.
மனிதா உன் மனதில்
ஏன் இன்னும்தான் புரியவில்லை?
காற்றில் அசைந்து நல்சுவாசம் தருகிறது.
மகரந்தம் தாங்கி புத்திளமை தருகிறது.
முளையில் அற்ப நீர் கொடுத்தால் போதும்.
பாறைக்குள் வேர் துழைத்து
மண்ணுக்குள் தேக்கிடுமே!
திகட்டாத கனிதந்து மண்ணையும் காத்து நிற்கும்
வெட்டினாலும் வெட்டினவர்
மறுபடியும் வேரிலும் முளையிடும்.
மரத்திற்கான பண்பு இது.
மனிதா உன் கால், கை வெட்டுண்டால்
முளைக்குமா?
உன் கால்கை தலைமுடியும் விரல் நகமும்
உன் வரவுக்கில்லா செலவு.
மரம் உதிர்க்கும் இலைகளை வீழ்ந்த
இலைச் சருகெல்லாம் பசளை என ஆகும்.
மறுபடி தழைக்கும் பூவோடு காய்க்கும்.
உதிர்ந்த முடி முளைத்ததுண்டா உனக்கு?
எதற்கு இந்த அகம்பாவம்?
மரம் மரம் என்று வீணாய் போனவரை
ஒப்பிட்டுப் பேசாதே!
மரத்தின் ஒரு பங்கு கூட உன்னால் முடியுமா?
மரம் மனிதனுக்கு முற்றுக்கும் முதலான மூலம்.
பூச்சிகள் கட்சிகள் - காப்பரண் ஆனது
மரம் கால்நடை மிருகங்கள் வாழ்க்கைக்குப்
பயன் ஆனது மரம்.
மானிடர் வாழ்வினில் சாவிலும் கூடவே நிற்பது
மரம்
உயிருக்கு சுவாசம் உடலுக்கு ஆடை
வயிற்றுக்கு உணவு காலுக்குச் செருப்பு.
உடல் நோய் உற்றபொழுது
கைநாட்டு மருந்து

அறிவுக்கு நூல் எழுத்தறியும் பென்சில்
சோர்வுக்கு நாற்காலி
படுக்கைக்கு கட்டில்
பிள்ளைக்கு தொட்டில்
வாழ்க்கைக்கு வீடு
வசதிக்கு எல்லாம் மரம்தான் வரம்
வண்டிக்கு சக்கரம் கோவில் கொடிமரம்
தேரும் சப்பறமும் பாடை பல்லக்கும்
சவப்பெட்டி கூட மரம் தான்.
உயிர்விட்டு போனதும்
உடல் சுட்டுப் போடவும் மரம்தான்.
உடல் கெட்டால் உயிர் ஊசல் ஆடும்.
உன் உறவுக்கு நீ பாராமாகும்.
மரம் பட்டால் வளை தாங்கும் தூண்கூட ஆகும்.
எழில்மிக்க பொருள்கூட ஆகும்.
நாரில் கயிறு கிளைதாங்கும் விழுது.
மனிதா உன் கை உடைந்தால் உனக்கேது மறுகை
உறவு?
மரம் பிறப்பால் உயர்வு
அதன் குணத்தால் உயர்வு
மனிதா மரத்தைப் பார்த்து நீயும் பழகு.
நாடும் நகரமும் செழிப்புற வாழ
மன்னனும் மக்களும் மகிழ்வுடன் வாழ
மும்மாரி தூவி வயலும் வரப்பும் உயர்ந்தோங்க
பிணியும் பஞ்சமும் ஒழிவுற்று வாழ
கோட்டையும் கொத்தளமும் முரசு
கொண்டோங்க
கல்வியும் செல்வமும் செழிப்புற்றுயர
வரும் சந்ததி இங்கு நல் உளம் கொண்டுவாழ
இவ்வையகம் தன்னில் மரம் வாழவேண்டும்.
நம் இனம் வாழவேண்டும்.
நடு முற்றத்தில் மரம் ஒன்று வைப்போம்.
அதை எம் உயிர் எனக் காப்போம்.

என் முகவரி

கவிஞன் என் பெயர்
கற்பனை என் ஊர்
எழுத்து என் தொழில்
விலைமதிக்க முடியாத படைப்பில் நான் பிரம்மன்.
எழுத்துக்கூட்டத்தை அழைக்கிறேன்.
அதில் தெரிந்து சொற்களைக் கோர்க்கின்றேன்.
வலிந்து பூர்ந்தது சில
வகை அறிந்து பூத்தது பல.
அரிது அரிது நான் தொட்டது அரிது
பெரிது பெரிது என் தாய்த்தமிழ் பெரிது
அதை பருகும் எனக்கு கிடைத்த பேறும் பெரிது
முப்பாலும் முறை சேர நான் குடித்தது அரிது.
எல்லோர்க்கும் பொருள் குன்றா
என் தாய்த்தமிழ் பெரிது.
அப்பாவை எனக்கீன்ற
தமிழ்தாய் கருணை பெரிது.
இவ்விம்பம் (இன்பம்) நான் காண
என்முன் வினை அரிது
அந்த ஆரூரான் வினை என்றால்
நான் ஏற்பது பெரிது
இவ்லோகத்தில் நான் செய்த
நல்வினை அரிது
என் நாசிக்கு நலம் தந்து
நான்முகன் துணைநின்று போதிக்கும்
என் தமிழ் பெரிது.
எப்போதும் அறம்சாய குடியார்க்கும் குரல்
ஆன தமிழ்
என் வாழ்க்கையில் பெரிது.
ஆயர்க்கும் அவர் பாவைக்கும் வேர்வைக்கும்
விருட்சத்தின் வழுதி தமிழ்.
வேற்று முதலான ஈசனுக்கும் சாபத்து மருந்து.
அதை நான் பாட என் பூர்வத்தில்
நான் பெற்ற வினைதீர்க்கும் கனிச்சாறு.

ஊர் பார்க்கப் போறேன்

புழுதி குழித்த தெருவும் பூவரசு அருகும்
கள்ளி கத்தாழை நெருஞ்சிமுள்ளுக்காடும்
ஆடு மேய்ந்த திடலும் ஆழும் அரச மரநிழலும்
அலைபுரண்ட கடலும் தாளையடி விழுதும்
என்னைத் தேடுகின்றதே!
அதனால் நான் ஊர் பார்க்கப் போறேன்.
கொல்லையிலே காய்த்த கொய்யா
கொழுந்தெறிந்து பூத்த பலா
சொல்கையிலே நாஊறும்
கறுத்தக் கொழும்பான் மா.
எண்ணுகையில் என் முன்னே நிழல்
வந்து போகுதையா
அதை எல்லாம் நான் காண
ஊர்பார்க்கப்போகின்றேன்.
திண்ணப் பள்ளி என்று மாலையிலே ஒரு படிப்பு
பள்ளிக் கல்வி என்று வாரம் ஐந்தும்
தினம் படிப்பு என்ன படிச்சென்ன?

என்மர மண்டையிலே ஏறலையே.
என்றும் படிக்க எண்ண நேரம் வந்து சேரலையே
பள்ளிக் குந்துகளில் மாங்காய்ப் பிசுரெடுத்து
என்னென்னவோ எழுதிவைச்சோம்.
இன்றும் இருக்கா என்று பார்த்துவர
ஆசைவைச்சேன்.
அந்நாள் நினைவுகள் நெஞ்சோடு சுமத்திவைத்து
ஊர் பார்க்கப்போறேன்.
ஈச்சம்பாழைப்பிஞ்சு நாம் திண்ட நினைவிருக்கு.
கொள்ளையிலை ஒத்த பனம்பழம் பொறுக்கிச்
சுட்டுத்திண்டு
ஊர் எல்லை தென்னைமரம் அதில்
சிறுகுரும்பை கூட விட்டதில்லை.
எம்ம அதட்டி பேச அங்கை எவர் கூடவந்ததில்லை
ஊருக்கு நல்லபிள்ளை.
வீட்டுக்கு உதவாக்கரை
வெட்ட வெளி வெய்யில் உச்சம் தலைசுட
காலுக்கு செருப்பும் இல்லை.
மேல் சட்டை எதுவும் இல்லை.
நூல் பட்டம் விட்டு நாம் கருவாடு ஆன கதை
எப்படித்தான் நான் மறப்பேன்.
நினைவுகள் சுமந்துவர ஊர்பார்க்க நான் போறேன்.
மாதம் எல்லாம் பண்டிகை
நாள் முழுக்கத் திருவிழா
பஞ்சம் பறண்கட்டி இருந்தாலும்
நெஞ்சுக்கது தெரிவதில்லை.
ஓலை குடிசையிலை கூழ் கஞ்சி குடிச்சாலும்
அயராத தூக்கம் வரும்.
அடுத்தவேளை ஏக்கம் இல்லை.
கை ஏந்தி வாழ்ந்ததில்லை.
படிச்சவங்க நாலுபேரு
எம்மை ஏச்சுத்தான் பிளச்சாங்க.
கூலியாய் நாம் இருந்தும்
கூறுகெட்டுப் போகேல்லை.

ஓலை

சொந்தங்களை விட்டுவந்தேன்
என் ஊர் பார்க்க நான் போறேன்.
வருஷம் பல ஆச்சு
என் பைங்கிளியைக் காண்பேனோ?
தலைகால் புரியாமல் தவிக்க என்னை விட்டவளே!
வயசு பதினெட்டில் என் வாலிபத்தைத்
தொட்டவளே இனியவளே உன்னை எண்ணி
ஊர் பார்க்க நான் வாறேன்.
என் பள்ளியிலை நீ படிச்ச
புள்ளி மயில் நீ அங்கு
ஆனால் நெஞ்சுக்குள்ளை நான் நினைச்சன்
அதைச் சொல்லிக்கொள்ள நான் மறந்தேன்.
என்னவென்று நீ நினைப்பாய் - இனி
என்னவென்று சொல்லுவது?
உன் புன்னகையை நான் பார்க்க
அந்தக் கன்னக்குழிதான் பார்க்க
என் நெஞ்சுக்குள்ளே பொத்திவைச்ச
என் தேவதையை
நான் பார்க்க கார்த்திகையில்தான் போறேன்.
கண்டுகொள்ள நான் போறேன்.
பள்ளியிலே பார்த்தமுகம்
இரட்டைச்சடைப் பின்னலோடை
பிச்சிப்பூ சூடியிருப்பாள்.
பள்ளி அறை சீருடையில் வெள்ளை நிலா
போல் இருப்பாள். பட்டாடை கட்டி வந்தாள்,
பௌர்ணமிபோல் இருப்பாள். என்னமோ
தவிப்பிருக்கு திசைமாறிப்போயிருக்கு.
காலத்தை நொந்துகொண்டு கண்மணியை
கண்ணில் வைக்க ஊருக்கு வாறேனடி உன்னை
ஒன்று கேட்பதற்கு
பால் அருவிப் பள்ளியிலே
நான் படிச்ச வேளையிலே
பாட்டுச் சொல்லித் தந்த ரீச்சர்
பார்பதியை பார்க்கவேணும்.

குழிபறித்து குழிப்பந்து ஆடிய தோழர் எல்லாம்
ஊரிலதான் இருக்கார்கள்.
அவர் முகத்தப் பார்க்கவேணும்.
ஊர்க்கோவில் திருவிழாவில் பத்துநாள்
பெருவிழாவாம்
சப்பறத்தைத்தான் காண
அப்பதான் நான் போகவேணும்.
தேர் இழுக்கும் திருவிழாவில்
ஊர்ச் சனமோ வேல் முருகன் அழகைப் பார்க்கும்.
தேர் இழுத்து தெருவில் வர கூட்டத்தில் என்
மனம்.
நான் அவள் முகத்தை தேடிவரும் சந்தனப்
பொட்டு வைத்த சாமந்திப் பூமுடிச்சு பாவாடை
தாவணியில் அலுங்காமல்
குலுங்காமல் சுந்தரி வந்து நிற்பாள்.
என்பார்வைக்கு அவள்தானே.
அலைமோதும் பெருங்கூட்டம்
அந்நாள் நினைவோடு நிச்சயம் நான் வாறன்
அப்பாச்சி கையாலை திரளிமீன் குழம்பு வைச்சு
குத்தரிசிச் சோற்றோடை கத்தரிக்கா பொரியல்
சேர்த்து வாய்ஊறச் சாப்பிடனும்.

மழை

மரம் இல்லாத நிலங்களில் மழைவிழும்
மழையில்லாத நிலங்களில் மரம் இல்லை
இயற்கையின் ஜீவன் மழை
அதை விலத்திவைத்தால் பொசுங்கிப்போய்விடும்
மேகங்கள் உப்புச் சுவை கண்டவை
அதற்கு ரோசமும் உண்டு நேசமும் உண்டு
கோபமும் தாபமும் மழைக்குண்டு
அதனால்தான் எம் நிலம் தரிசாய் கிடக்கிறது.
மனிதா மரம் வெட்டி கதை ஒன்று கதைக்கிறாய்.
இல்லை
உன் வசந்தத்தை மண்ணோடு மண்ணாக்க
முனைகிறாய்.
வானம் பார்த்த பூமி ஓடு பிளந்து தாகம் கேட்டு
அழுகுது.
காலம் தாழ்த்தியும் கூடாத மேகம்.
எங்கு தொலைந்தது.
ஓடிவந்து கால் ஆறிய மேகங்கள்
மரக்கூடல் இல்லாமல் இடம்மாறிப் பேகாதோ?
கெடுவான் கெட்டழிவான் என்று ஒரு சாபம்
இட்டதோ?
இறைவா கொடுமை என்று உணர்ந்தோம்
பொறுமை கொண்டு கருணை செய்யும்
மானிடன் இயற்கைக்கு எதிர் ஆனவன் அல்ல
அவன் விசப்பரீட்சை அவனுக்கு வினை ஆகிறது.
வரமறுக்கும் மழைபோல் தரமறுக்கும் முகிலே
மனம் இருந்தால் கொடு இல்லையேல்
வறண்டு மண்டியிடும் பாழ்பட்ட மானிடம்
கொஞ்சம் பொறு பகுத்தறிவில்லா ஜீவன்கள்
என்ன பாவம் செய்து
மனிதனுக்கு ஒப்புறவானதால் இக்கெதியோ?
பாவம் என்னோடு எலிப்புளுக்கை காயுது.

காமம்

புணர்ச்சிகளின் உணர்ச்சிகளை கூட்டுவது காமம்
இடம்வேறு வகைவேறு கொள்வதும் காமம்
மனம்வேறு உடல்வேறு இணைபட்டுக்கொள்வது
காமம்
ஆண், பெண் இருபாலார்க்கும் பிணைப்புக்கும்
காமம்
இதை இறைவன் பற்றிப் பரவிட வைத்தான்
பெண்ணுக்கு பெண்ணும் ஆணுக்கு ஆணும்
இறைவன் நியாயத்தில் இல்லாத ஒன்று.
இதை நம் மானுடம் வெறுக்கும்
காதல் இல்லாமல் காமம் வரும்
மோகம் கொண்டு அது மூளும்; இடம் சூளும்
இடபாகம் கண்டு பரிதாபம்
மதியாலும் மனம்கூட இடம்மாறும்.
மடிசோர்ந்து நிலைமாறும் பாவம் இது.
முறையோடு வகைசேர நல் மகப்பேறு உருவாகும்.
பாவத்தின் உச்சிதான் இவ்வுலகம்
அதனால் மேன்மை நரகம்
பாவம் என்பதும் மோட்சம் என்பதும்
விழிப்பாகும் பொருளில்தான் உதயம்
காமத்தை அழகுபடுத்துவது இல்லறம்.
அதில் நல்லறம் ஒருவனுக்கு ஒருத்தி
நாகரீக மனிதனுக்கு அனாகரீகம் காமம்
இருப்பினும் அருகிருந்து வசம் கொள்ளாதவரை
யாவர்க்கும் அருந்தலின் விருந்து

சுனாமி

மதம் இனம் மொழி நிறம் என பாகுபாடு இன்றி
சுறுட்டிச்சென்றதே ஆழி அலை.
இதற்கு கட்டளையிட்டது யார்?
பித்தா பிறைசூடி நீ யா?
கர்த்தா கருணைக்கடலே நீ யா?
புத்தா ஞானரிசியே நீ யா?
அல்லா எல்லாம் ஆனவனே நீ யா?
எதற்காய் வாரிச்சுருட்டியது அலை...?
இது இயற்கையைப் பழி சொல்லும் கொலை.
எண்ணிலாக் கொலைகளைச் செய்த சுனாமி
ஏட்டிலே எழுதவொண்ணா துயரும்...
பாட்டிலே பாடவா முடியும்...?
நீதித்தராசில் நிறுத்தவேண்டும் பரமனை
ஒரு முறை
அலையோடு அலை ஓடி ஆண்டுகள் பல ஆச்சு.
அடங்காத ஆத்மாக்கள் அளவின்றிப்போச்சு.
சிசுபாலன் பிறப்பே அனுகூலம் ஆச்சு.
மதவாத நம்பிக்கை மண்ணாய்ப்போச்சு.

தெய்வம் பிறப்பெடுத்த காலம் இன்றில்லை.
அதனால் இயற்கையும் அரக்கர்போலாச்சு.
நாளுக்கொரு செய்தியாய் காவுகொள்கிறது
இயற்கை.

இதை காலம் பகைக்கிறதா இல்லை.
கடவுள் பகைக்கிறதா இயற்கை?
நம்பிக்கைதான் தெய்வம் என்றால்...
பார்க்கவும் பழகவும் பேசவும்
பதில் சொல்ல தெரியாத இறைவனிடம்
எதற்கு நம்பிக்கை?
பார்த்துப் பழகுபவனிடம் பேசிக்கொள்
பேச உகந்தவனிடம் நம்பிக்கை வை
அவன்தான் கைகொடுப்பான்.
அவன் தான் தெய்வத்துக்கு மேலானவன்.
எம் அறநூலும் இதையே சொல்லும்.
மன வளி சார்ந்தது தெய்வம்.
மனிதவளி சார்ந்தது தான் அதன் உருவம்.
விடை வேறு
விளக்கம் வேறு
இதை புரிந்துகொண்டால் நீ மனிதன்.

தேவன் பிறப்பிலே தேசம் அமைதிபெறாதோ?
ஓலம் எனும் அவலம் நின்றொழியாதோ.
பாவம் பழி தீர்க்க மீட்பர் வருவாரோ?
காலப்பெருவெளியில் யாராரோ வருகிறார்
ஏதேதோ புரிகிறார்.
யாதேனும் ஒருவர் எம் கண்ணீர் துடையாரோ?
எனும் ஆவல் கொண்டோம்.
அது ஆற்றாமல் போகிறதே.
காலமே உனக்கும் எமக்கு விரோதப் பகை
உண்டோ.

எதற்கு எம்மை சோதிக்கின்றாய்.
நாம் இழந்ததைச் சொல்லவா
இருப்பதைச் சொல்லவா.

எமைக்கண்டு வருந்தும் நிலையாக இயற்கைகூட
இல்லை.
மதங்களும் தம் மத தத்துவத்தை மறந்து
நிற்கின்றன.
இதில் தேவன் மகிமை என்பது
குதிரைப்பந்தயத்து சீட்டு
பணம்போல் வரலாம் வராமலும் போகலாம்
ஏன் என்றால் உன் தட்சணை எவ்வளவோ
அவ்வளவே அதன் பரிவர்த்தனையும்
மனசாட்சி இல்லாமல் மத ஆட்சி அதில்
யார் முளைத்தென்ன வெறும்
காட்சிப்பொருள்தான்.
மனிதநேயமும் மன சாட்சியும்
அழிந்துதான் போகும்.
மனங்களே மதங்களை வதம் செய்யுங்கள்.
அப்பொழுதுதான் இறைவன் மனிதனை
இச்சிப்பான்
அதுவரை உங்கள் அறியாமை கண்டு
அவன் அறியாமல் இருப்பான்.
இறைவன் வருகை தேதி குறிப்பிடப்படவில்லை.
இவர்தான் இறைவன் ஏற்றுக்கொள்வதும் இல்லை.
இங்கு எவர் வந்தால் என்ன
நாம் இங்கு நாமாக இல்லாதபோது...

பனை

அத்திசையில் ஒரு மரம்
வயல் காட்டின் பனைமரம்
கொத்துக் கொத்தாய் குலை தள்ளி
வட்டுவரை காய்க்குமே
ஊர் வாசலில் நின்று பார்க்க
ஊர் எல்லைவரை எட்டுமே.
பழுத்த பனம்பழம் பொறுக்க
அடுத்தூரார் காத்திருப்பார்
பொல்லாத கதைகட்டி
அங்கு பேய் உலாவுதென சொல்லிவச்சார்.
என் ஊரின் நரியர் அப்பா
அந்தப் பழம் பொறுக்கிச் சுவை கண்டார்
அதற்காகக் கதை அளந்தார்.
ஆடுமாடு போனாலும் அது அடிக்கும்
என்று பக்குவமாய் வளர்த்தார்.
வயல்காட்டில் விதைக்கையிலே வரப்போறம்
அடுப்பு வைச்சு கெண்டைமீன், கெழுத்தி மீன்
குஞ்சுத்திரழி பிடிச்சுவந்து அங்குதான் கூழாக்கி
பனை ஓலை பிளாக்கோலி பரிமாறினோம்.
அந்த பதமான நினைவோடு தினம் ஏங்கினேன்
பூரணை நிலவெறிக்க நெல்
சூடுகட்டி பதர் அகற்றியதும் அங்குதான்
ஒற்றைப்பனை கள் இறக்கி
கக்கத்தில் ஒழிச்சுவைத்து
என் கூட்டுத் தோழருடன் நாம் குடிச்சோம்.
தேன் அமிர்தம் தோற்றுவிடும்.
அந்த ஒற்றைப்பனை கதைபேசும்.
பல ஞாபகங்கள் மீண்டுவரும்
நாகதாழி பழம் பறிச்சு நடுமுள்ளு கைகிழிக்க
என்வீட்டில் அப்பம்மா ஒப்பாரி வைப்பாள் என்று

நாள் முழுக்கப் போகாமல்
பனை நிழலில் படுத்திருந்த நினைவெல்லாம்
ஞாபகம்.

என் நண்பன் உயிர் குடித்த
கருங்குளவி கூடு அங்கு கனவிலும் விரட்டியது.
அறளை பத்திப்போன காடு
காரமுள்ளு இலந்தை என்று
நிழல் ஒதுங்கக்கூட அங்கினை இராது.
அந்த பொட்டல் காட்டில் பனைமரம்
வயல் ஓரச் சாரலின் பொக்கிசம்.
செல் அடி பட்டுதோ இல்ல போரால பட்டுதோ.
ஊர் சுற்றிப் பாக்கையில் உடைந்து விழுந்தது
என் உறைந்துபோன மனசு
யாழ் மண்ணை அழகூட்ட பனைக்கூட்டம்
போதுமே.

சிதைவடைந்த கோபுரம்போல்
யாழ்ப்பாணம் ஆனதே.
இங்குள்ள சந்ததிக்கு அதைப்பற்றி என்ன தெரியும்?
கலாச்சாரம் மாறியது
களியாட்டம் கூடியது.
அதன் வலி இருக்கும்.
எதைச்சொல்லி ஆற்றுவது
யாழ்ப்பாண தமிழனுக்கு பனைமரம்
சொல்லி பட்டம் உண்டு.
பட்டமரம்போல இங்கே
எம் அடையாளம் போனதெங்கே?
எல்லாளன் கதை எல்லாம்
அலை அடித்துப்போனதெங்கோ?
சொல்லாத கதை எல்லாம்
உன் மனதில் வடுவாச்சு.
வெறும் கருவாடு கிடைத்தாலே போதும் என்று
ஆயாச்சு.

சுவை எதற்கு பதம் எதற்கு
பசி ஆறிக்கொள்வோம்.
ஒரு காலம் எமக்கு வரும் என்று
நம்பிக்கையில் வாழ்வோம்.

பொய்யான காதல்

கந்தல் என்று கசக்கிவைத்தேன்
கொடி பந்தலில் காயவைத்தேன்
காற்றிழுத்துப் போட்டதடி
முள்ளிருந்த பூவில் சேதம்
அந்தச் சேலைக்குத்தான்.
நானும் அந்தக் கோலத்தில்
யாரு செய்த குற்றமடி
அவன் கோவலன் ஆகிவிட்டான்.
நான் கண்ணீரை ஓடவிட்டேன்.

அந்தியில நிலாக்காய்ந்தோம்.
பந்திகூட்டி வைக்கவில்லை.
கண்டகான அத்தனையும்
பகல்கனவாய் ஆனதடி
சப்பறத்தில் கட்டிவைத்த
அடி வெட்டிவிட்ட வாழையடி
நான் குருத்தெறிய என்ன செய்ய
என் அடி அழிந்து போச்சு.
காதலுக்குக் கண் இல்லை
என் கண்ணுக்குள்ளை காதல் வந்து
கண்டதெல்லாம் பாலாச்சு
அடிமரத்தில் இறக்கிவைத்த களனித்தண்ணி
கல்லாச்சு.

என்விதியை யார் நினைத்தார்.
என் பாதை இருட்டாச்சு.
கன்னி நான் வேகிறேன்
காதல் இட்ட தீயிலே

பெண்ணே நீ பத்திரம்

காதலிக்கச் சொல்லி என்னை
கைநனைக்க எண்ணிவிட்டாள்
கைப்பிடிக்க எண்ணாமல்
கைகழுவ எண்ணிவிட்டாள்
சேற்றில் விளக்கிக் கால்கழுவுதல்போலப்
பெண்கள் தம்மை எண்ணிவிட்டான்.
பெரும் கவிஞன் பாரதிக்கு
இடறுதலை தந்துவிட்டான்.
காதல் என்ற சூத்திரத்தில்
பெண் போதைப்பொருள் ஆகிவிட்டாள்.
கயவர்கள் கூட்டத்தால் காதல்
கொச்சை என்று ஆக்கிவிட்டார்.
கன்னிப் பெண்ணே பத்திரம்.
காதல் ஓர் அஸ்திரம்
உன் பெண்மை தன்னை காப்பதற்கு
கற்றுக்கொள்ளு ரௌத்திரம்

மாயைக்குள் வீழ்ந்த மனம்

அற்ப ஆசைக்கு குப்பை கொட்டி.
ஆற்ற ஆள் இன்றிவிழுகின்றதே மனம்.
உன்னை நீ அளந்துபார்க்காத போது
தனிமைக் கொடுமை கொஞ்சம் சுறண்டிக் கொள்
உள்மனதில் ஞானம் பிறப்பெடுக்கும்.
ஒவ்வொரு பொழுதும் ஒவ்வொரு நொடியும்
வீண் அல்ல
காலம் உன்னைக் கேள்வி கேக்கும்
கசங்கி அழமுடியாது.
விதி சமைத்தவன் விவேகம் கொண்டவன் அல்ல
மதி இருந்தால் அலசிக்கொள்.
விவேகம் உன்னில் செத்துவிட்டால்
விதியைச் சாடுவாய்.
விதி வாழ்க்கையின் எல்லைக்கோடு
மதி அதன் எல்லைக்குள் ஓடும்போது
எவ்வாறு பாதை தப்பும்.
மூடத்தனம் மூச்சுமுட்டிக் கிடக்கும்போது
சிற்பம் கூட கற்பம் தரிக்கும்.
கோட்டான்களும் தேவாரம்பாடும்
மனம் பகுத்தறிய வேண்டும்
இறைவன் படைப்பை மனிதன்
வகுத்தறியவேண்டும்.
தொல்லை இன்றேல் தேடல் இல்லை.
தேடல் இன்றேல் ஞானம் இல்லை.
ஞானம் இன்றேல் யாவும் இல்லை.
அத்தியாயப் படிநிலையானது
மனிதன் வாழ்வு
காலத்திற்கேற்ப காட்சிகள் மாறுகின்றது.
அதன்படி பக்குவமும் கூடுகிறது.
வயது நகர்வது எப்படியோ
அப்படியே வாழ்வும் நகர்கிறது.
அடுத்த அடுத்த படிமத்தை சேர்க்கின்றது.
பாதை அறிந்த கால்கள் போகின்றன.

பழகிக்கொண்டா வாழ்க்கை தொடங்குகிறது.
முடிவறியா பயணம் முடியும் நாள் அறிந்தால்
அடிமனதும் திணறும் அடிக்கடி மழுங்கும்
ஒவ்வொரு நாளும் வசந்தம் தேடு.
முடிந்தநாளை செலவிடு.
இனிய நாளை நுகர்ந்திடு.
நாளை எதுவோ திடப்படு
எல்லாம் உன் வசப்படும்.
கண்ணீர் விற்கவும் வாங்கவும் முடிவதில்லை.
அது உனக்கு மட்டும் சொந்தம்.
தேவைக்கு மட்டும் சாயும் போக்கு
கல்லையும் கரைக்கும் அரிய அஸ்திரம்.
இறைவன் மனிதனுக்கு என்று தந்தான் சிரிப்பை
மரங்கொத்தி மனம் படைத்த மனிதன் -
நிலைபார்த்து வானரங்கம் சிரிக்கிறது.

பூ அதரங்களில் தேன் எடுக்கும் தேனி
அதை ஏன் கூட்டில் சேர்க்கிறது
நாம் எடுக்கவா தான் குடிக்கவா?
ஊதியம் இல்லாமல் சேவகம் செய்யும்
தேனீக்கள் பாதகம் நினைப்பதில்லை.
ஊதியம் பெற்றும் நாம் ஊழல்களில்
உடந்தையாகின்றோம்.
ஜீவ அறிவாற்றல் கொண்ட நாம்
பிற ஜீவனைக் கொல்லும் அளவுக்கு
சுயசிந்தனைதான் ஒங்கிவிட்டது.
ஒன்றைத் தின்று ஒன்று வாழும்
மாமிசப் பட்சிகளில் தன் இனத்தைக் கொன்று
வாழும் மனிதம்

வாழ்க்கை உயர்வு என்பது
நீதி செத்து நேர்மை கெட்டு
உண்மை இங்கு ஊசல் ஆட
கண்ணைக் கட்டி தீர்ப்புச் சொல்ல
வல்லூறுக்கு வாழ்வு
இது நாகரீகம் என்று சொல்லும் ஏகோபத்திய
சூழ்ச்சி.

மரணம்

சொல்லாமல் வரும் எல்லோருக்கும் வரும்
உறவென்றும் உரித்தென்று கொண்டாலும் வரும்.
நன்மைக்கும் தீமைக்கும் பாவங்கள் இல்லை.
ஜெனனத்தின் முடிவுக்கு மரணம்தான் விலை
ஜெனனத்தின் முடிவுக்கு மரணம் தான் விலை
வந்துவிட்டோர் தந்துவிட்ட
பரிசொன்றும் இல்லை.
நாம் தங்கிவிட்டால் தெய்வம் இங்கு
என்றுமில்லை.
மரணம் மட்டும் மனிதன் கையில் இல்லை
என்பேன்.
அதை மாற்றிவிட்டால் ...
இறைவன் வெறும் போலி என்பேன்.
நாம் மண்ணில் வந்து பிறக்கும்போது
அழுதுகொண்டு பிறக்கிறோம்.
கூடிவந்த உறவுகளோ ஆனந்தத்தில் மிதக்கிறார்.
மரணம் வந்து சேரும்போது
சிரிக்கவேண்டி நினைக்கிறோம்.
கொண்டு செல்ல ஏதும் இன்றி
ஏங்கி ஏங்கி அழுகிறோம்.
அனுபவத்தின் பாடங்களே
வாழ்க்கை நெறி ஆனது.
அதை அலசி ஆய்ந்து பார்க்கும்போது
தத்துவமாய் ஆனது.

காலத்துக்கு பாடம் சொன்ன புத்தகங்கள் ஆனது.
இந்தச் சத்தியத்தைக் கற்றுக்கொண்டால்
மரணம் இட்ட பகை போன்று.
வாழ்க்கை ஒரு வட்டம் என்பார்.
மீண்டும் மீண்டும் மாற்றம் இல்லை.
மாறிக்கொண்டு போவதுதான்
மீண்டும் தொடக்கப் புள்ளி ஆவதில்லை.
வாழ்க்கை ஒரு சுழலில் முடிந்துவிடும்.
முடிவிடத்தை வந்துவிட்டால்
உடல் இயங்க மறுத்திடும்.
இடைநடுவே போனவர்கள்
இறைவன் அவன் சிந்தனையில்
இடம்பிடித்துக்கொண்டவர்கள்
மாற்றுவழி செய்துவைக்க
கூட்டிச் சேர்த்து வளி திறப்பான்.
உடல் உறுப்பில் உயிர் எங்கே?
அதை இறைவன் எங்கே புதைத்துவைத்தான்.
மரணத்துக்கு மாற்றம் எங்கே?
அதை இறைவன் ஏன் தரமறுத்தான்.
உலகை சுற்றி நீர் இருந்தும்
உடன் குடிக்க ஏன் உகந்ததில்லை.
ஊற்று நீர் மட்டும் இங்கே
உயிருக்கு உகப்பாகும்.
மச்சங்களும் நீர் குடிக்கும்
சுனை அன்னம்போல தாளி பிரிக்கும்
கற்சிலைகள் எல்லாமே தெய்வமாய் ஆனதில்லை.
தெய்வம் எனக் கொள்வதெல்லாம்
வந்துதவி செய்வதில்லை.
பஞ்சபூதம் மட்டும்
இங்கு நாம் உணரும் தெய்வம்.
இயற்கை தன்னை நாம் வெறுத்தால்
செயற்கை எல்லாம் செத்துவிடும்.
வா கடவுள் காப்போம் மரணத்தைக் காக்க.

மீளாத நிலம்

வயிறு பற்றி எரிகிறது?
என் தாயவளை இழந்ததுபோல்
நெஞ்சம் அது வேகிறது
என் தாய்நிலத்தைக் கண்டஉடன்
மோர்ந்து மோர்ந்து மூச்செடுத்தேன்
என் இதயம் அது கசங்கியது
பஞ்சம் பிணி வாட்ட பிடிக்கவில்லை
என் செந்தமிழ் தொலைந்ததங்கே
கலப்படங்கள் மொழிவாரியாகி
தமிழ் உருக்குலைந்து கிடக்குதங்கே
தெருக்கள் எல்லாம் நிமிர்ந்து கிடக்க
தமிழ் தெருக்கடையில் கூட இல்லை.
வெறிச்சோடிப் போனது குடியிருந்த நாடு.
உச்சப் பல்லி நச்சரித்தது
அண்டக் காகம் திட்டித்தீர்த்தது
கானக்குயில் குருவி எல்லாம்

ஏழனமாய் கேலிசெய்தது.
அதைப்பார்த்துப் பார்த்து
என் மனம் உள்ளுக்குள்ளே குமுறியது!
சொல்ல வார்த்தையில்லை
ஆதங்கத்தில் நான் காலத்தைக்
கடிந்துகொண்டேன்.
பார்ப்பவர் எல்லாம் சித்திரம்போல் சிலைபோல்
பாவம் மட்டும் கண்டேன்.
அவர் கண்ணில் தேங்கி வடிகிறது
அவர் எண்ணங்கள்.
அதை தடுத்து நிறுத்துகிறது
பின்புலத்தில் ஏதோ ஒன்று
பண்பாடும் பழக்கவளக்கமும்
மண்ணோடு எருவானது.
நாகதீபம் தலைவிரித்தாடி
நடு வீதிக்கு வந்தது.
முகமூடி போட்டுக்கொண்டு
காத்தாட உலவுதிங்கே
கேட்க இங்கே நாதியில்லை
கேட்பார் அங்கே நாளை இல்லை.
அரசடிப் பிள்ளையாரும்
அவசரமாய் போனதெங்கே?
தமிழ் எச்சம் எங்கு இருக்கும்?
என்ற அச்சம் கூடவந்ததையா
மிச்சம் மீதி இருப்பதெல்லாம்
வெறும் கிழடு கட்டைதானே ஐயா...
கச்சிதமாய் காய் நகர்த்தி
எம் அடிச்சுவட்டை அழித்துவிட்டான்.
அதன் பத்திரமும் கையில் இல்லை
எம்மை பரதேசி என ஆக்கிவிட்டான்.
வயிறுபத்தி எரியுதையோ
நாம் வாழ்ந்த அந்த வாழ்க்கை
ஆனைகட்டிப் போரடித்த
விளைநிலங்கள் எல்லாம்

வேறொருவன் சொந்தம் என்று
உரிமைகொண்டாடுகிறான்.
பாய் விரித்து படகு கட்டி
ஆழியிலை மீன்பிடித்தோம்.
முக்குழித்து மூச்சடக்கி நாம்
முத்தெடுத்து நாம் மிதிப்போம்.
அலைவறண்டு உப்பாகும் கடற்கரைகள் எல்லாமே
உடல் மக்கிப்போன எலும்புகள் எத்தனை?
அலைவந்து சாட்சி சொல்லுமா?
எம் தலைவிதிக்குத் தீர்ப்பெழுதுமா?
நாம் கிள்ளுக்கீரை ஆகிவிட்டோம்.
நம்மை நுள்ளிப்பார்த்துப் போகின்றார்கள்.
நாளையொரு தீர்ப்பு வரும்
நாம் இருந்த நாடுவரும்
நாம் அடைந்த இன்னல் எல்லாம்.
ஓர் இரவில் கரைந்துவிடும்.
என்று நாம் நினைப்பதெல்லாம்
காளையில் மடிவருடி பால் சுரக்கும் என்பதுபோல்
முள்ளிருக்கும் காலுக்கு மயில் இறகால் ஒத்தடமா?
இது நடைமுறைக்கு சாத்தியமா?
முள்ளுக்கு முள்ளேதான் மருந்து
எப்போது தான் ஆறும் தழும்பு?
சமரசம் என்பது கொடுவாள் முனை அல்ல
என்னையோ அவளையோ
ஒருவரை ஒருவர் வீழ்த்த முடியாத போது
நான் வீழ்ந்து கிடக்க, நீ ஏறி மிதிக்க,
சமரசரம் எங்கு வரும்?
வெறும் கண்துடைப்பு நாடகம்.
காலத்தின் தீர்ப்பு ஒன்று எழுதப்படும் வரைக்கும்...
நாமெல்லாம் சமத்துவ அடிமைகள்...

நிலவு

என் பாட்டி சொன்ன கதையின் சொந்தக்காரி
தாய் ஊட்டி உண்ணச் சொன்ன மோசக்காரி
உன் மறுபக்கம் தெரிய உனக்கு
மழலைகள் இட்ட பெயர் நிலை
நீ உலாவரும்போது
கனாக்காண்கிறது காதல்.
உன் பெயரைச் சொல்லித்தான் அல்லிப்பூ
அவிழ்கிறதாம்
நீ பதுமைதான்
இரவிலும் சரி பகலிலும் சரி
உன் கந்தக கணைகளை வீசுவதில்லை.
உனக்குள் எரிமலை வெடித்தால்
என்னாகும் கவி உலகம?
இந்தப் பெண்ணான பூமியின் மகள் அல்லவா நீ
ஏன் சுவாசம் இல்லாத சூனியக்காரியானாய்
உன்னை பெண்ணுக்கு ஒப்பிடுவது முறையா?
கண்ணுக்கு புலப்படும் கிரகங்களில் நீயும் அழகு
அதனிலும் உன் மௌனம் அழகு
இனி ஒருபோதும் எழுதமாட்டேன்
உன்னை பெண்ணுக்கு ஒப்பிட்டு
இயற்கை உன்னை வெறுத்துவிட்டபோதும்
காதலர்க்கு தூதுவன் நீ
களங்கம் இல்லா சேகவன் நீ

இரவுகளில் குடில் குடிசைக்கு நீ விளக்கு
அரண்மனைக்கு தேன்நிலவு
பாட்டி சொல்லும் கதைக்குள் அம்புலி நீ
பருவப்பெண் காதலுக்கு பள்ளித்தோழி நீ
என் பக்கத்து வீட்டுக்கும் சொந்தக்காரி நீ
உன்னோடு கைகோர்த்துவர நினைத்ததுண்டு
கண்ணாடியில் உனை ஏந்தி ரசித்ததுண்டு
நான் அவளிடம் சொல்ல நினைத்ததெல்லாம்
உனக்கு முன்கூட்டிச் சொன்னதுண்டு
என் இரகசியம் காத்து
இரவுகளை நீழச்செய்தாய்
வாழ்த்துகிறேன் உன்னை
உனக்குள்ளும் சுவாசம் குடிகொள்ளட்டும்
நீ பெண்ணாகி காதல் தவிப்பு
எதுவென்று அறிந்துகொள்.
காதல் வழியில் விழுந்து
இதயம் நூலைப் பற்றி
உயிரை வருடும் உளநோய்.
இரவும் பகலும் ஏக்கம் வளர்த்து
உண்மை உலகை மூடிமறைத்து
கண்ணை அள்ளும் விம்பம்.
மருந்தும் இல்லை மாற்று
நிகராய் விருந்தும் இல்லை
இருந்தும் மனம் விரும்புகிறது
வாழ்க்கை முழுதும் வசந்தம் வந்தால் போதாது
சுட்டாலும் வேகாது முதல் கொண்ட காதல்
நீ இட்டமுத்தம்
நீ பித்துக்கொண்டால் புத்தன் ஆவாய்.
பற்றுக்கொண்டால் ஞானியாவாய்
காதல் வாழ்க்கை தன்னைக் கடைந்தெடுக்கும்
மத்து
அதில் கரைந்தால் தொலையும் உன் வாழ்க்கை.

தழும்பு

இனிநாம் காணக்கூடாது.
எவருக்கும் நேரக்கூடாது
இது ஒரு பாடம் அல்ல.
சுவடுகள் நினைவுகளைச் சுமக்கும்போது
விழிகள் உறங்க மறுக்கின்றன.
கனவில்கூட திகில்
நாம் தமிழர் என்பதனால்தானே.
தாய் பிள்ளையை அடையாளம்
காணமுடியாத நிலை எம்மவர்க்குத்தான்.
பிள்ளைகள் தாய் தந்தையிடம் பாசம்
பகிர்ந்துகொள்ளாத நிலை எம்மிடம்தான்
அண்ணன் தம்பி தங்கை அன்பு
வளர்த்துக்கொள்ளாத நிலை எம்மிடத்தான்
காதலன் காதலியின் முகம் கண்டுகொள்ளாத
நிலை எம்மிடத்தான்
ஊர் வாசம் மறந்து உலகெல்லாம் அலைந்து
ஒதுங்க இடம்தேடும் இனம் நாம்.
எமக்கு விதி அமைத்த வாழ்க்கையிது.
நாம் மதி இழந்து போனதினால் யாரைக் குறை
சொல்லி என்ன பயன்?

நானும் ஓர் காரணம்...
நின்று ஒருகணம் சிந்தித்துப்பார்!
அலறிக்கூச்சல் இடும் அடங்காத மனசு.
காதுகளில் வேட்டுச்சத்தம் கேட்டுக்கொண்டே
இருக்கிறது.
கணம் ஒரு உயிர் என காவும் கொள்கிறது.
நினைக்க மயிர் சிலிர்க்கிறது.
நிம்மதியும் நிலைகுலைந்து நீர்த்துப்போனது.

சன்னதி எல்லாம் காவடி சுமந்தும்
எம் நிம்மதிக்கு அவன் துணையில்லை.
கோவில்கள் எமக்குத்தஞ்சம்
ஆனால் குண்டு மழையும் அங்குதான் பெய்தது.
வந்த வினை தீர்க்க வேல் எடுத்த முருகன்
எங்களுடன் அவனும் அகதி
கொடும் இந்தப் போரால்
கொள்ளை போனது எத்தனையோ.
ஆனால் ஒன்றுமட்டும் உண்மை
கொள்ளை நோய் எனப் பிடித்திருந்த சாதிப்பேயும்
சமத்துவ தர்மம் மறந்த மதநெறிகளும்
முதுகெலும்பு உடைந்து போட்டது
எம்மை தமிழராக மாற்றி பழுசுமந்த தோள்கள்
வலுவிழந்துபோனது.
மௌனம் பொத்திக்காத்து மண்டியிடாமல்
தனக்குத்தானே தீமூட்டியது.
தீக்குழம்பானது எம் தேசம்
தீராத வடுக்கள் தழும்பாகின.
ஆறாமல் நெஞ்சுக்குள் தணல் ஆகின.

நெருப்பாற்றில் நீந்திக் கடந்தவரை எல்லாம்
நினைவாற்றகூட இடம் இல்லை.
அனாதைகளாய் ஆட்டுமந்தையாய்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
அடைக்கப்பட்டோம்.

நிழல்

நாதியற்ற உலகம் தன்னில்
நிழல் சாட்சி வந்து சொல்லுமா?
மனசாட்சி இங்கு செத்துப்போச்சு
மானிடமே மலிஞ்சுபோச்சு
காசுக்காக சாட்சிவரும்.
தாய் வேசி என்றும் தூற்றிவிடும்.
ஈனப்பட்ட உலகம் இது
கால் அடியில் முள்ளைவைத்து தலைதடவி
கருத்துரைக்கும்.
பாவியர்கள் கூட்டம் உண்டு.
பகல்கனவு கண்டிடாதே
பழம் நழுவி பாலில் விழா
ஊருக்கு உபதேசம் உகந்ததில்லை
தனக்கென்று வாழ்பவர்கள் இங்கு உண்டு.
இதனால்தானே கூப்பிட்ட குரலுக்கு மறுகுரல்
கொடுக்காமல் இறைவனும் கல்லானான்?

சூரியன் நிழல்பிடித்து சந்திரன் சிரித்தது.
இந்தப் பாவப் பூமியின் நிழல் பட்டதெல்லாம்
கறுப்பாகும்.
நானும் ஓர் பாவிதான்.
தெய்வத்தை நொந்தாலும் என் நிழல்கூட
கறுப்புத்தான்.
சாவுக்குப் போனாலும் சன்னியாசி ஆனாலும்
வந்தவரை ஒதுக்கிவிட்டு வாழ்விழந்துபோனாலும்
உன் கால்பிடித்து தொடர்ந்துவரும் உன்
உடன்பிறப்பு நிழல்.
அதில் முகம் பார்க்கமுடியாது உனைவிட்டு
விலகாது.
எதிர் ஒளி எவ்வகையோ அவ்விதம்
வளர்ந்திருக்கும்.
மரணத்தில் கூவும் உடன்கட்டை ஏறும் நிழல்
உன்பாதை இருள் அதனால் உன் நிழல்கூட
பின்தொடராது
ஒளிதேடி நீ வந்தால் உன் நிழல்தேடி ஊர்கூடும்.

மலர்கள்

மலர்களே இந்த தேசத்தில் தேசம் என்பதை உங்கள்
புன்னகையில்தான் கண்டுகொள்கின்றோம்.
ஒரு பொழுது ஒரு யுகம் ஆவதும்
உங்களுக்குத்தான்.
மனம் சோராமல் மதி உதயம் கொள்கின்றது.
மொட்டுக்கள்! கல்லறைக்கும் மணவறைக்கும்
நீங்கள்தான் வந்து போகின்றீர்கள்.
எதற்கு உம்மால்தான் மறு நொடி தெரிந்து
சிரிக்கமுடியும்.
எப்படி உம்மால் மட்டும் முடிகின்றது?
சிந்திக்கத் தெரிந்த மனிதனுக்கு மரணத்தை சந்திக்
துணிவில்லை?
கூன் நரை விழுந்தும் இச்சைகள் ஏன் விழவில்லை?
மலர்களை எண்ணி பொறாமை எனக்குள்.
நான் நீயாக வேண்டும்
அவள் மனம் சேரவேண்டும்
அதற்கென்ன வளி சொல்லாயோ?
மலர் மெல்லச் சிரித்தது.
மலரே உனக்குள் ஆண் என்றும் பெண் என்றும்
இருபேதம் உண்டா?
மகரந்தம் கொள்கிறோம்.
எம் மடியினி தான் காயும் கனியும் என்றது.
பேசவார்த்தை வந்தது.
என் கேள்விகள் விரிந்து கொண்டது.
மலரே பெண்ணுக்கு பூக்கள் ஏன் பிடிக்கின்றது?
பெண்ணும் பூவும் ஓர் இனம்.
பூஜைக்கு ஒரு சில பூக்கள் மட்டும் போவது ஏன்?
மழலை மரணித்தால் நேரடி சொர்க்கம் செல்லும்.
ஆனால் எல்லா மலர்களும் மழலைகள் ஆவது
இல்லை
மலரே உனக்குப் புணர்ச்சிகள் ஏதும் உண்டா?
அதை காற்று சொல்லித்தருமோ?

மலரே யாரேனும் உன்னைக் களவாடியதுண்டா?
பனித்துளிகள் என்னைக் களவாடியது
தேன்வண்டுகள் என்னைக் களவாடியது
காலை உதையம் என்னைக் களவாடியது
அதன் மறைவுகண்டு நான் வாடினேன்
மலரே யார் உனக்கு உறவு?
இயற்கையும் இயல்பும் மலரே
உன் தேன் இருப்பின் இரகசியம் என்ன?
குறுகிய வாழ்வு கொண்ட எமக்கு
இறைவன் கொடுத்த கொடை
அதைக் காற்று மகரந்தம் கொண்டபோது தேனி
சுயம்வரம் செய்கிறது.
மலரே உன் பருவம் எவ்விதம்?
வண்டு பூவில் தேன் உண்ணும்போது
நீங்கள் மணம் வீசுவது எப்படி?
காலைப் பனிதுவட்டும் தென்றல் எங்கள் இதழ்
வருடிச் செல்வதால்
மலரே நீ எப்போது உன்னை உணர்கிறாய்.
எப்போது எம்மைத் தேடுகின்றாயோ அப்போது
நான் என்னை உணர்கிறேன்.

மலரே நீ எப்போதேனும் சலிப்படைந்ததுண்டா?
இல்லை எப்போதாவது அழுததுண்டா?
இல்லை நீ என்றாவது உள்ளம் குளிர்ந்து
பூரித்ததுண்டா?
ஆம் நாம் எல்லோரும் ஒன்றாகி
மாலையாகும்போது
நீங்கள் தந்த வலிகள் எல்லாம்
மறைந்துபோகின்றன.
நாம் ஒற்றுமையில் ஆனந்தம் அடைகிறோம்.
மலரே முடிவில் நி என்ன சொல்ல வருகிறாய்?
நான் சொல்வதை நீ நினைக்கின்றாய்
நீ செல்வதை நான் நினைக்கவா?
என்றதும் என் கேள்விகள் மௌனித்தன.
என் கண்திறந்து கொண்டது.

பாடம்

ஆண் வர்க்கம் எல்லோரும் ராமர் இல்லை
இராவணன் ஆனாலும் பாவம் இல்லை.
காதலைக்காட்டி பெண்மையை மேயும் பாவியர்
நிறைந்த உலகம் இது.
கன்னிப்பெண்ணே நீ பத்திரம்.
இங்கு காதல் ஓர் அஸ்த்திரம்
உன் பெண்மை தன்னை மேய்வதற்கு
நீ கற்றுக்கொள்ளு ரௌத்திரம்...

விதிப்படி நடப்பதை மறந்துவிட்டேன்.
வரையறை முறைகளை கடந்துவிடடேன்.
எனக்கொரு உலகம் அமைத்துவிட்டேன்.
அங்கு பல ஆயிரம் நிலவுகள் உலவவிட்டேன்.
என் கனவுக்கு அங்கொரு அரண் அமைத்தேன்.
என் இரகசியத் தேடலை திறந்து வைத்தேன்

காகித ஓடம் அதை ஓடவிட்டேன் - கற்பனை
வெள்ளம் அதில் மிதக்கவிட்டேன் என்
முன் வினை நீங்குமென நினைத்தேன் - பழி
மறுபடி காதல் வந்து உயிர் துறந்தேன்...

உடலுக்கு உகந்தது உழைப்பு!
உழைப்பில் உகந்தது உயர்வு!
உயர்வுக்கு உரியது ஊக்கம்!
ஊக்கத்தில் உகந்தது வெற்றி!
வெற்றியில் உயர்ந்தது பண்பு!
பண்புக்கு உவப்பு நன்றி.

நம்பிக்கை

தேவன் பிறப்பிலே
தேசம் அமைதிபெறாதோ?
ஓலம் எனும் அவலம்
நின்றொழியாதோ?
பாவம் பழிதீர்க்க மீட்பர் வருவாரோ?
காலப்பெருவெளியில்
யாராரோ வருகிறார் ஏதேதோ புரிகிறார்...
யாதேனும் ஒருவர்
எம் கண்ணீர் துடையாரோ?
ஆவல் கொண்டோம் அது ஆற்றாமல் போகிறதே.
காலமே உனக்கும் எமக்கும்
விரோதப் பகை உண்டோ?
எதற்கு எம்மை சோதிக்கின்றாய்?
நாம் இழந்ததைச் சொல்லவா?
இருப்பதைச் சொல்லவா?
எமைக்கண்டு வருந்தும்
நிலையாக இயற்கைகூட இல்லை
மதங்களும் தம் மத
தத்துவததை மறந்து நிற்கின்றன

இதில் தேவன் மகிமை
என்பது குதிரைப் பந்தயத்து சீட்டு.
பணம்போய் வரலாம் வராமலும் போகலாம்
ஏன் என்றால் உன் தட்சணை எவ்வளவோ
அவ்வளவே அதன் பரிவர்த்தனையும்.
மனசாட்சி இல்லாமல் மத ஆட்சி
அதில் யார் முளைத்தென்ன?
வெறும் காட்சிப் பொருள்தான்
மனித நேயமும் மனசாட்சியும்...
அழிந்துதான் போகும்.
மனங்களே மதங்களைச் செய்யுங்கள்.
அப்பொழுதுதான் இறைவன்
மனிதனை இரட்சிப்பான்.
அதுவரை உங்கள் அறியாமைகளை
அவன் அறியாமல் இருப்பான்,
இறைவன் வருகைத் தேதி
குறிப்பிடப்படவில்லை.
இவர்தான் இறைவன் என்று கொள்வதும் இல்லை
இங்கு எவர் வந்தால் என்ன?
நாம் இங்கு நாமாக இல்லாதபோது..?

காதல் பெண்ணே

பெண்ணே காதல் என்பது ஆழ்கடல் தான்
உன்னைப் பார்த்தபின்பே அங்குலம் அங்குலமாய்
மூழ்கிப்போகின்றேன்.
நேற்றுவரை இல்லாத ஏக்கம்.
இப்பொழுதை ஏற்றுக்கொள்ள முடியாமல்
தவிக்குதடி
காரணம் கூட்டுறவாய் யார் இருந்தும் நான்
தனிமையான தோறணம்.
பழம் உண்டு பசி இல்லை.
நீர் உண்டு தாகம் இல்லை.
தலையணையில் தூக்கம் இல்லை என் நினைவில்
நான் இல்லை
கற்பனையில் மிதக்கின்றேன் கண்ட தெல்லாம்
ரசிக்கின்றேன்
காதலாலே பித்தன் ஆனேன்.
ஆதலாலே கவிஞன் ஆனேன்.

பெண்ணே எனக்கு மட்டும்தானா இது?
என்னில் நீ பாதி தூக்கம் வந்ததுண்டா?

ஓலை

தொலைந்து நீ போனதுண்டா?
எண்ணங்கள் தொலைந்தாலும் என்னை நீ
மறந்ததுண்டா?
எனக்குள் நீ இருந்தாய் உன் அருகில் நான்
இருந்தேன்.
எதற்கு பொய் வேசம். காதல் ஒரு கேடா?
வாலிபத் தீட்டா?
உனக்கு நீ விலங்கிட்டு உன்னை நீ ஏய்க்காதே?
காதல் ஒரு தும்மல் அல்ல...
அவ்வப்போது வந்துபோக.
காதல் என்பது காற்று அது உனக்கும் எனக்கும்.
யாரையும் யாரும் நினைக்கலாம்.
காதலில் ஒருவன் ஒருத்தியைத் தான்
நினைக்கமுடியும்.
அதுதான் உண்மைக்காதல்
நீ எனக்குமட்டும் சொந்தம் ஆனவள்
நான் உனக்கெனப் பிறந்தவன்
அதனால்தானே உனைப் பார்த்தவுடன்
பற்றிக்கொண்டேன்.
பழகிப் பகிர்ந்த பாசம் கொண்டேன்
என் எண்ணம் எல்லாம் நீ நிறையக் கண்டேன்.
இனி நீ தான் எல்லாம் என சபதம் கொண்டேன்.

சிந்தனைச் சிதறல்கள்

உனக்காய் உழைத்தால் வலி மட்டும் மிஞ்சும்
ஊருக்கும் சேர்த்து உழை.
கோட்டையிலே உன் கொடி பறக்கும்.
உடல் ஆறினால் நித்திரை.
உயிர் ஆறினால் மரணம்.
ஆறுதலை அளவுபடுத்து
இரவின் நித்திரை
கால வகுப்பின் மரணத்திற்கு ஒத்திகை
என்னை நான் அறிந்து கொண்டதும் காதல்.
என்னை நான் மறந்து கொண்டதும் காதல்.
என்னை நான் மாய்த்துக்கொள்வதும் காதல்.
அளவற்ற காதல் உன்னை அழவிட்டுப்
பார்க்கும்.
இறைவன் மனிதனுக்கென்று வழிவகுத்தான்
அதை மனிதன் விதியென்று விலங்கிட்டான்.
வாழ்வில் நொந்துவிட்டால் விதி என்பான்
அதில் அவன் வென்றுவிட்டால் மதி
என்பான்
இவற்றுக்குள் அகப்படாதவன் எவனோ
அவனே புண்ணியவான்.
கனவுகளால் வாழ்க்கை கழிந்துவிட்டால்
நினைவுகளும் நிலைத்துவிடும்.
நினைத்ததும் வாழ்வில் கிடைத்துவிட்டால்

இறைமை பொய்த்துவிடும்.
உன்னை நீ நம்பு. நம்பாவிடில் நீ நம்பும்
இறைவனுக்கு சக்தியில்லை.
உழைப்பதற்காய் வாழ்ந்துவிட்டால்
வாழ்க்கை தொலைந்துபோகும்.
நாளை என்று ஒதுக்கி வைத்தால்
இந்நாள் இருண்டுபோகும்.
கொண்டவனைக் கைக்கொள் என்பது
பைபிளின் வாக்கியம்.
அவர்தம் முந்தானை வீழ் என்பது தம்
எண்ணத்து ஓவியமாம்.
நான் இலக்கிய காலத்தில் சிறைப்பட்டவன்
என் உணர்வுகள்கூட அதில் அகப்பட்டது
என் மோகமும் மேகமாய் அலைகின்றது.
ஊழ்வினையால் வீழ்ந்தோர்க்கும்
விமோசனமுண்டு
பெண்வினையால் வீழ்ந்தோர்க்கு
எப்பிறப்பிலும் மோட்சமில்லை.
அன்புக்கு அன்பென்னும் அகத்தின்
பாலெண்ணம் கொண்டோர்க்கும் முகத்தில்
புன்னகை புதுப்பொலிவு என்றும்
நீடித்திருக்கும்.
எழுதப்படாத தீர்ப்பு ஒன்றை இறைவன்
நாள்முடில் எழுதிவைப்பான்.
நீ தீயை அள்ளிக்கொட்டினாலும் என்றும்
அன்பு செய்யும்.
தாயை மிஞ்சும் தெய்வம் எங்கே?
கண்டுசொல்லு.
பாவப் பரிகாரம் நீ செய்யவேண்டாம்.
உன்னைப் பெற்றவரை மனதில் வை.
என்றும் தெய்வத் துணை நிலைத்திருக்கும்...

பொத்தி வைத்த காதல்

பள்ளிஅறைப்பாடம் அது நினைவில் இல்லை.
அன்று பார்த்தமுகம் என்னை விட்டு
மறையவில்லை.
தமிழ் சொல்வரியில் அவள் பெயர் கவிதை
இராகங்களில் அவளும் ஓர் மோகனம்
என்றும் கலை வண்ணம் குறையாத பொதிகை.
பள்ளி அறையில் அவள் என்றும் மான்
என் எண்ணம் அதில் தோகைகொண்டாள்.
தூக்கம் அதை துரத்திவிட்டாள்.
ஏக்கம் அதை விதைத்துவிட்டு
என் உயிரை வதைத்தெடுத்தாள்.
அவள் முழுநாளும் முழு நிலவு.
விழியிரண்டும் திருமுறைகள்.
காதல் வினை அருளி எனை ஈர்த்தாள்.
நான் கவிபுனைய வரம் கொடுத்தாள்.
அச்சத்தை உடுத்தி நாணத்தை வளர்த்து
வெக்கத்தை விதைப்பாள்
என் நெஞ்சத்தில் நினைத்தேன் அந்த பருவத்தில்
தவித்தேன்.
என் மேல் பற்று வைத்தேன். அவள்மேல் காதல்
வைத்தேன்.
யாருக்கும் தெரியாமல் நெஞ்சுக்குள்
பொத்திவைத்தேன்.
கண்மூடித்தூங்கவில்லை காலம் ஓடியது.
கண்ணே நீ பத்திரமா?

கண் கெட்ட காதல்

காதல் வசந்தத்தின் ஆரம்பம் - எனக்கோ
வாழ்நாளைக் கொன்றது
தராதரத்தை மூழ்கடித்தது.
என்னைத் தறுதலை ஆக்கியது
பாறை இடுக்குகளில் முளைத்ததை
கனிதரும் மதவென எண்ணினேன் - என்னை
கலங்கடித்து நிர்க்கதியாக்கியது.
வசதியை மட்டும் இனம் கண்ட எனக்கு
வாழ்க்கையில் இலக்கணம் புரியவில்லை.
விதியோ சதியோ நம்பிக்கையில்லை
விரையம் ஆனது வாழ்வு.
அவள் எண்ணம் எல்லாம் திண்ணம் என்றேன்.
என்னை திண்ணைப்படியாக்கினாள்.
காதலை மட்டும் சாட்டையாக வைத்து
காலத்தின் ஓடையில் என்மீது சவாரி செய்தாள்
அன்பு விளைப்பொருள் ஆச்சு.
அதுவே என் உயிருக்கு வினையாச்சு.
வெம்பி அழுது வேதனை சொல்ல நம்பினோர்
யாரும் இல்லை.
கண்ணை மறைத்தது காதல்...
என் உணர்வுக்கு இடம்கொடாதவள்.
காதல் ஆனது எப்படி?
என் இதயத்தை இடுங்கிப் போட்டவள்
மோகம் கொண்டது எப்படி?
என்னையே என்னிடம் வறுத்தெடுத்தாள்.
ஏன் என்றும் எதற்கென்றும் தரம் பிரித்தாள்.
மொத்தத்தில் என்னைக் கைப்பாவையாக்கி
தன் கக்கத்தில் வைக்க எண்ணிவிட்டாள்.
வெக்கத்தை விட்டேன்.

இவள் பெண் அல்ல பேயிலும் கொடியவள்.
அன்பு மழலைக்கும் இல்லை.
பாசம் உறவிற்கும் இல்லை.
நேசம் எவருக்கும் இல்லை.
இவள் காண்பது எல்லாம் மோசம்.
தேவன் ஒன்றென்றான் அவன் விதிகளுக்கு
எதிரானவள்.
இவள் மதியில் ஏதோ மயக்கம்
காலம்தான் பதில் சொல்லவேண்டும்.
காதல் கனிந்து கைகூடி காலம் பலகழிந்தது
இன்னும் கரிசனை வார்த்தையில்லை
நான் மானிடன் என்பது புரியவில்லை.
என் பசி அறிந்து பரிமாறினாளா?
சுயம் அறிந்து சுகம் கொடுத்தாளா?
வீணை அழுதால் நாதம் எழும்
நான் அழுதால் பரிதாபம் வரும்.
எனக்குள்ளே பொத்திவைத்து என் உயிரை
வதைக்கிறேன்.
காதல் என்ற படிக்கட்டில் வாழ்க்கை தன்னை
வெறுக்கிறேன்.
நினைவுகளை பொசுக்கிவிட உயிர் மாய்த்துவிட
நினைக்கிறேன்.
காலன் என்னைக் கேலி செய்தான்.
வேண்டும் என்றே சேர்த்துவைத்தான்.
மௌனத்தால் சேகரித்தேன்
பேதையாய் இருந்துவிட்டேன்.
உண்மையடி என் காதல் உனக்கிது புரியவில்லை.
உண்மையை நீ அறிய என் உயிரை எடுக்கிறாய்.
என் இதயத்தில் சுமக்க எண்ணி
என் உதிரம் விதைக்கிறேன்.
இரக்கமே இல்லாமல் என் இதயத்தை பிழிகிறாய்
வருத்தம் ஏதும் இல்லையடி -
உறுத்தும் என் காதல்
உன் செருப்புக்காலாச்சு...

சொல்லாத காதல்

காதலித்தேன் உன்னை உனக்கும் தெரியாமல்
என் எண்ணங்களில் அலங்கரித்தேன் எவரும்
அறியாமல்
எனக்குள்ளே நீயிருந்தாய் உனக்குள்ளே யாரோ?
பார்த்துப் பார்த்து என் காதல் வளர்ந்தது.
உனைப் பார்த்துப் பேச ஏதோ தடுத்தது
இதயத்தில் பூட்டிவைத்தேன்.
இமைமூட விழித்திருந்தேன்.
காலத்தின் கணக்கின்றி கனவுலகில்
வாழ்ந்துவிட்டேன்.
நீடித்த மௌனத்தால் என் காதல் கனவாச்சு.
உன்னைச் சொல்லி குற்றம் இல்லை.
குற்றம் என் காதலடி
உரிமை கொள்ள ஏதும் இல்லை
என் உண்மைக்குச் சாட்சி இல்லை.
என் மனசாட்சி அரங்கேற உன் சாட்சிகூட
எனக்கு இல்லை.
உனக்கும் தெரியாமல் உன்னை நான் காதலித்தேன்.
எனக்கும் என் காதல் வேடிக்கையானதடி
சொல்லாத காதல் என்றும் சொர்க்கத்தில்
சேராதாம்
அந்தச் சொல்லிலே உண்மையுண்டு.
அதன் சாட்சியாய் நானும் உண்டு.
என்னை நான் கேட்டதுண்டு
ஏன் இந்த மௌனம் என்று.

கவிஞன்

விண்ணையும் மண்ணையும் விரல் சாண்
இடைக்குள் அளந்து பார்ப்பவன் கவிஞன்.
புது உலகம், புது ஜனனம்,
முடிசூடா மக்கள் ஆட்சி
மன்னவனும் மந்திரியும் இவனே
பாலைவனத்தில் பசு மேயும்
கானல் அலையில் கயல் பாயும்
கந்தக நெருப்பில் பூப்பூக்கும்
காலப் புயலும் கோலம் இடும்
ஏழ் கடலும் கைக்குள் அடங்கிவிடும்
கைகள் பொத்த வான் மறையும்
புதலின் கால் வைத்து புவியில் தோள் தொட்டு,
நிலவில் தலைவைத்துக்கொள்பவன் கவிஞன்.

செவ்வாய் உலகை எட்டிப்பார்ப்பான்
பூமி பிளந்து தீக்ஷகுளிப்பான் அவன்தான்
கவிஞன்.
புலமை பேசி புதுத்தத்துவம் தேடி
அவையை அடக்கி அவைக்குள் அடங்கி
நீதி கோணா தர்மம் எதுவோ? அவ்வழி
நடப்பவன் கவிஞன் - பூகம்பத்தையும் முகில்

வெட்டும் மின்னலையும் ஆழி அடங்கா அலை-
யையும் கூறி அழுத்தி நெடும் பயணம் காண்பவன்
கவிஞன்
கற்பத்துக் கருவையும் சீறி எழச் செய்பவன்
காற்றையும் அலையையும் அதட்டிப் பேசுவான்.
நாளைய சரித்திரத்தைத் தோண்டி எடுப்பான்
முரசு கொட்டி மூளும்
உணர்வுக்கு எண்ணை ஊற்றி
எரிக்கும் நெருப்பை நெஞ்சில் விதைப்பவன்.
தாலாட்டில் தாய், சீராட்டும் தந்தை ,
அறிவூட்டும் ஆசான், அறிவுடை அன்புக்குக்
காதல்.

இருட்டில்லா வையத்து
அக்கினிக் குஞ்சு
அவன்தான் கவிஞன்.
மெய்யோடு பொய்கலந்து
பொய்யோடு பொருள் கலந்து
பொருள் உடன் தேன்கலந்து
தேன் களிக்க திறன் கலந்து
மெய் உணர்வை ஈர்க்கும் கவிஞன்.
காலத்தின் கொடை.
தமிழ்வாழ தமிழர் எம் புகழ்வாழ
நெறிவாழ நிலைகுலையா அறம் வாழ,
அழிவில்லா தினம் வாழ வாழும் கவிஞன்.
இனத்துக்கு அடையாளம் இறைவனும்
செவிமடுப்பான்.
நன்நெறி தூற்றினால் வானரங்கம் குடைவிரிக்கும்
இயற்கையும் கேட்டசையும் - இவன்
பாட்டெழுத ஏழ் இரவும் நிலவெறிக்கும்...

என்னைவிட்டுப் போனவளே

நான் ஒத்தவளி போகயிலே கூடவழி வந்தவளே
ஏன் என்றும் எதற்கென்றும் கேளாமல்
என் வளியில் நின்றவளே. எத்தனையோ
நாள் பகலாய் எனக்காக வாழ்ந்தவளே
உன் ஆசை நான் கேக்க ஒருநாளும்
நினைத்ததில்லை
எனக்காய் நீயிருந்தாய்
உன் தேவைகளை நான் மறந்தேன்
பட்டினி பசி அறிந்து பதம்பார்த்துச் சமைத்து
வைப்பாய்
பூரித்த முகம் பார்த்துப் பசியாறக் கேளாமல்
பரிமாற உண்டுவிட்டு பதம் ஏதும் சொல்லாமல்
என்பாட்டில் போயிருப்பேன்
உப்போ புளிப்போ பதம் சொன்னா
என்னதான் குறையும்? என்று உள்ளுக்குள் நீ
நினைப்பாய்.
உன்னை நான் பொருட்டாய் கருதாத நாள்
எல்லாம் என்னமாய் நொந்திருப்பாய்?
என் மனம் நோகும் என்று சொல்லாமல்
இருந்திருப்பாய்.
சினந்து நான் பலதடவை சீறி உன்னை
நச்சரிப்பேன்.
பொழுது கருக்கிவிட என்கோபம் தணிந்துவிடும்.
மன்னிக்கச் சொல்லி நான் ஒருதடவையேனும்
கேட்டதில்லை.
நான் மன்னிக்கும்படியாக நீ படிதாண்டிச்
சென்றதில்லை.
பொல்லாப்புக் கதை கட்டி சுற்றங்கள் பல கூறும்.
குற்றம் தான் இருந்தாலும் அவர்முன் தப்பு என்று நீ
சொல்லாய்.
என் தாய்க்கு பின்னாடி எனைக் காத்தாய் நீ
கோபமாய் நீ பேசி நினைவுகள் எனக்கில்லை.
உன் கொபம் எல்லாமே விடுமுறை போனாலும்

நான் கைவிடாத பேனாதான்.
மாமியார் வீட்டுக்கு மருமகளாய் வந்த நீ
என் தாய்க்கு தோழியானாய்.
அப்பாவின் மகள் ஆனாய் - என் பெயருக்கு
முகவரியிட்டாய்.
முதல் பிள்ளை ஆண் என்று
முந்நூறு நாள் தவம் இருந்தாய்.
உன் தவம் பலித்தது ஒன்றில்லை வாரிசு
ஒன்றுக்கு ஒன்றாக ஒன்றிலும் குறைவில்லை.
தலைக்குமேல் வளர்ந்த பிள்ளைகள் வயசாச்சு-
ஒழுக்கத்தை நீ சொல்லி என் பெயருக்கு
கேடில்லை.
பழுத்தும் என் தோள் அவள் அன்புக்குக்
குறைவில்லை.
உன் பிள்ளையாய் நான் இருக்க எனைவிட்டு
எங்கு சென்றாய்.
வீட்டிலே விளக்கில்லை, கோபுர மணியில்லை
தேரிலை முடியில்லை என் ஒத்தவழிப்பாதையிலே
நீ இன்றி தெம்பில்லை, கூடவே வந்த நீ
நான் போகும் வளிமுன்னே பூப்பொட்டோடு
நீ போனாய்.
என்னடி மோசம் இது. ஏன் என்னைத்
தவிக்கவிட்டாய்?
நான் பார்தத முகம் மாறவில்ல. உன் பழுத்ததோல்
காணவில்லை
வருசம்தான் பலவாச்சு என நரைகூடச்
சொல்லவில்லை.
கூட நீ இருந்தும் நீ கூடச் சொல்லவில்ல.
பிள்ளைகள் நாலு பெத்தும் எனைவிட்டுத்
தூங்காய் நீ.
உன் நெஞ்சறையை கல்லாக்கி
கல்லறைக்குள் தூங்கிவிட்டாய் - காலன் தான்
விதித்த கேடு.
கடன் சொல்லத்தருவானா?
நீ இன்றி தவித்திருக்கேன் எனை வந்து
கூட்டிப்போ...

மயக்கம்

புத்தி மயங்கும்போது
ஆணவம் கூர்மை அடைகிறது.
ஆனவம் உடையும்போது
ஞானம் உதையம் ஆகிறது.
ஞானம் பெருகும்போது
தியாகம் முளைவிடுகிறது.
தியாகம் கனியும் போதுதான்
மனிதன் கடவுள் ஆகின்றான்.
சாயலில் மனிதன் கடவுள்
குணத்தில் மனிதன் மிருகம்
நிஜத்தில் மனிதன் யார்?
ஆண்மை என்ற அகம்பாவத்தால்
கட்டுப்பட்டவன் விதிக்ள என்ற வரம்பு
அமைத்து குழம்பி வாழ்கின்றான்.
நாளை என்ற நாளுக்கு முடிவு தெரியாதவன்
இழந்துபோன நாளுக்கு செருக்கு
சீயுபவன் இருக்கும் இந்த நாளிலே
மயங்கிவிட்டவன்
எதைச் சொல்லி மனிதன் பூர்த்தி அடைகின்றான்
கடவுள் என்ற பெயரிலே
சாத்திரம் அமைத்தவன் இழவு என்றும்
தீயிலே அதை வீசி எறிந்தான்.

இதயத்தின் ஈர்ப்பு

கவிதை வார்த்தையை ஆராயும் கருவி - காதல்
இதயங்களை ஈர்ப்பூட்டும் தேனி
இதயங்கள் இடம்மாறித் துடிக்கும்போதுதான்
இதயத்தின் பருமன் தெரிகிறது.
மனம் மயங்கி மௌனம் வெளிப்படும்போது
காதல் சுரம் மீட்டிக் கொள்கிறது
தொலைதூரத்திலும் தொலைந்துபோன
நேரத்திலும்
சினந்தரக்கூடியது காதல்
இதயத்தின் வாசல் நான்கு
அதன் தலைவாசல் என்பது காதல்
காலத்தால் காதல் போற்றப்பட்டாலும்
ஏன் இன்றும் கண்கசக்கிக் கொள்கிறது?
வார்த்தைகளில் தேன் ஊறும்.
வழி நடுவே தேள் கொட்டும்
இன்னும் நீந்திக் கடக்காத அலைகளுக்குள் மனம்
தேங்கிக் கிடக்கிறது.
இளமை என்னும் பருவத் தோப்பில் காதல்
என்னும் தனிமரம் ஆகாது.
கண்கள் கவர்ந்திழுக்கும்,
காதலுக்கு காலம் விலங்கிடுகிறது.
பெண்மை ஒரு முகம் ஆண்மை ஒரு முகம்
கொண்டதில்லை
வலியும் வேதனையம் வரப்புக்
கட்டிக்கொள்வதில்லை.
சொல்லப்போனால் சடங்குகளைக் கடந்ததுகாதல்.
- உன்னை நீ உணரச் செய்வதும்
உனக்குள்ளே ஒரு ஜீவன் துடிப்பதும்
ஊசி முனையில் நின்று தவிப்பதும் காதல்.
இதயத்தைக் கொஞ்சம் கல்லாக்கி
ஈரம் இல்லாமல் மெழுகு பூசி காலத்தைக்
கடிந்துகொண்டு காதலே பாவம் என்றால்
இவன் சாபத்தை என்ன சொல்ல...?

கூலி

நாள்கூலி சம்பளம் நாலுபேர் சீவியம்
நாளும் கெட்டவாழ்வில் கைபொத்தி மிஞ்சுமோ?
குத்தரிசிக் கஞ்சி எழுத்தறிவுகூடவில்லை
பகுத்தறிவு எட்டவில்லை.
ஒருவேளை கஞ்சியும் மறுவேளை கூழும்
சிலவேளை பட்டினியும்
சிக்கன வேளையிலும் பத்துக்காசு மிஞ்சவில்லை
ஒழுக்குக் கூட பொத்த ஓலக்கீற்று இல்லை.
ஒருத்தி பெண்பிள்ளை ஒதுங்கக் கொல்லையில்லை
ஒட்டி நோய் பிடிச்சா உதவ ஆளும் இல்லை.
வறுமைப் பேய் ஆட்டி இளமை கருகியது.
இளமை முதுகில் இல்லாமை ஏறியது.
இனிமைக் கனவுகளை வேரோடு மேய்ந்தது.
பாட்டன் பூட்டனும் குறுகிச் சேர்த்ததில்லை.
கூனிக் குறுகி நின்று கூழுக்கு உழைச்சாங்க.
அடுத்த சந்ததியும் அடிபணியவைச்சாங்க.
கல்வி பொதுவென்று அறியாமல் போனதினால்
இன்றும் எம்பாடு நாள் கூலி ஆனதடா.
இளமையில் வறுமை கொடுமையிலும் கொடுமை.
இனிப்பாய் கதைபேச இயலாத நிலமை.
அடுத்தவன் ஏளனத்தில் உயிரி வேகும் கொடுமை.
அடுத்த என் சந்ததிக்கும் இதை வரவிட்டால்
நான் ஒரு எருமை.
விதை நெல்லை நாம் விதைப்போம்
சுடுசோறு கண்டதில்லை. கூலிக்கு வீடுகட்டி
தலைசாய்த்துப் படுத்ததில்லை.

ஏச்சிப்பிளைப்போர் பேச்சிலே பஞ்சம் இல்லை.
ஏழைகுடிசை என்றும் பால்பொங்கிக் கண்டதில்ல.
கொழுத்தும் வெய்யிலிலும் கொட்டும் பனியிலும்
வறுத்தெடுக்கும் எம்மை எம் நிலை யார் அறிவார்?
எவர் வந்து கண்துடைப்பார்
பட்டம் படித்தவரும் பகுத்தறிவு அறிந்தவரும்
நல்திட்டம் வகுத்திருந்தால்
இல்லாமை ஓய்ந்திருக்கும். எல்லோரும் புத்தன்
இல்லை.

புத்திமான் எவரும் இல்லை.
சத்தியத்தை கடைப்பிடிக்க சமுதாயம்
விட்டதில்லை.

எல்லோர்க்கும் எல்லாமே மேல் எண்ணம்.
இதில் நீ யார் நான் யார்? மணிகட்ட?
உழைக்கின்ற எம்மவர் வேர்வையிலை
உப்பிருக்கு...

கல்லும் ஜீரணிக்கும்
நோய் நொடி வந்தால் கசாயம் கை கொடுக்கும்.
அலுப்புக்கு ஒரு கள்ளு
பாவிக்கும் கலப்பாலை நுரையீரல் வெந்துபோகும்
குடியாலை கெட்டதென்று ஊர்கூடிக் கதைபேசும்.
முடியாத நம் வாழ்வு முடமாகிப் போகிடுமோ?
கூலியின் வீட்டில் மிஞ்சுவது கோமணந்தான்.
நெஞ்சில் ஆசைவைத்தேன்.
பிஞ்சிலே வறுமை வந்து வாழ்நாளை முடக்கியது.
கூலியாய் இருந்தாலும் கொள்கையிலை மாறாமல்
பழங்கஞ்சி குடிச்சாலும் அடிமை என்று வாழாமல்
சினம் கொண்டு
நீ எழுந்து சிந்தித்து செயல்படு.
சீர்ப்படும் எல்லாமே.
முந்தையர் சிந்தனை சீர்கெட்டுப்போனதால்
எந்தையர் தாய்நிலம்
சீர்அழிந்து போனதங்கே...

கவிதையின் முகவரி

சபைக்குள் நுழையமுன் அவைக்கு வணக்கம்
கவிதை பேசும் கலைஞர் முன்
நான் கவிதை படிக்க வந்திருக்கிறேன்
எண்ணும் எழுத்தும் ஆரம்பம் எனக்கு
இவர்கள் முன் மாணவன் நான்
ஏதோ ஒரு புலம்பல் என்னைக் கொண்டு
பேனா கிறுக்குகிறது.
உண்மை ஊமை என் வார்த்தை பேசுகிறது பேனா
எண்ணம் என்பது
அலைமோதிக்கொண்டபோதுதான்
என் எழுத்தாணி என்பது நங்கூரம்
இட்டுக்கொண்டது.
மின்னலும் மழையும் மழைவிட்டும் வானவில்லும்
கொந்தளிக்கும் அலையும் குத்துகின்ற குளிரும்
குறிசொல்லிப் பேசும் காற்றும் என்னை முறை
சொல்லி அழைத்தது.
இயற்கை எனக்கு இடம் கொடுத்தது.
கவிபிறக்க வான்திறந்தது.
முகவரி இல்லா எனக்கு அகல்விளக்கு முகவரி.
இட்டு முத்திரை தைத்தது.
வானம் வந்திறங்கியது. மண்டலங்களும்

விண்மீனும் வசப்பட்டது.
இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எனக்குரிமையானது.
கற்பனை குவிந்தது.
வரிசேர்த்துக் கவி கோர்த்தது.
எழுத்தாணி தேய்ந்தது.
சரசம் எல்லாம் எழுதித் தீர்க்க நாமகள் நாமம்
சொல்லி
நான்முகன் நோக்கி தவம் இருக்கிறேன்.
அவை நடுவே சபை அடைக்க வள்ளுவன் அல்ல
நான்
விசித்திரர் முன் வீணன்
என்னை வீண் என்று கருதாமல் ஏற்றுக்கொள்ளும்
என் கவியை
அருந்தலில் விருந்து தரும்
மருந்திலும் நூறு சுகம்
தொட்டுக்கொள்ளவும் தொட்டவாய்
ஒட்டிக்கொள்ளவும் கூடும் கட்டெறும்புக்
கரிதல்ல.
இந்திரன் சபைக்கும் மன்மத பூஜை.
மங்களம் பாட எனக்கும் ஆசை
வந்தேன் தந்தேன் கவிச்சரம் கொண்டு
உம்முன் என் சிரம் தாழ்த்தி
வணங்கினேன் நின்று ஆசிகள் கூறும்
அடியேனுக்காக.

எண்ணத்தில் நிறைந்தவள்

எங்கோ எனக்கோர் ஒருத்தி பிறந்திருப்பாள்
அவள் பண்பால் பணிவால் பசுமைக் குணத்தால்
நிறைந்திருப்பாள்
அவள் கங்கா நதியை வரவால் சொன்னால்
அது தங்காது வரும்.
மலைமார் மனதில் எனக்கோர் கோவில்
கட்டிவைப்பாள்.
தினம் மஞ்சள் அரைத்துக் களனிக் கரையில்
குளித்திருப்பாள்.
அவள் மெல்லப் பாதம் பட்டு முள்ளும் பூவாய்ப்
பூத்திருக்கும்.
அவள் அள்ள குமரி அல்ல புகழை
அள்ளித்தரும் கங்கை.
இல்லாள் ஒழுக்காற்று சொல்வேன் இவள்
விளக்கென்று.
அழுக்கறை விழுந்தோர் அக்கறை போக்கும்
வற்றாப்பளை அரசி.
அவள் இழுப்போர் கருப்பை புடைப்போர் வாயை
தணலால் கருக்கும் கண்ணகிவம்சம்.
மாடனோடும் பேசுவாள் மாதர் தாலிகாக்க
வேண்டுவாள்.
என் காலைப்பொழுதும் அவளே.

மதிமாலைப்பொழுதும் அவளே.
சேலை ஓலைத் தரைபோட்டு எனை உடல்
நூலைக் கொண்டு துவட்டிடுவாள்.
என் சாமப்போர்வை அவள் அதிகாலைக்
கதிர் தினம்.
தனக்காய் எதற்கும் நினைக்காதெனக்காய்
ஜொலிக்கும் தீண்டா விளக்கு.
மண்ணை புனைந்து கயிர் இழுப்பாள்.
விண்ணில் சென்று பூப்பறிப்பாள்.
காற்றைக் கூட தடைவிதிப்பாள்.
ஏனையோர் கேட்டால்கூட இடம் கொடுக்காள்.
அவள் பார்த்தால் பசுவும் ஒருபடிகறக்கும்.
என் பார்வை விழுவே தவம் கிடப்பாள்.
இன்று சொல்லால் படைக்கின்றேன்.
அது மெய்யாய் நடக்கும் என்று.

அப்பா

சொல்லித் தெரியாத உண்மை
பேச்சில் அவர் வார்த்தை இல்லை.
வாழ்வில் கரை ஒதுங்க நீந்திக்
கரைசேர்க்குந் தோணி.
கருச்சுமந்தவள் தாய் உயிர் கொடுத்தவன்
இறைவன்
வழிகாட்டுபவன் தந்தை
இடறுகளுக்குள் கைகொடுத்து முள்மேலே
பாய்விரித்து
சொல்லவொண்ணா சுமைகளை தான் தாங்கி
மாடாய் கழுதையாய் நாயாய் வாழ்க்கைமுழுவதும்
ஓடாய் உழைப்பவன் தந்தை
அவனுக்கு வாழ்த்துப்பாட எந்த மொழியிலும்
சொல்லில்லை.
கவிதையில் நல்வரி இல்லை.
எந்தப் புலமைக்கும் இது புலப்படவில்லை.
கண்டிப்பானவன் கரிசனை உள்ளவன்
நம்பிக்கை என்ற வேர் ஊன்ற
வாழ்வில் இலட்சியம் என்பதை விதைத்தவன்
இவன் கண்ணீர் விட்டதில்லை
மனம் கசங்கி நொந்திருப்பான்.
தாய் அள்ளிப்போட்டு அரவணைத்து

அன்புகாட்டியிருப்பாள்.
தந்தை தூக்கி வளர்த்து துயரினைத் துடைத்து
பாசம் காட்டியிருப்பான்.
அவன் கொண்ட பக்கங்கள் எத்தனையோ
விழுப்புண் இல்லாதது.
நாள் முழுவதும் போராட்டம்
எம் தேவைகள் தான் அறிந்து
தன் தேவைகள் தொலைத்திருப்பான்.
பஞ்சமோ பேர் இடர்வந்தாலும் தன் துக்கங்கள்
தொலைத்திருப்பான்.
தனக்காய் வாழ்ந்த காலம் போய்
குடும்பம் பிள்ளை உறவென வாழ்ந்திருப்பான்
அவன் வியர்வை மணக்கும்
குடும்பச் சுமை மறைக்கும்
தேவைகள் பூர்த்தி பெற்ற மனிதன்
எங்கோ போட்டிபோட்டு வாழும்
உலகில் பூர்த்திபெற்ற வாழ்க்கை என்றே
தாய் பத்துமாதம் சுமக்கின்றாள்.
தந்தை நாம் வாழ்வில் கரைதட்டும் வரை
சுமக்கின்றான்.
எம் தேவைகள் எதுவோ அவற்றுக்காய்
உழைக்கின்றான்.
எம்மை தெவிட்டாமல் தேகம் தேய்த்து நாளும்
எம்மைக் கட்டிக்காத்து
வாழ்வில் எமக்குப் பாதை வகுத்து
கல்வி, கடமை கற்றுக்கொடுத்து
நியாயம் தர்மம் நீதி வகுத்து
உலகை உணரப் பாடம் கொடுத்து
நாளும் எம்மை சுமந்து வாழும் தந்தை
நாம் போற்றி வணங்கும் தெய்வம்
இதை உலகம் கண்டும் காணா விந்தை
கண்மூடிக் கிடந்தால் நாம் மந்தை.

காமம்

காமம் ஒரு மர்மம்
தேகப்புணர்ச்சிக்கு காமம்
பசி அடக்க உடல் சுரப்பிகள் மாறும் வடிவம் தான்
காமம்.
பால் வயது முடிந்தபின் பருவத்தில் ஓர் மாற்றம்.
பக்குவம்தான் அடையாமல் சிறுவயதில்
தடுமாற்றம்.
எண்ணங்கள் தடுமாற உடல் அங்கங்கள்
பலமாற்றம்.
ஆண் என்றும் பெண் என்றும் ஒரு எல்லைக்குள்
போய்ச்சேர
மனம் செய்யும் பரிமாற்றம்.
தேகத் தேவைக்கும் தடுமாறும்.
காமச் சுழற்சிக்கு தான் மாறும்.
பருவத்தின் வெட்டு கண்ணைக் குருடாக்கும்.
கானல் தெரியாமல் மண்ணை
சொல்லுக் கேளாத வயது?
மனம் அலைபாயும் வரம்புகளை முட்டிமோதும்
வரையறைகளுக்கு நில்லாமல் சேறும்
சகதிக்குள்ளும் போய் வீழும்.
கண்ணீர் கோலம் ஆகும்.
ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள புனித உறவு
கொச்சைப்படுத்தப்படும்.
கேலிக்கும் பிறர் நகைப்புக்கும் வேலி இல்லாமல்
போய்விடும்.
காமம் கண்ணைக் கட்டிவிட்டால் அவமானம்
எவர்க்கு?
காதலுக்கும் காமத்துக்கும் சம்பந்தம் இல்லை.
காதல் மனவழி தோன்றுவது.
காமம் உடல் வழி தோன்றுவது.
காதலில் காமம் இல்லை.

காதல் என்னை காதலிக்கவில்லை

காகிதப் பூவில் கருவண்டு ஒன்று
தேன் உண்ணத் தேடுது.
சிரிக்கும் கொக்கு மீன் கொத்த எண்ணி நாவற்றி
வாடுது.
கள்ளி மரத்தில் கூடு கட்ட காற்றடித்துப்
போகுதடி
ஏனோ என்னை பிடிக்கவில்லை.
ஏன்தான் காரணம் சொல்லவில்லை?
நேற்றுவரை நான் அழுததில்லை.
ஏனோ என்மனம் துடிக்குதடி.
காதல் வானில் தடம் புரண்டோர்
என் நிழலும் என்னை வெறுக்குதடி.
காதல் எனக்கு ஏனோ சுட்டபழம்.
கை எட்டும் தொலைவில் எட்டவில்லை.
சீச்சி என்று சொல்லால் நான் சிறுவன் என்று
கொள்ளவா?
தேர்ச்சி பெற பள்ளியறைப் பாடமா?
என்னைத் தெருவில் விட்டாய்.
காதல் சொல்ல மறந்தாய்.

பெருமைதனைக் கொய்

எல்லாம் உன் கைக்குள் அடக்கம் என்றால் நீ
மேலானவனாகக் கருதப்படுவாய். எல்லாம்
உனக்கு மேலானது என்றால் நீயே அதற்கு
இழிவானதாய் காணப்படுவாய்.
எதுவும் உனக்கு சமன் என நினை.
அதுவே உன்னை உயர்த்தும்.
எதற்காகவேனும் போராடு.
அதற்காக ஏதும் சூதாடாதே.
இறைவன் சமாதானத்தின் படிக்கல்.
பாவத்தின் பலன்.
அவன் வகுப்பது அதன் சாபத்தை வாங்கத்
துடிக்காதே.

எம் தேசம்

நதிக்கரை ஓரம் மின்மினி ஒன்று வெளிச்சம்
காட்டியது.
விருட்சம் விடுதலையின் வெளிச்சம் என்கிறது.
எரிவண்டு பாவம் அது பொறி என்று
தெரியாமல் தறி தட்டிக் கிடக்கிறது.
தனக்கான அடையாளத்தை அதற்கான
அதிகாரத்தை
இரவோடு இரவாய் எரித்துக்கொள்ளப்
பார்க்கிறது சில சதிகாரவர்க்கம்.
நிலம் இருந்தபோது மரம் இல்லை.
மரம் இருந்தபோது கிளை இல்லை.
கிளை இருந்தபோது இலை இல்லை.
இலை இருந்தபோது நிழல் இல்லை.

நிழலே நீ நிஜம் இல்லை என்றபோது
மின்மினி என்ன ஆயிரம் கதிரவன் கிழக்கே
முளைத்தாலும்
இது என் தாய் நிலம் என்பது மனதில்
முளைக்காமல்.
பெரும் விருட்சத்துக்கிடம் இல்லை.
அதை விதைக்கவும் வளியில்லை.
பதம் இழந்த தரை கள்ளியும் முளைக்கும்.
காரையும் முளைக்கும்.
அதை சொந்தம் கொள்ள யாருக்குரிமை.
நம்பிக் கெடாதீர்கள்
நாயும் ஊழையிடும்.
கள்ளியிலும் பால் வடியும்.
பாம்பும் தேளும் ஓர் ஜாதி.
பருந்தும் கழுகும் ஓர் ஜாதி.
அரசும் அவன் அரக்கனும் அவன்.
இரக்கம் கிடையாது உனக்கு...

நான் இன்றோடு மௌனிக்கிறேன் சில காலம்.
என் எண்ணங்கள் சீர் செய்கிறேன்
எனைத்தேற்ற
காலம் எல்லோரையும் அளவிடுகிறது.
நான் என்னை அளவிடுகிறேன்.
என் முகவரியைத் தேடிக்கொள்ள
நான் நன்றி சொல்ல என் பட்டியலில் பலபேர்.
அவர்க்கெல்லாம் வெறும் நன்றி சொல்லி மாழாது.
அவர்க்கு என் விசுவாசமும் இருக்கிறது.

காதல்

காதல்
விழியில் விழுந்து இதையம் நுழைந்து
உயிரை வருடும்
உளநோய் இரவும் பகலும் ஏக்கம் வளர்த்து
உண்மை உலகை மூடிமறைத்து
கண்ணை அள்ளும் விம்பம்.
மருந்தும் இல்லை மாற்று நிகராய்
விருந்தும் இல்லை.
இருந்தும் மனம் விம்பும்.
இது வாழ்க்கை முழுதும் வசந்தம்.
வந்தால் போகாது சுட்டாலும் வேகாது.
முதல் தொட்ட காதல் நீ இட்ட முத்தம்.
பித்துக்கொண்டால் புத்தன் ஆவாய்.
பற்றுக்கொண்டால் ஞானியாவாய்.
காதல் வாழ்க்கை தன்னைக்கடையும் மத்து.
அது திரைந்தால் தொலையும் உன் வாழ்க்கை...

நீயே உனது பாடம்

வார்த்தைகள் அனைத்துக்கும் கட்டுப்படு.
அது வம்புக்கு இழுப்பின் விட்டுக்கொடு
யாருக்கும் அன்பைக் கற்றுக்கொடு.
கிடைத்ததை எண்ணி திருப்திப்படு.
பசித்தோர் கேட்டால் உண்ணக்கொடு.
அடுத்தவர் பொருளை விட்டுவிடு.
அகந்தை தன்னைச் சுட்டுவிடு.
அறிவோர் முன்னில் தாழ்ந்துவிடு.
அவைகள் தன்னில் அடங்கிவிடு.
சபையை உன்பால் அடக்கிவிடு.
பெரிதோ சிறிதோ அரிதோ எனினும்...
வறியோர் உழைப்பை (எழியோர் பறிப்பின்)
பறிக்காதே!
கொடும் சாபம் தம்மைச் சேராதே உன் சந்ததிக்கே
அது சாரும்...

என்கான வாழ்வெங்கே

எனக்காக நானும் உனக்காக நீயும்
ஓர் நாளேனும் வாழ்ந்ததுண்டா?
எதற்காகவோ எமக்கானதைவிட்டுவிட்டோம்.
அதற்கான பலன் கண்டதுண்டா?
உற்றார் உறவிற்காய் ஊர் உவமைக்காய்
பெற்ற எம் பிள்ளை மனைவிக்காய் முற்றும்
மனம் துறந்து பற்றில்லாப் பற்றைப்
பற்றிக்கொண்டோம். பிறவிக் கடன்
தீர்க்கவந்தோம் பிறவியிலே என்ன கண்டோம்.
துறவியாவது மேல் நீ வாழ்நாளில் கண்ட இன்பம்
எதுவென்று சொல்? காசு பணம் சேர்த்தபோதா
பொன் பொருள் சேர்த்தபோதா ஒன்றுக்கு
இரண்டென்று பிள்ளைப் பேறு பெற்றபோதா?
எதுவும் உனக்கானதல்ல. உன் சுகம் உன் சுகந்தம்
எது. அதற்காக நீ என்ன செய்தாய்?

உன் நாட்களைப் புரட்டிப்பார். உன்னை அறியாத
ஓர் தவிப்பு எங்கோ ஒழிந்திருக்கும்.
காலம் கெட்டுவிட்டது என்று கலங்காதே.
சரித்திரம் சொல்வதற்கு சாணக்கியனா நாம்
சாமானியன். எம் வாழ்வுக்கு எது சுகம்?
சொல்லி அடங்காத சுமைகளே
இன்றும் எம் வாழ்வுக்கு நிரந்தரம்.
ஒரு நாளேனும் உனக்காக வாழ்.
உன் சுமைகளை மூட்டை கட்டு.
சேகரித்த தெல்லாம் செருப்புப்போல
பயணிக்கும்போதும் வாசலோடும்
படுக்கை அறைக்குள் இல்லை.
சிலசமயம் உன் காலையும் கடிக்கும்.
உனக்கென்றது நாளை எனக்கு.
எனக்கென்றது கைவிட்டுப்போகும்.
எதற்காக ஏங்குகிறோம்
அதற்கான முடிவு எட்டவில்லை.
வாழ்நாளை எல்லாம் தொலைத்துவிட்டு
வருங்காலம் என்று ஏங்குகின்றோம்.
உன்னை நீ அறிந்துகொள்.
உன் பயணப்பாதையை புரிந்துகொள்.
சொர்க்கமும் நரகமும் இங்குதான்.
எதுவேண்டும் தேடிக்கொள்.
காணாத உலகுக்காய் கனவுகாண்கின்றாய்.
கண்டு வாழும் உலகிலே ஏன் வாழ மறுக்கிறாய்.
சடங்கு சாத்திரங்கள் தடுக்கிவிடும் காலம் இது.
உன் மடமையின் விழிம்பிலே
மதங்கள் முளைவிடும்.
உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றவர் இரத்தத்தின்
சாயம் மாறுமா?
எப்பொழுதும் நற்பொழுது
காலத்தை பொழுதைத் தேடாதே
உனக்கானதாய் மாற்றிக்கொள்
வாழ்நாள் வசந்தம் வசப்படும் அன்றே.

மலர்ந்த காதல்

காதல் எப்படி மலர்கிறது
உன்னை அறியாத தேடல் உள்வாங்கிக்
கொள்கிறது.
காதல் என்றும் காமம் என்றும்
இருவகைப்படுகிறது.
காதல் விலக விலக வீரியம் கூடுகிறது
காமம் நெருங்க நெருங்க விபரீதம் ஆகிறது.
காமம் என்பது கொச்சை
காதல் என்பது மோட்சம்.
அதுவே இன்நாளில் சர்ச்சை
இரண்டுக்கும் இடைவெளி தெரியாமல்
போவதுதான் சலனம்
சல்லாபம் எனப்படுகிறது.
உனக்குள்ளே நீ தொலைந்துபோவதும்
உன்னை அறியாமல் நீ உலவிக்கொள்வதும்
காதலின் தருணம்.
மரணத்தையும் சாடி நிற்கும்
இருவால் கொள்ளிபோல் எங்கு தொட்டாலும்
எதில் பட்டாலும் பற்றிக்கொள்ளும்.
காதலுக்கு முள்ற்றுப்புள்ளி என்பது கிடையாது.
காலம் செல்லச் செல்ல இளமை கொள்கிறது.
இனிமை ததும்புகிறது.
அதனால்தான் கசப்பானாலும் இனிக்கிது.
கடுப்பானாலும் மனம் கவர்கிறது.
ஒரு வஞ்சிக்காக ஒரு வன் நெஞ்சம்
பஞ்சுப்பூவாகிறது.
அவள் இல்லையேல் கஞ்சியும் வெறுக்கும்
கற்கண்டும் கசக்கும்.
காலம் எல்லாம் இருண்டுபோகும்.

கனவு காணக்கூட கண் வெறுக்கும்.
அதுவே அவளே ஆனால்
கள்ளியிலும் நெய்வடியும்.
காக்கையும் கானம்பாடும்.
உள்ளிருந்து ஒலிகேக்கும்
உணர்வுகளோடு சங்கமிக்கும்.
தென்றல் வந்து அரவணைக்கும்
தேகம் தீண்டி மெய்சிலிர்க்கும்
பருவத்தோடு வரவேண்டும் காதல்
உணர்வின் சங்கமம் உயிரின் ஆத்மார்த்தம்
காலத்தின் நெருடல் காதல் கருக்கொள்கிறது.
தொடர்ச்சியின் மலர்ச்சி முகப்புக்காட்டி
முத்தம் இடும்.
அதுதான் சத்துள்ள காதல்
மறுமலர்ச்சி என்றாலும் மறுபடி காதல்
வந்தாலும் அது மகந்தானதில்லை.
கற்பிழந்துபோகிறது.
முதல் காதல் முதல் முத்தம்
தித்திப்பது எப்படியோ?
அப்படி மறுகாதல் தித்திப்பதில்லை.
அது எச்சி என்கிறேன் நான்.
மனதைவிட்டுப் பிரியாதது
மனக்கூட்டுக்குள் புளுங்கும்
மரணம் வரை நீடிக்கும்
ஞாபகம் எல்லாம் மறுகாதலுக்கு ஏது.
காதல் நெம்புகோல் அழகு அளவிடை
பருமன் இல்லை.
அளந்து பார்ப்பதும் காதல் இல்லை.
சிறுகுட்டையில் நீர் குடிக்கும் காளை போல்
தாகம் எடுக்கும் தண்ணீர் குடிக்கும் முடறு
நனையாது. குன்றும் உறையாது.
கலைக்கு கலை காதல் செய்யும்
இதை அறிந்த காதல் அழியாது
ஜீவிக்கும் ஜீவ நாடி தேயும் வரை.

பள்ளிக்கூடம்

வான் உயிர்ந்த கோபுரங்கள் மறையலாம்
விழாக்கோலும் மண்டபங்கள் அழியலாம்
பிரளையத்தில் சிறுகிராமம் கூட அழியலாம்
நன்மைக்கென்றே ஓர் சில உயிர்கள் கூட
அழியலாம்.
ஒரு பள்ளிக்கூடம் அழியுமானால்
எம் சந்ததியின் வாழ்வழியும்.
ஒரு சமூகத்தின் உயிர்நாடி, உலகம் மூச்செறியும்
சத்திரம்.
மனித எதிர்காலப் பெட்டகம்.
பள்ளி அறை ஒதுங்காதவன் ஞானி ஆகலாம்.
பாடங்களைப் படிக்காமலே தலைவன் ஆகலாம்.
ஆண்டவனின் அருள் இருந்தால்...
முழு மனிதனாக வேண்டும் என்றால்
கல்விப்பாடம் வேண்டும்.
கல்வி இரு கண் என்பார்.
அதை கைஅளவேனும் கல் என்பார்.
உன் அழகை மாற்றும் உன் பேச்சைக் கேட்டுக்
கூட்டம் கூடும்.
பள்ள அறை கண்டிடாதார் வேப்பமரத்துப்
பேய் என்பார்.
சிவத்தப்பல்லி சொல் தீர்ப்பென்பார்.
பூனைவந்தால் தீட்டென்பார்.
வெறும் குடத்தோடு விதவை வந்தால் அதற்கும்
மேல் கதைசொல்வார்.
அடங்கு என்று சொல்லி அதை சங்கடத்தில்
முடித்திடுவர்.
பக்தி என்று பெயர் கலந்து பயங்கரத் தீ
மூட்டிடுவார்.
கல்வி கற்று உயர்ந்தவரிடம் கடவுள் ஏன் குறி
சொல்லி பேசவில்லை.
பிராமணப் பிள்ளையிடம் கடவுள் ஏன்

கலை ஆட வருவதில்லை.
கல்விக் கண்திறந்தால் கடவுள் பொய்
மனிதராகப் பிறந்தவர்கள் கடவுள் ஆகலாம்.
அந்தக் கடவுள் வந்து பிறந்துவிட்டால்
மறுபடியும் சிலுவை ஏற்றுவார்.
மடமை வாழும் உலகுக்கு கல்வி இரு கண்.
அந்தக் கல்விகூட இல்லை என்றால்
நிலமை என்னாகும்? எண்ணிப்பார்.
கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்
என்றாள் அந்நாளில் ஔவை
அங்கு பள்ளிக்கூடம் இல்லை என்றால் கோவில்
ஒரு கேடு.
பிரிவுகளை வளர்த்துவிடும்.
சாதிசங்கம் அமைந்துவிடும்.
தீண்டாமையைச் சொலில் தினம் உன்னைக்
கொல்லும்.
ஆண்டாண்டு காலமாய் அடிமை எனச் சொல்லும்.
அறியாமைக்கொடி பரவி
உன் சுயஉரிமையை வருடும்.
விலங்குக்கும் எனக்கும் எங்கு வித்தியாசம்
தெரியும்?
பள்ளிப்பாடம் இல்லையோ நீ கல்வி
கற்கவில்லையோ?
பகல் பொழுதும் இருட்டாகும்.
நீ கண் இருந்தும் குருடாவாய்.
மனிதன் மண்ணுக்குள் மக்கி
மண்ணாகிப்போவதா?
விண்ணையும் எட்டலாம்.
விடிவெள்ளி பார்க்கலாம்.
இந்த உலகத்தை உன்கைப் பிடிக்குள்ளே
வைக்கலாம்.
கல்வியை உந்தன் கண்ணாகக் கொண்டால்
காலமும் நேரமும் உனக்கமையும்
வாழ்க்கையில் வசந்தங்கள் வாசலில் நிற்கும்
பள்ளிக்குப்போனால் கல்வி பகிர்ந்திடப்போனால்

வாழ்க்கை

வாழ்க்கை எண்ணம்போல் வாழலாம்
எண்ணியதை அடையலாம்.
மனம் இரண்டும் ஒத்துக்கொண்டால் மாற்றுவளி
அடையலாம்.
என்பதெல்லாம் பேச்சுவாக்கில் சும்.
அது நடைமுறைக்கு அல்ல அறம்.
மனம் என்பது விலைபோகும்.
அது குரங்குபோல இடம்தாவும்.
சுள் என ஒரு சொல் சுட்டுவிட்டால்
தன் பெருமை பேதங்கள் பலகூறும்.
நல்லது கெட்டது எதுவாயின்
தன்வளி புனிதத்தை வசைபாடும்.
அன்புக்கும் அறிவுக்கும் போர்மூண்டு வம்புகள்
பிறக்கவம் வழிகோலும்.
மதமும் மதமும் சேரட்டும்.
இனமும் இனமும் சேரட்டும்.
மொழியும் மொழியும் சேரட்டும்.
ஒரு புரட்சி காண வேண்டும் என்றால்

இரு மனமும் சேரட்டும்.
பெருமை பேசிக்கொள்வதற்கு
மனிதன் வேற்றுக்கிரக வாசியில்லை.
தேன் எல்லோருக்கும் இனிப்புத்தான்
விசம் எல்லோருக்கும் நஞ்சுதான்.
ஒன்றைக்காட்டி ஒன்று ஒருவர் பால் சாடுவது
வெறுக்கத்தக்க ஒன்று.
நான் மறைவேதங்களும் அது சொல்லும்
பாடங்களும்
நாம் அதற்கொழுகவே
எது உன் இச்சை இனம், மதம், மொழி.
இவை என்றால் காதலும் அதன்படி அமையட்டும்.
காதலுக்காக சாயம் பூசி காலப்போக்கில்
சங்கடத்தில் வீழாதே.
நீடித்த அன்பும் பாசமும் வேண்டுமானால்
கூட்டுச் சேர்ந்த பயணமும் பகிர்ந்துகொள்ளம்
ஆற்றலும் நீடித்தே தொடருமானால்
வாழ்க்கையே அர்த்தப்படும்.
வாழ்வதற்கே ஆசைவரும்.
சீர்வரத்தைக் கேட்டுக்கொள்ளாதே.
கேட்டு உன்னை விற்றுக்கொள்ளாதே
கேட்டால் நீ அடிமை
கொடுத்தால் விலை உனக்கு.
உன் குடும்பத்தில் நீ தூரத்து உறவு
உன் உறவுக்கெல்லாம் அயலான்
மணவீட்டு மாப்பிள்ளை மந்திரிக்குப் போட்ட
ஆண்பிள்ளை.
பொதிசுமக்கும் கழுதை என்பேன்
சீதனம் தான் கேட்டுவாங்கி தனக்கு விலை
தீர்த்துக்கொள்வார்.
அவர் பாவத்துக்கு ஐயோ.

விவசாயம்

இந்த பூமியின் சுற்றலுக்கு உயிர்ச்சாயம் பூசுவது
விவசாயம்.
ஆதியில் மனிதன் வேட்டையாடினான்.
அதையே கட்டி மேய்த்தான்.
தானிய வகைகள் அறிந்துகொண்டான்.
அதை சேத்திலும் சதுப்பிலும் வளரவிட்டான்.
தேவைகள் எதுவென் அறிந்துகொண்டான்.
அதை தேக்கி தேக்கி வளர்ச்சிபெற்றான்.
நதிகளின் பாதையை சீர் அமைந்தான்.
குட்டையில் குளத்தினுள் தேக்கிவைத்தான்.
பல்கிப பெருகியது சனக்கூட்டம்.
உயிர் காத்து நின்றது விவசாயம்.
காடுகளும் தரைவெளி மேடுகளும் வளம் பெற்றன.
வேர்வைத்துளி விழுந்தது வேர்பிடித்து நின்றது.
அள்ள அள்ளக் குறையாமல் பூமித்தாய் மடி
சுரந்தது.
நாகரீகம் தோன்ற முன்னே நொய் நொடி
கிடையாது.
மருந்தும் விருந்துமாய் அறுசுவைகிடைத்தது.
இயற்கையின் அரவணைப்பில் மண்ணைத்
தோண்டி தன்னிறைவுகாணாத மனிதன் வான்
கூரை கிழித்தான்.
இயற்கை சினந்தது.
அருமருந்தானதெல்லாம் அருகிப்போனது.
கட்டுப்பாட்டை இழந்தமனிதன்
கணக்குவைத்துக்கொள்ளவில்லை.
காடு மேடு வயல் வரப்பெல்லாம்
வீடுகட்டிக்கொண்டான். விளைநிலத்தை
ஈடுவைத்து கணக்கின்றி தோட்டம் அமைத்தான்.

சேர் உளக்கி சேற்றுவயல் ஆடி வேர்வை குழிக்கும்
விவசாயியுயின் வயிற்றில் அடித்துத் தன் தலையில்
மண்வாரி தூவிக்கொண்டான்.
களனிக்கும் உலகம் என்றான்.
கைஅடங்கிப்போகும் என்றான்.
ஒரு சோற்றுப் பருக்கை விளைவிக்க முடியாத
கணினியால்
வரும் காலத்தை நிர்ணயிப்பது எப்படி
விவசாயி சேத்தில் கால் வைத்தால் நான் சோற்றில்
கை வைப்பேன்.
அவன் வயிற்றில் கைவைத்தால் உலகம்
தூக்கில்தான் ஏறும்.
விண்வெளி போறவரே அங்கு நெல்மணி
விளையுமா?
தாகம்தான் தணித்திட ஊற்று நீர் கிடைக்குமா?
அங்கு காற்றுத்தான் வாங்கிட தென்றலும்
இரக்குமா?
சொர்க்கம் இந்த உலகைவிட்டு
நரகம் தேடிப்போகிறார்.
மனிதன் அறிவில் உயர்ந்துவிட்டான்.
வாழ்க்கை தன்னை இழந்துவிட்டான்.
அணுஉலையில் சோறு பொங்க.
வேற்றுக்கிரகம் தேடுகின்றான்.
செவ்வாய்க்குப் போனாலும் சுடுசோறுவேணும்.
இங்கு விவசாயம் இருந்தால்தான் அங்கு
குடியேறமுடியும்.
ஏரும் கலப்பையும் தரைகளிக்கவேண்டும்.
ஏழை விவசாயி அவன் சிரிக்கவேண்டும்.
வயலும் வரப்பும் தான் உயரவேண்டும்.
கோனும் குடியும் நிறைவடையவேண்டும்.
உலகம் அதுவே தான் சிறக்கவேண்டும்.
இயற்கை வளங்கள் வரம் கொடுக்கவேண்டும்.
அணுவில் கணிப்பொருள் எதற்கு விவசாயம்
ஒன்றே கடன் அடைக்கும்.

பணம்

வசதிபடைத்தவனின் தூக்கம் இன்மை
வாழத்துடிப்பவனின் கனவு.
வாங்கலாம் விக்கலாம்
உன் உயிரையும் உனைப் பெற்ற தாயையும் தவிர
அச்சடித்த தாழுக்காய் மொய்த்துக்கொள்ளும்
சனம்.
இரத்தபாசம் விட்டெறிந்து முட்டிக்கொள்ளும்
தினம்.
காசிருந்தால் செவிமடுக்கும்.
அது முடிந்தால் கால்மிதிக்கும்
பணம் என்பது பகுத்தறிவா?
வம்பை வரவழைக்கும்.
வாழ்கை அது பறிக்கும்.
நம்பிக்கை குறையச் செய்யும்.
எண்ணிய நடந்ததுபேர் மாயத்தை திரை
அமைக்கும்.
தூக்கத்தை கண்ணில் வைத்து ஏக்கத்தால்
மழுங்கடிக்கும்.
நீ குபேரன் தான் ஆனாலும் தெளிவுக்கும்.
பயன்படாத பணம் மனிதனை மிருகம் ஆக்கும்.
வயது தராதரம் கண்டிராது வளக்கத்தை மாற்றும்.
வசதிகள் வந்துவிட்டால் தன் நிழலைக்கூட
நம்ப மறுக்கும் பணம்.
மனிதன் தேடி அலைகின்ற சாபம்.

வெளிநாடு

பேதலித்துப் போனவர்க்கு கரம்கொடுத்த ஊர்
எம் சுய உரிமை சுறண்டாமல் ஆதரித்த ஊர்
சாதி மதம் கேளாமல் வாழ்வு தந்த ஊர்
யாவரும் ஒரு குடி என வாழ்கின்ற ஊர்
வந்தவர்க்கும் வாழ்பவர்க்கும் சமத்துவத்தை தந்த
ஊர்

மனித மகத்துவத்தை ஆதரிக்கும் ஊர்
தத்தம் மொழிகளுக்கு தடைகள் இல்லை.
கடவுள் முறை பிரிவு இல்லை.
குடில் அமைக்கலாம் கோவில் கட்டலாம்.
பஜனை சொல்லியே பாட்டுப்படிக்கலாம்.
அடக்குமுறையில்லை. பாடம் கற்றிடத்
தகுதியில்லை.

பாப்னர் சூத்திரர் பிரிவு இல்லை
கறுப்பென்றும் சிவப்பென்று ஒதுக்கவில்லை.
கௌரவம் பார்க்கின்ற மனிதர் இல்லை.
உடலும் வெள்ளை உள்ளமும் வெள்ளை
அவர் அன்பால் நாம் இங்கு வாழ்கின்றோம்.
நாம் எட்டிவிடாத இடத்தில் அவர்கள்
நாம் கெட்டித்தனம் பேசுகின்றோம்.

இன்று வரை அமைதியில்லை
தூள்பறக்கப் பேசுகின்றோம்.
அடுத்தவனைச் சாடுகின்றோம்.
எடுத்ததெல்லாம் குற்றம் எனக் குறை சொல்லித்
திரிகின்றோம்.
அடுத்தவனைக் குழிபறித்து பொறுப்புச் சொல்லப்
பார்க்கிறோம்.
எனக்கு என்று சேர்க்காமல் பிறர் தலையில்
சேர்க்கின்றோம்.
என்கோப்பை நிறைந்துவிட்டால் போதும் என்று
நினைக்கின்றோம்.
தாகத்துக்கு நீர் கேட்டால் தண்ணீர்
தரமறுக்கின்றோம்.
பல வசதி பெற்றபோதும் வாய்ப்புக்கள்
கேட்கின்றோம்.
இரத்தபாசம் ஒன்றுதான் உறவென்று
நினைக்கின்றோம்.
சத்தியத்தை நாம் மறந்தால் நற் சமூகம்
தளைப்பதெப்போ
கத்தியில்லை இரத்தம் இல்லை யுத்தம் கூட
இங்கு இல்லை.
என் தாய் நிலத்தை நேசிக்கின்றேன்.
அதனைப்போல் காதலிப்பேன்
எமக்கு வாழ்க்கை தந்த வெளிநாடு.

சிவப்பு றோஜா

துப்பாக்கி குழலில் றோஜாப் பூ
தப்பேதும் இல்லை பூக்கலாம்.
காதல் வாடை வீசுமா?
கோடைகாலத்தில் காந்தள் பூ பூக்குமா?
கல்லறைகளிலும் குறிஞ்சி மலர்
நெருஞ்சிப்பூக்களிலும் வாசம் வரும்.
அவைகளை நெருக்கித் தைத்தது என்னவோ.
துறவிக்கும் சன்னியாசி சித்தருக்கும்
உயிர்மேல் காதல்வரும்
வாழ்நாள் நிலைக்கும் என்ற ஆசைவரும்.
சாவைக் கண்டு சலித்திடாமல்
உயிர் போகும் என்று நினைத்திடாமல்
தாய்மண்ணை இங்கு காதலித்தால்
அதைப்பாவம் என்று சொல்வதேன்?
உயிர்போகும்வரை கொல்வதேன்.
என்னைப்போல் உன்னைப்போல்
அவர் வாழ ஏன் நினைக்கவில்லை.
ஒரு அவதாரம் என்பது சாதாரணம் அல்ல
இறைவன் அனுமதித்த தூதர்கள்
ஆசைபாசம் அறுத்தெறிந்தனர்.
காதல் நட்டு வெறுத்துவிட்டார்
அலைகள் மோதும் மாலைகள் ஆனார்.
கடல் அரித்திடாமல் நிலச் சுவர்கள் ஆனார்.

ஓலை

பட்சிகளும் கர்ச்சிக்கின்ற மிருகங்களும்
காதல் சினைப்பெடுக்கும் ஆசையில் அவதரித்த
மனிதனுக்கு காதல் வராமல் போகுமா?
கண்கள் குருடாகும் வயது
காற்று அத்து மீறும் அந்தரங்கள் தொட்டுப்பேசும்
வாயக்கு வந்தபடி வான்நிலவும் கவிதைபேசும்.
காதல் உணர்வெல்லாம் இவர்களுக்கும்
வந்திருக்கும்.
இலட்சியத்தின் வேர்களுக்கு பாத்திகட்டி
விதைத்துவிட்டார்.
துப்பாக்கிக் குழலில் பூக்கட்டும் ஒரு றோஜாப்பூ
காற்று உலர்த்தாமல் சுரக்கட்டும் மகரந்தத்தேன்.
அது போதை ஊட்டப்பட்டும் மனதின் உவாதை
ஆற்றட்டும்.
காலம் இதற்கு கணக்கு வைத்துக்கொள்ளுமானால்
நேரம் பார்த்து இவர் இலட்சியம் பூக்கட்டும்.

பெண்

அடுப்பூதப்பிறந்தவள்.
பிள்ளைபெறும் இயந்திரமா?
களியாட்டக் கன்னிகையா?
காமத்துப் பால் மொண்டும் சாமந்தித்
தேன் குடமா?
நாளும் இவள் புலம்பலுக்கு தரணியில்
விடிவில்லையா?
பரணிபாடும் புலவர்களுக்கும் கவிதை ஊறும்
நீர்க்குளமா?
அங்கு கால் அலசிப்போக எண்ணும் ஆடவர்க்கு
மங்கை கண்ணீர் கங்கையா?
பிறப்பும் இறப்பும் என்பது ஓர்நாள் பொழுதின்
பாடம்.
அதைக் கருத்தில் நீ வைத்துக்கொண்டால் சிறக்கும்
உன் வரம்.
இயற்கை கொஞ்சும் எழில்களுக்கு மங்கை அவள்
பெயர்.
மானிடத்தை மெருகேற்ற நானிலத்தின் வேர்.
அவதாரம் எடுப்பதற்கு ஆம்பிள்ளைக்கு நேர்
அவள்தானே அந்தம் ஆதி அத்தனைக்கும் உயிர்
கொடுக்கும் தாய்.
அவள் கண்ணீர் அது கரைக்கும்

சூரியனையும் சுட்டெரிக்கும்
என் பழு எலும்பின் முனை அவள்.
எனை அறிந்த கடல் அவள்.
ஆசைகளும் எண்ணங்களும் முடிவில்லா
அலை அவள்.
அறிவுக்கும் அறிவுரைக்கும் வாழ்க்கைத்
தேர் ஓட்டி அவள்.
கருவாக்கி உருவாக்கி சீராட்டிகண் அயராது
தாலாட்டி
தான் நினைந்து பால் ஊட்டி இறைமைக்கு
நிகரான பெண்.
எந்த இறை தூதன் பிறந்தாலும் அவனுக்கும்
தாய் பெண்.
அந்தி பகல் நொந்து பெற்று வெந்ததெல்லாம்
பந்தி பகிர்ந்து
மிச்சம் மீதி தானும் நுகர்ந்து வரவு செலவு கூட்டில்
இணைந்து வருவதெல்லாம் கடைந்து திரிந்து
வாழ்க்கை என்னும் நெட்டி முறித்து
குடும்பம் என்ற குத்துவிளக்கில்
அன்பு என்னும் எண்ணை ஊற்றி
வெளிச்சம் எனும் விருட்சம் காணும் பெண்
ஓர் சந்ததியை வளர்த்தெடுத்து
எதற்கும் ஈடு இணையற்றவள் பெண்.
மண்ணில் நல்லவை வாழலாம்
எண்ணில்லா இன்பமும் கூடலாம்.
கரையில்லா பொன் பொருள் சேரலாம்.
கரைபுரண்டு தேன்பால் ஊறலாம்.
அந்தி மயங்கிட வானவர் உலாவலாம்.
எண்ணம் நிறைந்திட யாவையும் கூடலாம்.
ஒரு கன்னி இல்லை எனில் இங்கு என்னதான்
இன்பம்.

புத்தாண்டு

உதித்த ஆண்டிலே
நினைத்த கனவெல்லாம்
முளைத்து மரமாகட்டும்.
இளைத்த பணி எல்லாம் உதிர்ந்து சருகாகட்டும்.
புதிது புதிது எல்லாம் புதிது.
இனிது இனிது எல்லாம் இனிது.
காண்பதும் கேட்பதும் உரைப்பதும் நன்றே.
நல்முறைப்படி வாழ்ந்திட உழைப்பது நன்றே.
சோகங்கள் சோர்வுகள் அறுவது நன்றே.
மோகங்கள் தாபங்கள் கலைவது நன்றே.
மதபேதங்கள் சாபங்கள் அறுவது நன்றே
மானிடர் ஆகவும் மனுநீதி சேரவும் வாழ்வது நன்றே.
கிளி நீ என்றும் நான் என்னும் அகந்தைகள் நீங்கி
நாம் எனவாழ்வது நன்றே.
வாழ்ந்தார் மண்ணில் மாண்டார் என்ற இழிவினை நீக்கி
நம் வாழ்நாள் பெருமை வரும் சந்ததி பேச ஓர் நாள்
ஏனும் வாழ்ந்திடவேண்டும்.
ஒருவரை ஒருவர் ஆற்றிடவேண்டும்.
ஒன்றே குலம் என ஏற்றிடவேண்டும்.
ஒரு தாய் மக்கள் ஆகிடவேண்டும்.
ஒன்றே தேவன் வணங்கிடவேண்டும்.

மகள்

பொன் உண்டு பொருள் உண்டு
பூமி நிலம் சீர் உண்டு பூப்புண்டு துறவுண்டு
கொண்டு செல்லா சொத்துண்டு.
ஊர் உண்டு உறவுண்டு
உடன்பிறந்தார் உற்றார் தான் பலர் உண்டு.
அன்புண்டு அறிவுண்டு பண்புண்டு பணிவுண்டு
அகந்தை இல்லா உள்ளம் தான் உண்டு.
யார் கண்ணும் கொள்ளாத இறைவனை நான்
தேடிக்கண்டதுண்டு.
இருப்பினும் நெஞ்சத்தில் நீங்காத குறைஉண்டு
என் சந்ததிக்கு ஒரு மகள் இல்லவே இல்லை
என் கவிதைக்கு ஒரு பொருள் இல்லவே இல்லை.
என் உழைப்புக்கு ஊதியம் இல்லவே இல்லை
என் வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லவே இல்லை
என் வாழ்க்கையில் இன்பம் இல்லவே இல்லை.
என் வசந்தங்கள் யாவும் இல்லவே இல்லை
ஒரு மகளை மடியினில் பெறாதபோது
இந்த ஜென்மத்தில் நிறைவொன்றும்
பொருள் என்றும் உண்டோ..?

நீர்

கண் நகத்தில் இரு புண் என்போர்க்கு
கண்ணீர் மருந்து
மனம் ஆற்றவும் தேற்றவும் காணிக்கை என்றது.
நாதி அற்றவற்றுக்கும் நீதி அற்றவர்க்கும்
அடையாளத்தின் சின்னம்.
வரும்போதும் சொல்லிக்கொண்டு வருவதும்
இல்லை.
போகும்போது மனம் ஆற்றாமல் போனதில்லை.
இன்பத்திலும் வருகின்றாய் துன்பத்திலும்
வருகின்றாய்.
ஏவல் இடம் பொருள் பார்த்து மனங்களைக்
கரைக்கின்றாய்.
மனிதன் விதைக்கும் நீருக்கு கண்ணீருக்கு பலம்
அதிகம்
அது ஜெகத்தையும் அழித்துவிடும்
மனிதன் உழைக்கின்ற வியர்வையின்
துளி உயர்கின்ற எண்ணத்து வேருக்கு நீர்
மனித நீர் ஓர் ஜெகத்தின் அடிப்படை வேர்.
நீரில் தொடங்கி நீரில் முடிகிறது.
மனித வாழ்வும் மச்சம் தான்.

ஒலை

கருவில் பத்துமாதம் தண்ணீரில்
முடிவில் பற்றும் இழந்து தண்ணீரில்
உலகம் தோன்றயில் தோன்றியது
மரம், கல், மண், காற்று
இவைகளுக்குக் கரு நீர்
ஓடு இல்லை இவை மச்சங்களும் இல்லை.
பின் நீர் தோன்றியது
அதில் மச்சங்கள் தோன்றின.
அவைதான் மனித மாமிசம் ஆகின.
அதன் எச்சம்தான் மனிதன்.
பெண் கன்னிக்குடத்தில் மச்சங்கள் ஆகத்
தோன்றினான்.
ஆய்வுகள் என்னவோ ஒன்றை ஒன்று சொல்லும்
ஆதாரம்.
ஒன்றுதான் இந்தக் காலத்தை வெல்ல
விஞ்ஞானக்குடுவையில் பிறந்தாலும்
குலம் வேர் என பிரிந்தாலும்
ஜெனனம் என்பது நீர்
இவ் உலகம் முழுமை கொண்டதும் நீர்.

தை

மாதம் பன்னிரெண்டில் மகவு பெற்றால் மார்கழி.
காலம் கனிந்து வளங்கள் குவிந்திட பிறந்தது தை
மாசிக்கு தாய் பங்குனிக்கு பேத்தி எங்கும் வளம்
நிறைத்து திங்கள் முதல் நாளில் எங்கள் திருநாள்.
ஆண்டின் பிறப்பு ஐஸ்வரியத்தின் முனைப்பு -
அலக்கழித்த
நாள் மறைந்து பூ துளிர்க்கும் மாதம் தை - ஏரும்
எருதும்
விடிகாலைக் கதிரவனும் காலப்பழு நீக்கி
கோலமயில் ஆடும்
சாலப்பெருவெள்ளக் காமதேனு போதும்
எனும் சொல்லே
குறை தீர்க்கும் குடமாகும்.
அதைப் புகழ்பாடும் பொங்கல்.
திருநாள் தமிழர் எம் பெருநாள்.
நெஞ்சப் பெருவெள்ளம்
பொங்கட்டும் எங்கும் புது இன்பம். புதியவை
வரவளைத்து
பழையவை ஓயவிட்டு இனியவை கூட்டுச்சேர்த்து
எழுதியவை

காணட்டும் இந்நாள். எண்ணத்தில் நின்மதி
ஏற்றத்தில் வான்மதி
வாழ்க்கையில் முழுமதி ஆகட்டும் இந்நாள்.
எதிரிக்கும் இரங்கி பகைவர்க்கும் உருகி
காலத்தைக் கணிப்போம்.
வேதத்தை அறிந்து வேண்டுதல் புரிந்து கொடும்
சாபத்தை அழிப்போம்.
வயலும் வரப்பும் மழையில் உயர்க.
குடியும் கோனும் உழைப்பில் உயர்க.
நட்பும் பண்பும் குறைவிலா துயர்க.
நாம் ஓர் குடி என நித்திலம் உயர்க.
சாதிகள் சமயங்கள் சாய்த்து நாம் உயர்க.
வாதை இன்னல்கள் மறந்து நாம் உயர்க.
வாழும் இந்நாளே இனிதென உயர்க.
யார்க்கும் ஒன்றாகி ஒருவர்பால் அன்பாகி
தூற்று மனம் அருகிப் பூக்கட்டும் புத்தாண்டு.
வாழ்த்துவோம் நாம் ஒன்றிணைந்து வாழ்க
வாழ்க...

விருந்துண்டு களித்துப்போவதல்ல இந்நாள்.
வியாக்கியானம் பேசி, விவாதங்கள் ஏறி
கருத்துக்கள் பகிர்ந்து
சிந்தனைகள் உள்வாங்கி, செயல்பாட்டுத்திறனை
அடுத்தாண்டு வரை கொண்டு செல்லும்
முன்நோட்டக் கலந்துரையாடல்.
எம்மவரின் பங்கு எவ்விதம் அமையவேண்டும்?
நாம் எவ்வண்ணம் பின்பற்றவேண்டும்?
நாம் எதை எல்லாம் கருத்தில் கொள்ளவேண்டும்?
என்பவற்றை எல்லாம் அதன் ஜாப்பின் மூலம்
கண்டறியவேண்டும்.
எமக்கிடையான புரிதலை விரிவுபடுத்தவேண்டும்.
கருத்துச் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
தனிநபர் செயல்திறனை பரிசீலிக்கவேண்டும்.
பிரிவினைச்சாயம் பூசாமல்

பார்த்துக்கொள்ளவேண்டும்.
நாமே பாதை வகுக்காமல்,
சேர்த்துக்கொள்ளவேண்டும்.
காலம் சில பாடத்தைக் கற்பித்தது.
இத்தனை ஆண்டுகள் தடுமாற்றம்
இல்லாத நிருவாகம் இப்போது சில வாதைகளுக்கு
உள்ளாகி உள்ளது.
ஒருசில மனோபாவ சிந்தனைகள்.
எம்மில் சிலர் தலைகளையும் உறுட்டுகின்றது
சம்பந்தம் இல்லாமல் பலி ஆகின்றோம்.
எதற்கும் எவர்க்கும் விரோதிகள் இல்லை.
நாம் நடுநிலைவகுப்பதில்லை.
செய்க நற் செயல்களை வரவளைப்போம்.
அது எம் உரிமை.
இருப்பினும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.
அது எம் கடமை.
நத்தார் தினத்தில் ஒன்றுகூடல் என்பது
சிரமம்தான்.
நாம் வாழும் நாடுகளில் அதனைக்
கொண்டாட்டமாக மாற்றினால் எவ்வளவு
இன்பம்.
எல்லோர் இடத்திலும் மாற்றத்தைக் காணலாம்.
ஒன்றுதான் எமது பாதை.
ஒன்றுதான் எமது பயணம்.
எல்லாம் எம் ஊரவர்க்கே.

(எவரது விமர்சனமும் என்னை பழுதுபார்ப் பதில்லை. என்னைத் திடப்படுத்துகின்றது. என் எழுத்து ஓயாது நாம் ஒன்றுசேரும்வரை)

கனவுக்குள் கற்பனை

கனவுக்குள் அன்று கற்பனை செய்தேன்
கார்மேக மேகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்
இடிமின்னலுடன் மழைதந்ததே அன்று
வானத்தில் காய்கின்ற விண்மீன்கள்
வீழ்ந்ததாய்க் கண்டேன்.
அண்ணாந்து பார்த்தோர் பட்டியல் சேர்த்தேன்.
கைநிறைந்தபின்புதான் என்னையும் பார்த்தேன்.

கற்பனை செருக்கில் வானத்தைக் கிழித்து
வானத்து நிலவை பூமிக்கு அழைத்து
பூச்சூடப்பார்த்தேன்.
வானவில் ஒன்றும் திரள்மேகம் ஒன்றும்
சம்மதம்தந்தபின்
சௌக்கியம் கேட்டது வெண்ணிலா.
அன்றே முகில் போர்த்திக்கொண்டது.

பிறைபூக்குமோ? முகம்காட்டுமோ?
கற்பனை வெள்ளத்தில் இனிக்காயாது என்நிலவு.
முக்காடு போட்டென்னை கற்பனை செய் என்றாய்

வர்ணிக்கும் வார்த்தை எனக்குள் நுழைந்தால்
யார் என்பது?
கண்டது கனவு கண்களில் பதிவு
விம்பத்தில் ஆடும் தோறணமோ? நான் தொழுவம்
கொள்வது யாரிடமோ?

சிறுமனக்கூட்டுக்குள் பெருமணல் கொண்டு
செடி ஒன்று வளர்த்தேன்.
நறுமணம் கொண்ட மலர் ஒன்று கண்டு கைப்பற்ற
எத்தனித்தேன்.
முள்பட்டு கைவிட்டு சீ... என்று விட்டுவிட்டால்
எனைப் பற்ற யார் வருவார்?
அதை பூஜைக்கு விட்டிட்டேன்.
கனவாய் கலைந்தது கனவுகள்...
இனி விழுமா நெஞ்சுக்குள் விழுதுகள்?
திடமாய் சொல்லவும் திடம் இல்லை.
காதல் திணிக்காத நெஞ்சுக்குள் வரவில்லை.
பிரம்மா உன்னை நான் கேட்கின்றேன்
அனுபவம் உனக்குள்ளும் இருக்குதா?
என்னோடு இதனை விட்டுவிடு மற்றோர்
உள்ளத்தை வாழவிடு.

மரத்த மனம்

எண்ணம் கொஞ்சம் எட்டிப்பார்த்தது
என்னைக் கொஞ்சம் தட்டிக்கேட்டது.
பூவோ பிஞ்சோ வாசம் தந்தது.
மௌனம் கொள்ள வார்த்தை தந்தது.
புருவம் விலக்கி புரளும் விழியில்
உறையும் கனவின் படையும் நீக்கி
தடையம் தேடிப்பார்த்தேன்.

திடமாய் இல்லை வரவேயில்லை வார்த்தை.
கொஞ்சம் சூடு சித்தன் என்னை பித்தம் கொஞ்சும்
வாரத்தை அள்ளித்தூவும் தென்றல்பட்டு
தொங்கும் பட்டுத் தோறணம் என்றாடும்
சில கண்கள் பட்டு என்னைத் தொட்டு
காதல் என்று கூறும்.
என்னமோ இன்று என்வசம். தந்ததோ என்ன
சம்மதம்.
கொஞ்சம்தான் மனம் பிஞ்சுதான்
வெம்பித்தான் சினம் கொண்டிட்டேன்.
அன்பிலால் கருங்கல் அல்ல என்னில் வந்த
ஏப்பம்தான்.

தட்டிக்கேள் கொட்டிக்கொள்
தேள் கொட்டிட்ட தேகம்
இனித் தீண்டினால் பாவம்
சச்சரவொப்பற மற்றவர் கைத்தொழ
முகத்துக்கொரு மூடி கற்பனை மேல் எழ
அந்திமதி சாரலில் வெம்பினேன் ஒரு நொடி
என்னமோ என்னை எண்ணத்தான் சொல்லும்
தின்னமோ நான் தீண்டுவதென்பது சொல்லவோ
கொஞ்சம் கூரலின் சாரல்
சொல்லிட நீ தூதரின் சீடர்.
விட்டிடு போதும் பட்டது நாள் ஊருக்கு ஊர்
ஒப்பென.

நேற்றைய பார்வை

வைகறையின் ஓரத்திலே
மெய்மறந்து பார்த்திருந்தேன்
வெண்ணிலவை பெண் உடையில் நேற்று.
அதன் புன்னகையில் சொல் முறைத்து
என்னிடத்தில் பூக்குதடி
சங்கத்தமிழ் சொல் எடுத்த பாட்டு

கண்ணசைவில் பரதம்
புன்னகையில் ராகம்
சொல்லிடையில் வேதம்
மெல்லிடையில் அரபம்
என்கண் எதிரே புருவம்
கண்டுதினம் மாழும் உன்னடியில் எண்ணம்.

கேளாமல் பிறந்தது கேட்டு வளர்ந்தது.
பாராமல் இருப்பேனோ
பாவையே உன்முகம் அற்புதம்
நீ எனக்கு சொற்பதம் போல் இருக்கு
உடன் கட்டவிழ்ந்தோடுவது கவி

சொர்க்கத்தின் வாசலே பக்கத்தில் வந்தது.
மாங்கனிச் சாறும் மகரந்தத் தேனும்
பருகிக்கிடந்தது.
மாணிக்கப் பந்தலில் தேன்கள் போலே மனம்
புரியாமல் தடுமாறுது
மாதர் மணிமுடியோ காப்பிய நாயகியோ?
கண்டிடும் காலனைக் கொண்டிடும்
பார்வையோ என்னையும் இழுத்தது
உன் குரல் சிரிப்படி.
பிரமித்துப் பார்க்கின்றேன் சிற்பங்கள் ஏதடி
உன்பக்கத்தில் வந்தால் சொக்கித்தான் போமடி
வான் வெளிமேல் அலையும் மேகங்களே
வானம்பாடிகளைக் கூட்டி வாருங்களே!
என் தேவியின் தேன்மொழியை தமிழ்பாவில்
தாருங்களே.

குமுறல்

காதல் ஓர் விஷமருந்து
குடித்தேன் தேன்மனது.
வேதியன் குடித்தானே பாதிதான் அவன் உடம்பு
பார்த்திட பழகின பால்ரசம் ஊறுது
பாவையர் பார்வை பார் என்று கூறுது.
என்பிழையில்லை தண்டனை என்னைத்
தண்டிப்பார் யாரு?
உண்மைதான் தீர்ப்பு நீ உத்தமன்தானா?
தப்பென்று சொன்னால் திருந்துவேன் நானும்
விளக்கத்தைக் கூறு.

சட்டங்கள் தெரிந்தவர்
பட்டங்கள் கொண்டவர்
தப்பென்று சொல்லட்டும் காதல்.
புள்ளிவிட்டத்தை ஆழ்கின்ற
வெண்பட்டை வேதியன்
புண்பட்ட நெஞ்சிற்கு உடல் பங்கிட்டக்
கொண்டானடி.

கண் தென்பட்ட மாதுவை உன்டிட்ட மதுவில்
தொட்டிடட பொரியாய் சுவை சேர்த்திக்க
பார்க்கவில்லை.
காலநிதி மேகக்கூட்டம் சாறல் தரும் தூறல் காண
ஓடிவரும் வானவில்லாய் வாழ்க்கை என்னும்
படிநடுவே
எடுத்துச்செல்லும் அடி, இடையாய்...
அங்கங்கே பூர்த்திருக்கும் காதல்
வானவில் தோற்றமாய்
வயதுக்கு வருமடி
வேந்தனே கெதி என வேந்தன் கால் அடிபேர் என
பின்னிக்கிடந்தவர்.

பெண் கிடை கண்டதும் ஒலிவண்டென வீழாரோ?

தண்டனைக்குரியவன் ஆண்டவன்.
அவன் ஆட்டிய லீலையில் மானிடன்
தடம்புரண்டாடுகின்றான்.
யாவைக்கும் நான் கேட்ட கேள்விக்கு
சுவை நீ என்றான். மதுத்தேன் என்றான்.
அதன் அனுபவம் நான் என்றான்.
வேடிக்கை வார்த்தை சோடித்தான்.
நூறு அனுபவித்தபின்னர் நான் யாரு? நீயா நானா?
செங்கோல் அரசன். பாவம் உன்னைச் சூழ்ந்தது
இறப்பைக் கொஞ்சம் அனுபவி உடல் இருப்பில்
என்னைச் சிறைப்பிடி என்றான்.
வழிபட்டேன் கதைவிட்டேன்.
ஆடலும் பாடலும் வேந்தனின் சிறப்பு
தேடலும் கூடலும் மானிடன் பொறுப்பு
அதன் பொருட்டு குடித்தேன், காதல் படித்தேன்.
திரள்கின்ற மேகங்கள் அலைகின்றன.
காதல் எனலாம்.

உடன் சேர்க்கின்ற மேகங்கள் அழுகின்றதை
ஆனந்தம் எனலாம்.
இது காலத்தின் கட்டளை
யாரைத்தான் விட்டது
சோதித்துப்பார்த்தபின் சொல்லவா போகிறார்.
உடலுக்குள் உள்ளது சிவப்பு
அது எல்லோருக்கும் ஒன்றான பிணைப்பு.
அதைப்புரிந்தோர் கொள்வாரே வெறுப்பு
வீணே எமக்குள்ளே ஏன் இந்தக் கசப்பு?

கண்ணுக்கு குளிர்ச்சி பெண் என்பவள்
அவள் நடத்தைகள் சொல்லணும் உயர்வு என்பதை
எத்தனை சிறப்பு பூ உலகில்
அத்தனை கண்டேன் பெண் அழகில்
எழுதும் கவிதைக்கு முன்னாடி ஓவியன்தான்
ஒரு பூ ஒன்று வரையப்படும் வேதனை நான்.
இங்கு எத்தனை கோடி பெண்கள் அப்பா...
சிலை வடித்தவன் உண்மையில் ஞானியப்பா.

அந்தியில் மழைசிந்த இடிமின்னலில் வீழ்ந்த
விண்மீனே
தென் ஆசிய நாட்டுப் பெண்கள்
பண்டிகை ஒன்றினில் தொங்கிடும் தோறணம்.
குங்குலியம் வீசிடும் நல்லட்சுமி வாசம்
எம் மண்ணில் வந்து தளைத்திட்ட பிற அன்னிய
தேசத்துப் பெண்கள்.

மோகனையோ மாந்தரையோ கோணுதடி
என்பமது
தேன்ததும்பும் பொய்கையிலே வண்டு என
வீழ்ந்திருக்கேன்.
தேன் களித்து மீண்டுவர என் மல்லிகையைத்
தேடுகிறேன்.
சந்தனத்தோடு செவ்வாறு சேர்ந்து மணக்குது.

உன்னினைவால் கண்ணில் பசிக்குதடி
கற்பனை குறைவில்லை
எப்படி நான் உரைப்பேன் என்னிடம் நான் இல்லை
அருந்தலின் கனியை விருந்தெனத் தந்தாள்.
அடைக்குது நெஞ்சம் ஆறாத இன்பம்.
புருவம்தனில் சிலை என நிறுத்தி
புழுதிக்காற்றாய் மனதைக்களைந்து
புலரும் வரிகளை கவியென நினைத்து
பூனைப்பால் என பருகிடத் துடித்தேன்.
புஸ்பங்கள் எல்லாம் விஸ்பரூபம் கொள்ள.
கல்லுடைத்த சிலையாய் என் சொல்லுரைத்து
நின்றாய்.
வாசுகி மகள் என கனிநிறைந்த வாழை எனத்
தலை குனிந்ததாய்
விழி நிலம் குவித்து நின்றாய்.
இலக்கனம் இலக்கியம் தெரியாது...
தலைக்கணம் என்பது கிடையாது
தாரை வார்த்தது என் தமிழ் உடன் தவிக்குது.
புதுக்கவி நான் கம்பனின் மூத்தமகன்
என் சுந்தரி மூச்செறிந்து
உடன் சங்கமித்தேன் இங்கு வந்து.

தேன் துளிகள்

நினைத்தேன் சிரித்தேன் சிந்தித்தேன்.
சிறகடித்தேன் சந்தித்தேன் திகைத்தேன்.
கவித்தேன் வடித்தேன் படித்தேன் மலைத்தேன்.
துளித்தேன் குடித்தேன் மனதைக் கொடுத்தேன்.
மெலிந்தேன் நெலிந்தேன் என்னை மறந்தேன்.
வருந்தேன் மருந்தேன் உன்னைப் பிரிந்தேன்.
வாழ்ந்தேன் வளர்ந்தேன் மகுடம் கழைந்தேன்.
குடித்தேன் புகைத்தேன் தாடிவளர்த்தேன்.
இழைத்தேன் வாழ்க்கையை மறந்தேன்.

யார் எமக்கு?

உலகம் என்பது நாடக மேடை
ரசிகர் என்பது பூதங்கள்.
சோலை நீயும் நானும் நாட்டியலீலை...
ஆட்டிவைப்பது ஆண்டவன் வேலை.
ஆடும் காட்சி இன்றென்னாச்சு?
நாளை என்வாழ்வு சரிதம் என்றாச்சு
இன்றென்தேவை நாளை என்றானால்
வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?

வட்டி கொடுப்பதோ ஆயுள்.
பூட்டி வைப்பதோ வாழ்வு.
காட்சிகள் மாறும்
வரும் வேசங்கள் மாறும்
ஆட்டி வைப்பவன் கைத்திறம் மாறினால்
ஆடும் உன் வாழ்வின் ஆயுளும் மாறும்.
பூட்டிவைப்பதும் சேர்த்துவைப்பதும்
நாளை உன் சந்ததிக்கு நீ காட்டிவைத்ததை

உன் பிள்ளை காட்டினால் யார்தான் அனுபவிப்பு.
என்சேவை என் தேவை என்னோடு அழியட்டும்
என்னைக் காட்டிலும் உயர்வோ தாழ்வோ தானாய்
மிளிரட்டும்.

இன்றிருப்பார் எங்கடைவார்
அந்த இடம் யார்தான் அறிவார்?
கண்துடைப்பாய் பல கதைப்பார்.
நாளை என்பது அறியாதபோதும் நான் யார்
நீயார்?

எமக்கே தெரியா மதம் நான்
இனம் நான்
உருவம் காட்டும் மடையன் மனிதன்.
தான் பிழைக்கப் படைத்தான்
தன் பிழையே இதனால் என உணரமறுத்தான்.

குமிழி வாழ்வில் செருமி வாழ்கின்றான் மனிதன்
பாலம் வந்ததெல்லாம் சொந்தம் என்று எண்ணி
வாழ்கிறான் நாளும்.
எல்லாம் சொல்லால் சொந்தம்.
என் இருகண்கள் தூங்கும்போது அவை ஒரு
கண்ணாய் தூங்குவதில்லை.
வந்தோம் வாழ்ந்தோம் போனோம் இல்லை
வாழ்க்கை.
வந்தோம் வாழ்ந்தோம் வாழ்வின் பயனாய்
என்னசெய்தோம்?

தீக்குச்சி பயன் செய்தன ஊர் உய்ய வழி செய்தன.
கருவிலே பாரம் உருவாகி மடியிலே பாரம் சேயாகி
மார்பிலே பாரம் உதவாமல்
ஊருக்குப் பாரம் ஆளாகி நாட்டுக்குப்பாரம்
நான் ஆகி
புவிமண்ணுக்கு பாரம்.
உயிர்போனபின் நான்கு தோழுக்குப்பாரம்.
மனிதா பாரம்தான் நீ.

உடல் என்பது உயிர் உள்ளவரை உயிர்
ஆடுகின்ற மேடை.
அது போனபின்னர் யார் அழைப்பார் கனம்என்று.

உன் ஊன் இழைத்திட்ட பிணம் என்ற உடலை
நடந்தது முடிந்தது நடப்பவை தெரிந்ததோ?
ஒரு நொடி முன்னர் கண்ணின் இமைப்பும்
தெரிந்தது இல்லை.
விஞ்ஞானம் போட்டிபோட்டு மெஞ்ஞானம்
வென்றதில்லை.
கொடுத்தவன் எடுக்கையில் அடுத்தவன்
பேச்சில்லை.
உறவென்றும் உரித்தென்றும் உடன் வந்த
பிறப்பென்றும்
கெஞ்சிப் புலம்பினால் பழி என்றும்
அறம் என்றும் மாற்றுவானே.
தீர்ப்பு, நேரம் வந்தது காட்சி முடிந்தது
வேசம் கலைந்தது நின்றுபோனது உயிர்.

மதி ஒப்பினை ஒப்பவள்

நேற்றந்த மதியைக் கூட்டிவரச் சொன்னேன்.
இந்திரன் சபைக்கல்ல என் மந்திரிசபைக்கு
என் சுந்தரி அழகை ஒப்பனை செய்ய.
கற்பனைத் தேரில் ஒப்பிட வந்தேன்
கைபிடித்து இடை அளந்தேன்.
மனமெய் அளக்க மடி பிடித்தேன் மதிவான்
எழுந்தபோது.

இடை நூல் அறுந்து மின்னுதடி மின்மிகள் நூறு
வாய் கூசும் வார்த்தையாலே ஊர்தூற்றிப்
பேசட்டும்
உரம் ஏறும் நெஞ்சில்
நீ உரசிப்பேசாதே, என் உயிர் சாயும் அன்றே.
இலட்சியம் இல்லையடி சத்தியம் செய்தேன்.
ஒப்பனை செய்யவே எட்டிப்பிடித்தேன்
வஞ்சனையில்லையடி

கன்னித்தமிழ் கொண்டு கன்னியர் சுவைகண்டு
கவிதை எழுதவில்லை நான்
பார்வையால் சிலைவடித்தேன்.
பார்த்ததுதம் எனை மறந்தேன்.
வான்மதி உதையத்தில் உனையும் கண்டேன்
எனது என்னது? பார்வையில் மதிமறந்தேன்.
பார்த்ததும் வரவளைத்தேன்
ஒப்பிட்டு மடிபிடித்தேன்.
பிடியுடன் இடைநூல் அறுந்தது
இன்றுதான் கண்டுகொண்டேன் என்னவள் நீ
என்று.

பிள்ளை

முன் என்றும் காணாத சிறப்பு இன்று நான்
கண்டேன்.
ஒவ்வொரு பொழுதுக்கும் பொருள் விளங்குகிறது.
காலம் கனிந்ததென்று அவை விளங்குகிறது.
மழலை என்னும் வடிவில் இறைவன்
குடிகொண்டான்.
அதனால் இல்லாமை என்பது ஒழிந்தது
எனக்கேன் என்ற வாழ்வு என்னொடுஆனது
தனிமரமான வாழ்வில் ஒரு விழுதுதோன்றி
விருட்சத்தின் வீரியம் கண்டேன்.
எப்பொழுதும் என்னால் சிரிக்கமுடியும்
எப்பொழுதும் எதையும் தாங்கமுடியும்
எப்போதும் உருவான ஒருபிள்ளை
வந்தபின்னர் வாழ்வின் எத்தனையோ மாற்றங்கள்
தோன்றலாம்.
உன் இரத்தத்தின் இரத்தமான பிள்ளைமுன்
அது கொஞ்சும் மழலைமுன்
அனைத்தும் அப்பால் போய்விடும்.
அனுபவித்தால் போதாதென்பார்
ஆசை எல்லாம் தீராதென்பார்.
நீ மறுத்தால் குருடன் என்பேன்.
இறைவன் தரமறுத்தால் நீ பாவம் என்பேன்.
மணம் முடித்தால் மாற்றம் வரும்
மனம் இரண்டில் ஏக்கம் வரும்.
வகை மறந்த மோகம் வரும் அதில் தாபம் வரும்.
தாபம் அதில் காதல் வரும்

எம் தலைமுறை

சைவமும் தமிழும் பண்பாடு கலையும்
விருந்தோம்பல் முறையும் எண்ணும் எழுத்தும்
கல்தோன்றிய காலம் தொட்டே உடன் தோன்றிய
தமிழர்
எம் பாரம்பரியமும் தர்மம் சத்தியம் போதனை
வாழ்வின் தத்துவம் சொன்னதும் - எம் இனம்தான்
செஞ்சோற்றுக்கடன் தீர்த்ததும் எம் இனம்தான்
சேரனும் சோழனும் பாண்டியன் மூவேந்தரும்
நாட்டிய வீரனும் வெண்குடைக்கீழ் ஒரு
சமத்துவம் காண்பதும் எம் இனம்தான்
வந்தோர் வாழ வழிவகை செய்தலும் எம்
இனம்தான்
அன்றோ இன்றோ என்றோ என்றும்
பால் உணர்வுள்ளதும் எம்மனம்தான்
தாய்மையும் கற்பும் போற்றிக்காப்பதும் எம்
இனம்தான்
ஆண்டியோ அரசனோ ஆண்டவன் எவனோ
மனுநீதி சொல்வதும் எம் இனம்தான்
ஈசனே இறங்கி இசைத்தமிழ் கேட்டு பாசுரம்
சொன்னதும் எம்தமிழ்தான்

எம் செம்மொழி கேக்க எம் செவி தூற்றும்
எம்மிடத்தான்.
ஆதிக்கபோகம் ஆங்கிலம் ஆகி அர்த்தமிழந்து
போவது எம்தமிழ்தான் - தமிழ் என்ற பேச்சு அதில்
பற்றின்றிப் போச்சு
தாலாட்டுக் கேக்கும் தலைமுறையில்லை
தான் நினைந்திட்ட தாய்க்கு நேரம் இல்லை
பெற்றபின் மேய்ப்பது வாடகைத்தாய்
பிள்ளை அன்பைக் காண்பது யாரிடத்தில்
பாட்டும் கூத்தும் பார்த்ததில்லை.
பலங்குறைந்த தமிழர்களைக் கேட்டதில்லை
சாவுக்கும் சடங்கிற்கும் போனதில்லை
அயல்வீட்டில் யார் இருப்பார் கண்டதில்லை
என்பாடு என்பிளைப்பு எல்லாமே வீட்டுக்குள்
வந்ததில் உறவெல்லாம் தொலைதூரம்
போனதெங்கே
வள்ளுவனும் இளங்கோவும் வளிவந்த கம்பனும்
வளம் குவித்த தமிழுக்கு பாரதியும்
பாரதிதாசனும் சுரம்மீட்டுக் கொடுத்தான்.
நாம் சுறணை கெட்டுக் கிடந்தோம் தமிழ்
அடிப்டுப்போக.

பேனா

யார் கருத்தும் ஏற்றே எழுதும்
தன் கருத்து அறியாது
சிலர் தலை எழுத்தை மாற்றிவிட
பலர் கைஎழுத்து ஆகிவிடும்.
உண்மைகளை கூட்டுச் சேர்த்து
பொய்த்திறமையை உடைத்துவிடும்.
ஒரு சிற்பியின் உளிபோல மடமைகளை
உடைத்தெறிந்து சமூகத்தைச் சிர்படுத்தும்

தனிமைக்கு விருந்துதரும்
புலமைக்குப் பரிசு தரும்.
உன் புருவத்தில் வேர்
உலகை கொண்டுவந்து கவி எழுதும்
நீ வாய்விட்டுச் சொல்லாத உன் உணர்வை
சொல்லிவிடும்.
வாய்ப்பேச்சைக் கேளாதோர்
அவர் மனசாட்சியை தீண்டிவிடும்.
ஒருசரித்திர மாற்றத்தை பேனா மை தடவி
மாற்றிவிடும்.

ஏர் ஆணி தரைகிழித்தால் பசுமை உண்டாகும்.
எழுத்தாணி ஏடு தொட்டால் மறுமலர்ச்சி
உண்டாகும்.
ஏரும் ஏடும் எழுத்தாணி கூர்மையும்
சளைக்காமல் போனால்
எமை எதிர்த்தாள இங்கு எவர்தான் உண்டு.?
எழுத்தறிந்து படித்தோர் அதன் கருத்தறிய
வேண்டும்.
கருத்துணர்ந்து படிப்போர் அதை ஊர்
அறியவேண்டும்.
ஊர் அறியப் படித்தால் அதில் உண்மை
வாழவேண்டும்.
உண்மை சத்தியமாய் இருந்தால்
அதை உலகம் போற்றவேண்டும்.
பேனா மனசாட்சி உள்ளவனை இளம்காட்சி
சேர்க்கும் எதிர்சாட்சி
பொய் ஆனால் அவன் தலை எழுத்தை அழிக்கும்.
உன் அந்தரங்கம் சிலவேளை வாய்விட்டுச் சிரிக்கும்
எழுத்தாணி கூர் ஆனால் குடை மூடித் தடுக்கும்
அதை எடுப்பவன் கையில்தான் அதுவால் ஆகும்.
வேல் ஆகும்.
என் இரகசியம் பேசுகின்ற இளகிய மனம் இவன்.
என் தனிமையில் கரைகின்ற உரிமையின் உறவிவன்
என் புலம்பலை புனர் அமைத்து இலக்கணம்
வகுத்தவன்.
என் இதயமே குழிர்ந்திட என் மார்போடு
கிடப்பவன்
என் வார்த்தைகளை மௌனிக்க என் வாயாய்
இருப்பவன்.
எனக்கோர் அடையாளம் இட்டுத்தந்தவன்
என் கை எழுத்து அழகாக என் தாய்மொழியைத்
தந்தவன் என் உயிர்மெய் எழுத்தாணி என் பேனா.

கடிதம்

முகவரிகளைத் தொலைத்துவிட்டு
முழுதினக் கவிதை எழுதுகின்றென்
என் கடிதத்தில் என்றோ எழுதிய ஞாபகம்
நலம் கேட்டு சுகம் விசாரித்து
ஹாய் சொல்லி கணினிக்குள் முடக்கிவிட்ட
காகிதம் எல்லாம்
கரு இல்லாமல் போய்ச்சேர்கின்றது.
தலை எழுத்துக்குள் முப்பிட்டு வறுத்துக்கொள்
என்கிறது இன்று.
படித்துப் படித்து மனப்பாடம் பண்ணினேன்
கடிதத்தை
அதில் காதல் இருந்தது. பாசம் இருந்தது
தலையணைக்குள் மடித்துவைத்து படுத்திருந்தேன்
அதில் மோகம் இருந்தது.
கை எழுத்து கவிதை ஆனது.
தபால்காறன் நொந்துபோனான்.

பலகனவும் பசுமைகளும் கேட்டுருகி கடிதம்
வந்ததன்று.
தென்னம்பிள்ளை உயர்வு கேட்ட நெடுநாள்
கூச்சல் கேட்டு
அண்ணன் தங்கை பாசம் கேட்டு அடுத்தவீட்டு
வசதிகேட்டு ஓடிப்போன செய்தி கேட்டு
வரப்பு வாய்க்கால் சண்டை கேட்டு
ஊரில் வயசுவந்தோர் விபரம் கேட்டு
நாலுபக்கம் கேள்வி கேட்டு
நாளை என்ற ஆவல் பார்த்து வீடு தேடி
வரும் கடிதம்.

முப்பரிமாணம் எழியதோர் கோலம்
முகநூல் என்றும் பல்பரிமாற்றம்.
பக்கங்கள் குறைந்து பாரத்துப் பேச சுருங்கியது
உலகம்.
ஊர் நலம் கேட்பது இல்லை
நம் தவிப்பாச்சு
தேவை வந்து குவிய தேடுதல் நெருப்பாச்சு
உலகத்தை கையில் அடக்கி உயிர்மூச்சைத்
தேடுகின்றோம்.
இது காலத்தின் கொடுமை என்க
இதைக் கண்டுதான் தீரணும் வரும் சந்ததிக்கு
சொல்லிவைப்போம் அப்படியோர் காலம் என்று
இனி எப்படித்தான் வாழ்வார் இங்கு
அதுவரைக்கும்நாம் இல்லை.

ஐ நில மங்கை

சிந்தனைக் கெட்டா வரியடி
உனைச் சிந்திக்க நித்தம் வருமடி
முட்டுது வார்த்தை கொட்டிட ஆசை
எண்ணங்கள் எங்கோ போகுது.
தேங்கிய கங்கை ஓடியபின்தான் ஊறும் கவியாறு
எனச் சொல்லுது உள்மனது.
என்னவளே மனதாளும் மனையவளே
ஐ நிலமும் உன்னருகில்
மெய்யழகாய்க் கண்டேன் கடல் அலையை
நெய்தலென குழல் அழகில் கண்டேன்
வயல் சார்ந்த மருதம் என உன் புருவமதில்
கண்டேன்.
மலைசார்ந்த குறிஞ்சி என மார்பழகைக் கண்டேன்.
கொற்றவையாய் நாவறள பிறமுதுகை
வர்ணித்தேன்.
நாநிலங்கள் சொல்லிவிட்டேன்
ஐ நிலமாய் முல்லைவனம் என்னவென்று
சொல்லுவேன்
அந்த இடம் என்சொந்தமடி
உன் எழில் அத்தனையும் சொல்லிவிட
என்னும் பத்துநிலம் வேண்டுமடி
மின்னல் என ஒளிபாச்சி ஈசன்
என்னகத்தே உறைந்துவிட்டான்
சுந்தரப்பா தமிழ்கொண்டு முதல்வர்
படைக்காத கவிபடைக்க
பிரம்மன் என்னிடத்தே வியம்புகின்றான்.

உடலும் உயிரும்

ஒப்புரவாகி ஒருமித்துப் பேசி
இச்சைக்கும் ஈர்ப்புக்கும் ஓர் உணர்வாகி
வெக்கத்தில் நாணுகின்றது உயிர்.
சுகமும் சுமையும் தாங்கிக்கொள்கின்ற போது
உடலும் உயிரும் வேறுபிரிப்பதில்லை.
மரணம் என்பது கூடு பிரிக்கும்போது
உடல் மண்ணிலும் தீயிலும் வெற்றி அறிகுறி
உயிர் மோட்சமோ நரகமோ விட்டு பிரிகிறது
தாங்கிய உடலை ஏந்த முடியவில்லை.
உடலால் விட்டுப் பிரிகிறேன் என்றாகி
உயிர் விட்டுப் போனால் நீ வந்து சேர்வதில்லை.
என்றது கெட்டித்தனம் பேசிவிட்டுப் பிரிந்தன.
மினுக்கிப் பூசிய உடல் சவம் ஆச்சு
பேசிப் புகழ்ந்த உயிர் இறைவன் வளியாச்சு
உடல் பிரித்தது யார் உயிர் கொய்தது யார்
அதுதான் விதியாச்சு.

என் உயிர் கூடோ நான் போய் வரப்போறேன்
வானவர் என்னை வேண்டி அழைக்கிறார்.
உன் சம்மதம் கேக்கிறார்.
என் பிணம் இல்லை என் நிலை என்றும் என்னிடம்

இல்லை இப்பவோ இன்றோ.
என் பயணத்தின் எல்லை அன்றுதான் தெரியும்
இந்த உயிர் விடும் உன்னை வாழும் காலம்
எல்லாம் சுமந்தால்
உயிர் இட்டுச் செல்லும் இடம் எல்லாம்
அலைந்தால்.
ஆசை முட்ட மோகம் காட்டி தேகம் கெட்டது
பாவம் இந்த உடலுக்கென்று உயிர் போனால்
வராதென்பது தெரியாதா?
தெரிந்தும் எதற்கு இளக்கப்படுகின்றது.
உறவாலா உடன்பிறப்பாலா இல்லை
உடல்மேல் உயிர் கொண்டகாதல்
உடலே நான் இன்றி நீ இல்லை
நீ இன்றி நான் இல்லை
காலம் வந்து கதவு தட்டுது
உன் காதின் ஓரம் வெறுத்துக் கட்டுது
தேகம் எல்லாம் ஒடுங்கிவிட்டது
நீ ஒய்ந்துபோக நேரம் வந்தது.
உன்னை எடுத்துப்போ ஆட்கள் இல்லை.
ஆவியாக என்னைச் சுற்றுவேன்.
தீக்கு நீ விருந்தானால்
அச்சாம்பலைத் தொட்டுக் காற்றாவேன்.
மண்ணுக்குள் விதையானால்
உன்னில் ஊன்றிக்கொண்டு மரமாவேன்.
என் விதி எப்படியோ அந்த ஆண்டவன் தான்
நிர்ணயிப்பான் - என்றும் அன்பு வரும்.
அன்பில் தான் வாழ்வு மோட்சம் பெறும்.
மதி அமைத்து விதி அமைப்பதல்ல
விதி அமைந்து மதி புனைந்து
வளி அமைப்பதே வாழ்வு.
அதில் இறைவந்த பேறு பிள்ளை படைப்பிலும்
பிறப்பிலும் மாற்றம் இல்லை
அதன் வளர்ப்பிலும் வாழ்விலும் தான்
மாற்றம் உண்டு

நீ நினைப்பதை அடைந்தால் இறைவன் இல்லை.
இறைவன் கொடுத்ததில் மகிழ்ந்தால் துன்பம்
இல்லை
தத்தெடுப்போர் பெற்றெடுத்தார் போல் உயிர்
துடிப்பார்
முப்பிறப்பில் அவர்பிள்ளை
எப்பிறப்பிற்கும் சொந்தம் இது முற்பிறப்பின்
வினைப்பயன்.
அப்பிறப்பின் நல்வினை கெடுதல் பல ஏழு
ஜென்மம் தொடரும் என்பது
எம் முன்னோர் கூற்று.
பெருங்கோடிச் செல்வங்களில் உயர்ந்தோங்கும்
செல்வம்
பிள்ளைச்செல்வம்
பெயர் சொல்லவும் பொருள் கொள்வும்
ஆனந்தத்தின் எல்லைதனை தூறுவாரும்
பேர் இன்ப வெள்ளம்.
முந்நூறு நாள் பதியும் மூச்சையும் பேச்சையும்
ஏலம்விட்டு ஆண்டவன் ஓடு ஒப்புரவாகி
உயிர் உடலோடு ஜொலிக்கும் தருணம் மானிட
இன்பத்தின் ஆரம்பமாகும்.
பெற்றவன்பேறுபெற
உற்றோரும்மற்றோரும் சான்றோன் என நீ
ஈன்றவனை
அழைக்க பெற்றதனால் பயன் காண்பாய்
உன் பெயர் சொல் தலை வாழ்வாய்.
அடி உரைக்கும் அடியாய் வாழ பிள்ளைக் கது
சொல்லவேண்டும்.

காதல்

நேர்த்தியற்ற மனிதனுக்கு நேரம் இல்லை.
நேரம் கெட்ட நேரத்திலும் தூக்கம் இல்லை.
ஓடி ஓடித் தேடித்தேடி தொலைந்துபோனான்.
வாழ்க்கை தன்னைச் சேகரிக்க மறந்துபோனான்.
இழந்ததெல்லாம் இளமை.
இனி வசந்தத்தில் வறுமை.
நீ தேடிப்பார்க்க எண்ணும்போது
ஓடிவந்து நரை தடுக்கும்.
பாதி வளி என்று எண்ணி மனம் சலிக்கும்.
போகும் வழி சேர்வதற்குள் கால் கடுக்கும்.
ஏக்கம் மட்டும் உன்னிடத்தில் துணையிருக்கும்.
நீ கனவுகண்ட வாழ்வு அது வெறும் தூக்கத்தில்
தான் நிலைத்திருக்கும்.
நேர்த்தி ஆக்கு உன் நிலையை.
பூர்த்தி ஆகும் உன் ஆசை...

காதல் ஓர் விஷமருந்து
குடித்தேன் தேன் கலந்து
வேதியன் குடித்தானோ
பாதிதான் அவன் உடம்பு.
பொருள்பட கவி சொல்லி
பொருந்தாத பொய் சொல்லி
இன்றைய நாளுக்கு புகழாரம் சூட்டுகிறேன்...
வாழ்க காதலர் வாழட்டும் காலம் எல்லாம் காதல்.

காலங்களில் அவள் வசந்தம்

காலம் ஒவ்வொருவருக்கும் ஒரு திருப்பு முனையாகிறது அது என்னையும் விட்டுவைக்க வில்லை அனுபவம் என்பது சொல்லிவருவதல்ல, சொல்லும் செயலும் சேர்ந்த நாளந்த பாடம். அருவருக்க முடியாத ஆசை அவள் ஒருத்திதான் என் வாழ்க்கை கனவாகக்கூட மறக்ககூடாத காதல் அவள் என்னிலும் நான் அவளிலும் கொண்டது, நினைக்கும்போதெல்லாம் இதயம் இடம்மாறி துடிக்கிறது. என் இதயமதில் இரு உயிரோசை கேட்கிறது நான் மறந்துவிடவில்லை அவளை இன்னும் இழந்துவிடவில்லை என்னை, தொலை பேசி மணியடித்தது சகுனம் பாராமல் வெகு நேரம் அழைத்தது வசதி கோராமல் சலிப்புத்தட்டியது சட்டென்று எடுத்தேன் துண்டித்தேன் மீண்டும் மறுகணம் அலறியது என் கைபேசி நான் அதை எடுப்பதற்குள் மவுனித்தது அது தகவல் சொல்லி வந்தது அதில் தொடர்பு கொள்ளும்படியாக நான் அசட்டையாக விட்டுவிட்டேன். என் வேலை என்பாடு என்று அந்நாள் பொழுது கழிந்தது கைபேசி என் நேரத்தை பிடித்துக்கொண்டதால் அதனை மவுனித்து வைத்திருந்தேன் என் வேலை கள் சற்று ஓய்ந்தபின் என் தொலைபேசியில் தவற விட்ட அழைப்புகளை தேடிப்பார்த்தேன் தகவல் சொன்ன அழைப்பு இருதடவை வந்திருந்தது யாரெ வரோ புரியவில்லை ஏன் அழைத்தார் தெரிய வில்லை நான் அழைத்தேன் என் தொடர்பு துண்டிக் கப்பட்டது, எனக்கென்ன அவசரம் நான் பொருட் படுத்தவில்லை சில மணித்துளிகள் சென்ற பின்னர் மீண்டும் அவ் அழைப்பு என்னைத்தேடி வந்தது தொலைபேசியை கையிலெடுத்தேன் செவிமடுத்

தேன் அழகான குரல் ஆங்கிலத்தில் நான் உனது அழைப்பைப் பார்த்திருந்தேன் அதுதான் தொடர்பு கொண்டேன் எதற்காக அழைத்திருந்தீர் என்றது அந்த ஆங்கிலக்குரல் பதிலுக்கு நானும் நான் அழைக்க வில்லை உங்கள் அழைப்பு எனக்கு பலதடவை வந் திருந்தது அதனால்தான் அழைத்தேன் என்றேன் ஆங் கிலத்தில் நான் பதிலுக்கு உண்மையாகவா? மன்னிக் கும்படி எதோ தவறு நடந்துவிட்டது என்றது அந்த மெல்லிய குரல் ஆங்கிலத்தில் இடைநடுவே வேறொரு குரல் ஆங்கிலக்குரலுக்கு பேச்சுக்கொடுத் தது தமிழில் இக்குரலும் தமிழிலில் சில நொடி பேசி முடித்துவிட்டு மன்னிப்பு என்றது. ஆங்கிலத்தில் பேச்சுவாக்கில் பரவாயில்லை என்றேன். தமிழில் ஒரு மவுனமானது அப்பேச்சு சிறு வெட்கம் மொய்த்துக்கொள்ள தமிழா நீங்கள்? என்றது அந்தக் கானக்குயில் பின் மன்னிக்கவும் என்று சொல்லி வார்த்தைகள் தடம்புரண்டன நான் மறுவார்த்தை சொல்லமுன்னே மவுனித்தது கைபேசி. ஈர்த்து விட்டாள் என் வார்த்தைகளை மவுனத்தால் உறைய வைத்து அவள் தேன்மொழி யாரவளோ தெரிய வில்லை வயது பால் புரியவில்லை அவள் வாய் மொழிகேட்டபின்கண்ணயர்ந்து தூக்கமில்லைஎன் இதயமும் மூளையும் முரண்பட்டது குரலைக் கொண்டு சித்திரம் வரையாதே அதற்கு உதாரணம் சொன்னது மூளை பாடகி ஜானகி அம்மாவின் வய தையும் குரலையும் நினைவுபடுத்தி மனமோ நம் பிக்கை வை என்றது எதற்காக நான் சபலப்படுகிறேன் என்று எனக்கே புரியவில்லை இருந்தும் மனம் அக் குரலிலே குழைந்து குழைந்து மயங்கியது, தொடர்பு கொள்ள சந்தர்ப்பம் தேடினேன் சிக்கியது ஒரு உபா யம் மறுநாள் வாழ்த்து என்று சொல்லி குறுந்தகவல் அனுப்பினேன் பதில் கேள்வியோடு நன்றியும் வந்தது யார் நீ என்பதைப்போல், விபரம் சொல்லி எழுதி னேன் தகவல் ஏதுமில்லை என் பொறுமையை

சீர்குலைத்தது மறுபடியும் ஏதாவது எழுதுவதற்கு எத்தனித்தேன் அதற்குள் தகவல் வந்தது தாமதித்து தான் தொடர்பு கொள்வதாக அந்தத் தாமதம் என்னை ஆமோதிப்பதாக இருந்தது நேரம் நகர்ந் தது எனக்குள் சிறகு முளைத்தது தொலைபேசி எப்போது அலறும் என்மனம் மலரும் என்று காத் திருந்தேன் ஏக்கங்கள் நிறைய எதிர்பார்ப்பு பொய்த் தது அந்நாள் ஓடி முடிந்தது மறு நாள் காலையில் என் தொலைபேசி அலறியது தகவலோடு காலை வணக்கம்என்றது அன்று மந்தமாக இருந்த பொழுது இன்பமாக மலர்ந்தது எனக்கு பதிலுக்குப்பதில் வணக்கங்கள் பரிமாறினோம் என்ன வேணும் யார் நீ ஏன் தேவையில்லாமல் தொடர்ந்து குறுந்தகவல் அனுப்புகிறாய் உனக்கு வேலையில்லையா என்று அதட்டிக்கேட்கும் தொனியில் தகவல் வந்தது நானும் எடுத்த எடுப்பில் நீதான் வேணும் என்றேன் ஒரு சில நேரம் எந்தவித பதிலுமில்லை மீண்டும் தகவல் நீ பைத்தியமா? என்றது அதற்கு வைத்தியம் நீதான் என்றேன் லூசு லூசு என்றது பேசு பேசு என்றேன் பதிலுக்கு பதில் அவள் திட்டலும் என் கேலியும் எமக்குள் இருந்த வேலியை அறுத்தது வார்த்தைகளால் நெருங்கிவிட்டேன். அவள் உள் நோக்கம்புரியவில்லைஉள்ளொன்றும்புறமொன்று மாய் கதைத்தாள் நெஞ்சம் பறிபோகாமல் நடித் தாள் தொடர்ந்தது ஓரிரு நாட்கள் மலர்ந்தது நெஞ் சுக்குள் மாற்றம்

அந்தி பன்னிரண்டு அடங்கிப்போனது ஊர் சேதி கொண்டுவந்தது குறுந்தகவல் நித்திரையா எனக்கேள்வி கேட்டு வந்தது மின்னல் வெட்டி வானம் வெளித்தது கொஞ்சிக்குலாவி குருவி சிரித் தது பஞ்சுத்தலையணை கல்லாய்ப்போனது தூக்க மில்லை என்றேன் எழுந்து நடந்தேன் மொட்டை மாடிக்கு தொலைபேசியில் பேசவந்தாள் ஹலோ ஹேய் நான்தான் என்ன செய்கிறாய் என்றாள் நான்

காற்று வாங்க வந்தேன் என்றதும் வாங்கியாச்சா என்றாள் வாங்கிவிட்டேன் கொண்டு செல்ல யாரா வது துணைக்கு வந்தால் நல்லதென்றேன் நான் வரட்டுமா என்றாள் வந்தால் நல்லதென்றேன் சிரித் தாள் என்னை சிதைத்தாள் ஏன் என் ஞாபகம் என் றேன் அப்படியொன்றும் இல்லையென்று தட்டிக் கழித்தாள் அதுசரி என் பிறந்த நாள் என்று எப்படித் தெரியும் (ஏய் நீ என்று அழைத்தவள் மரியாதை யோடு மகரந்தம் தெளித்தாள் மனம் குளிர்ந்து) உடன் நான் எப்போது சொன்னேன் பிறந்தநாள் வாழ்த்து அதற்காக சொல்லவில்லை பொதுவாக சொன்னேன் வாழ்த்து அது பிறந்த நாளானது அன்று என்றேன் நல்லதும் கெட்டதும் நால்வகைப்பட்டதும் வான் வெள்ளி கரைந்திட கதைத்தோம் விடிவெள்ளி முளைத்திட முடித்தோம் இரவு நீளாதோ என்றுதான் நினைத்தோம் இரவு தூங்கியது பகல் விழித்தது என் நினைவுகள் அவளோடு ஜனித்தது பிறகு சந்திப்போம் என்றாள் எப்போது என்றேன் தெரி யாது என்றாள் நத்தைபோல் நகர்ந்தது பொழுது இரு வருக்கும் இடங்கள்தான் மாறுபட்டதே தவிர சிந் தனைகள் ஒன்றுபட்டது நிமிடத்திற்கு நிமிடம் குறுந் தகவல் அனுப்பினாள் நாளொரு வண்ணமாய் என் செயற்பாடு வினாவினாள் உருண்டது வாரங்கள் சில எனக்குள்ளே ஒரு மாற்றத்தைக் கண்டேன் மலர் கள் பிடித்தது வெண்ணிலா பிடித்தது இரவு பிடித் தது புல்வெளியில் பனித்துளி பிடித்தது மொத்தத் தில் என்னை எனக்கு பிடித்தது இதுவரைக்கும் அவள் முகம் கண்டதில்லை கனவிலும் எண்ணவில்லை காதலை உணர்ந்து கொண்டேன். வாய்திறந்து சொல்லவில்லை அதை நெஞ்சுக்குள்ளே தினம் வளர்த்து பிரபஞ்சத்தினை வம்பிழுத்தேன் நான் அவளை உணர்ந்தேன் அவள் என்னை உணர்ந்தாள் வழமைபோல் மொட்டைமாடி அதில் அவள் என்னில் பாதி இந்த உணர்விற்கு பெயரென்ன

என்றேன் நட்பு என்றாள் நட்பிற்கு பொருள் என்ன அன்பு என்றாள் அன்பிற்கு பலன் என்ன என்றேன் புன்னகையால்மழுங்கடித்தாள்என்னுயிரைமட்டும் விட்டுவிட்டு உரிமைகளை பறித்தெடுத்தாள் தான் காதல் என்ற தலைப்பெழுதி ஆசைகளை கொட்டி வைத்தேன் அஞ்சலிட்டு அனுப்பிவைக்க முகவ ரியை தரமறுத்தாள் கோவிலுக்கு வரச்சொன்னாள் அங்குகண்டு மலர்ச்செண்டு தரச்சொன்னாள் என் னையே அளவெடுத்து தன் முகத்தை மறந்து விட்டாள் சென்றேன் நாள்க்குறித்து அவளை நான் குறித்து பக்தி பூண்டது பரவசம் மூண்டது பாசுரம் பொழித்தது பலராகம் முளைத்தது பஜனையில் ஒரு குயில் தேன்தமிழ் படித்தது முத்துமணி பந்த லில் ரத்தினங்கள் பல என்னவென்று கண்டயேன் என் ஏழ்மைதனை யாரறிய என்னை அவள் கண்டு விட்டாள்நான் அவளைக் காணுமுன்னே அங்கு கூடி நின்ற ஆடவரில் நான் சூனியத்தின் சாயல் கொண் டேன் அவள் ஜாடைவிழி பேசவில்லை யாரெவர்க் கும் கூறவில்லை அவள் பக்கம் வந்தாள் நான் சொக்கி நின்றேன் யாரோ ஒருவன்போல் கண்டும் காணாது நின்றாள் மவனப்புயல் வீசியது மனதில் குளிரேறி யது உதடுகள் துடித்தது உலரிட வார்த்தைகள் முளைத்தது சற்று மனம் தயங்கி மெல்ல மெல்ல அருகிற் போனேன் ஏய் தம்பி என்றது ஒரு குரல் என் பின்புறத்திலிருந்து திடுக்கிட்டேன் மனமெல்லாம் பதறியது மானம் போனதென்று கோணி நின்றேன் மீண்டும் அக்குரல் தம்பி உன்னைத்தான் என்றது வசந்த மண்டபத்தில் மாலை இருக்கு எடுத்து வா என்றதும் என் மூச்சு திரும்பி வந்தது பூப்பறிக்க வந்த நான் மாலை எடுக்கவா சகுனம் நல்லாயிருந்தது கொண்டுவந்தேன் கையில் இரு மாலை அந்த மனி தர் பிள்ளை மாலையை வாங்கிக்கொண்டுபோய் அம்பிகை வாசலில் வை என்றார் கொடுத்தேன் வாங்கினாள் எனக்கா என்றாள் ஒரு புன்னகையோடு

சிறகுகட்டிப் பறந்தது உள்ளம் சிக்கெனப்பிடித்து நெஞ்சம் அவள்தான் இவள் என்றது வர்ணிக்க வார்த்தையில்லாமல் சொக்கிப்போனேன் கன விலும் கண்டிராத அழகி என்றேன் இடிமின்ன லில் வான்விழுந்த விண்மீன்கள் என்பேன் அந்த சோலைக்குள் மான் இனத்தில் ஓர் மயிலைக் கண்டேன் பாவாடை தாவணியில் பூவாடை வீசி-னாள் அறுபது கலைகளும் எழுதிய சிலை அவள் முத்தமிழ் பயிலும் வித்தக கவி அவள் என்னைக்கவி புனைந்து புலம்பவிட்டாள் என் இருவிழிக்குள் குடியமர்ந்தாள் அவள் கண்வலையில் விழுந்து விட்டேன் என்னுலகம் மறந்துவிட்டேன் நான் அடியேனுக்கும் அடியவனானேன் பார்வையிலே பேசிக்கொண்டோம் பார்ப்பதற்கு பக்தன் நான் இது அந்த பரமனுக்கும் புரிந்திராது அவளை தனிமை யில் சந்திக்க கோவில் பலமுறை சுற்றிவந்தேன் மருகி மருகி நழுவினாள் சிறு மழலையோடு குலவினாள் தாம்பூலத்து பூவெடுத்து பனித்தமுடி சொருகி னாள் மாவிளக்கு கையெடுத்து மண்டியிட்டு வணங்கினாள் என் பெயரை சேர்த்தெடுத்து பூசை கட்டி வேண்டினாள் அந்த அர்ச்சனைக்கு தட் சனையை ஜாடையிட்டு காட்டினாள் என்னித யம் பறித்தெடுத்து தன் மார்பின் நடுவில் புதைத்து விட்டாள் பந்திக்கு முந்தியது வந்திருந்த சனம் அங்கு சந்தித்தோம் இருவரும் தனிமையில் ஒரு மித்த குரலில் பேசினோம் ஒருவர்பால் ஒருவர் உரு கினோம் இருவருக்குமிடையில் இடைவெளி குறைந்ததுஎம்இருப்பிடம்எதுவெனமறந்தோம்என் பிறவிக்கு பலன் அவளென உணர்ந்தேன் பொழுது சாய்ந்தது பகலும் ஒய்ந்தது அவள் பக்கம்விட்டு நகரமுடியவில்லை உயிரொரு பாதி மனமொரு பாதியாய் அந்நாள் விட்டுப்பிரிந்தோம் பின் தொடர்ந்தன சந்திப்புக்கள் எவரும் சங்கடப்படா மல் வளர்ந்தது காதல் வரப்புக்களை தாண்டாமல்

ஓர் நாள் இணைவோம் இறப்பே எம்மை பிரித்தா லன்றி எதற்கும் அஞ்சிப் பிரியோமன்று காலங்கள் ஓடின படித்தாள் முடித்தாள் பள்ளிப்பட்டம் எடுத் தாள் தேர்வுகளைக் கடந்து என்னை பிள்ளையாக நினைந்து சில பாடங்கள் சொன்னாள் படிக்க வேண்டித் துடித்தாள் என் தரம் மாற்றக்கூட நினைத் தாள் என் வாழ்க்கைத்தரம் பறித்துப்போட்டது பாடப்புத்தகத்தை கிழித்துப்போட்டது என் சூழலை உணர்ந்தாள் எனக்காய் கரைந்தாள் ஆடம் பரம் தேவையில்லையென அன்பால் கடிந்தாள் எனக்காய் மட்டும் வாழ்ந்தாள் இருளில் கூட நிழலா னாள் அவள் சொந்தங்கள் அவளைத்தடுத்தது என் சொந்தங்கள் என்னை வெறுத்தது இருப்பினும் அவள் மாறவில்லை எனக்கு அவளின்றி வாழ்க்கை வேறு இல்லை முனைவர் பட்டம் பெற்றாள் படிப் பிற்கேற்ற வேலை பார்த்தாள் காலம் சில திருப் பங்களை அவளுக்கென்று பின்னியது கோரமுகம் கொண்டு வேலை இடம்மாற்றியது அவள் நிலைமாற் றக்கெஞ்சினாள் கதறினாள் என்னுடன் வாழ்வதற்கு உன் இலட்சியம் என்னவென்று கேட்டேன் மென்மேலும் படிக்கணும் என் சமூகத்தை உயர்த் தணும் என் தேசத்தில் உயிர் நீத்த பெற்றோர் பிள் ளைகளை காக்கணும் என்று தன இலட்சியத்தை சொன்னாள் உனக்காக நானும் எனக்காக நீயும் எதற்காகவேனும் பிரிவதில்லை என்றேன். போ உன் இலட்சியம் பெரியது உன் சிந்தனை பெரியது நீ ஆற்றும் செயல் யாவும் பெரியது உனக்காக நான் காத்திருப்பேன் தொலைதூரம் போனாலும் நான் காத்திருப்பேன் என்றேன் அவள் நெற்றிப்புருவத்தில் மோர்ந்து முத்தமிட்டேன் ஆனந்தத்தில் உடல் சிலிர்த்தாள் கண்ணீர்தான் வடித்தாள் வார்த்தை களை உள்விழுங்கி உருகித்தான் எனை அணைத் தாள் விட்டுப்பிரியாமல் நினைவுகளால் பரிசு தந் தாள் தினம் தன் நினைவிருக்க தன்னைத்தர

ஒப்புக்கொண்டாள். அவள் காதலை என்னவென்று சொல்வது இன்னுமின்னும் அன்பு கொண்டேன் அந்த அன்பின்மேலே பித்துக்கொண்டேன் அவள் அங்கே நான் இங்கே அங்குமிங்கும் ஊசலாடியது இரு நெஞ்சம் எம் இருவருக்குமிடையிலான காதல் என் நண்பர்களுக்கு பொறாமையாயும் பெருமையாயும் இருந்தது சிலர் எனக்கு அறிவுரை சொன்னார்கள் அவளைத்திருமணம் செய்து கொண்டுஇருவரும்உங்கள்லட்சியத்தைதொடரலாமென்று ஆனால் எனக்கோ அது சந்தோசத்தை தந்தாலும் மன நிறைவைத் தராது என்றுணர்ந்தேன். கல்யாணம் என்பது சாதாரணமல்ல அதற்கான வயதல்ல அப்போது ஏதோவொரு வேகத்தில் திருமணம் நடந்திருந்தால் அவள் பல வேதனைகளை சந்தித்திருப்பாள் எனக்காகவே எதையும் செய்யத் துணிந்தவள் தன் கனவுகளை குழிதோண்டி புதைத்திருப்பாள் அந்நிய நாட்டில் வாழ்ந்திருந்தாலும்தமிழ்ப்பண்பாட்டிலேயே பின்னிப்பிணைந்திருந்தாள் அவள் கவனம் என்மீதும் எம் குடும்பத்தின் மீதும்தான் இருந்திருக்கும் தன் இலட்சியத்தை அடைந்திருக்காள். அப்படி அடைந்தாலும் மனதாலும் உடலாலும் நலிந்திருப்பாள் அவள் இலட்சியத்தை பறிக்க மனமில்லை உண்மைக் காதலுக்கும் அது அழகில்லை நாட்கள் வாரமானது வாரம் மாதமானது அவள் தன் தகுதியில் தராதரத்தில் உச்சத்தை தொட்டாள் அதற்கான பண்பையும் பணிவையும் தன்னுடனே பெற்றாள் என்னை ஓரங்கட்டாமல் தன் இதயத்தில் வைத்தாள் அவளை தேடி வந்தது பலவரம் தேவையில்லை என்றாள் பெற்றோர் நாடி வந்தனர். என்னிடம் பாகம் தருவதாய் சொல்லி என்னை ஏலம் போட வந்தனர் முடியவில்லை அவர்களால் முடிவு என்னவென்று கேட்டே என்னை மிரட்டிப்பார்த்தனர் மடியவில்லை நான் அவதூறு சொல்லியும்

என்னுடன் அவள் அழிந்து போகச்சொல்லியும் திட்டியும் ஏசியும் பார்த்தார்கள் அவளும் அதற்கு மசியவில்லை நாளுக்கு நாள் தொல்லைகள் ஆரம் பித்தது மனரீதியாகவும் அவளை நிர்ப்பந்தித்தார்கள் என்னை மறந்துவிடும்படியாக அவளோ மறக்க வில்லை மரணத்தைக்கூட தழுவுவதாக எச்சரித்தாள் முடியவில்லை என்னுடன் சொல்லி அழுது தீர்த்தாள் ஆறுதல் நான் என்ன சொல்ல ஆவது ஆகட் டும் என்று சொல்லி போனேன் அவளைக் கூட்டிவர விபரீதம் அங்குதான் தலைவிரித்து நின்றது. நான் யாருக்கு என்ன பழி செய்தேன் என்மேல் பழி விழுந்தது குடித்தார் அவள் தந்தை விஷம் அடித் தார் என் காதலுக்கு சாவுமணி திகைத்தாள் திணறி னாள் துடித்தாள் துவண்டாள் பிரம்மை பிடித்தது போல் நடைப்பிணமானாள் எவருக்கும் தீங்கு நினை யாதவள் தன்வாழ்விற்கு தீங்கு வந்ததென்று எண்ணி பேதலித்துப்போனாள். போராடினாள் தந்தை உயிருக்காக மீட்டு வந்தாள் எமனிடமிருந்து அன்று முதல் சபதமெடுத்தாள் தனக்கு திருமண வாழ்க்கை இல்லையென்று தன் தாய் தந்தையருக்காய் வாழ் வதாய்.....

அன்றுதொட்டு என்னை சந்திப்பதற்கும் பேசுவதற்கும் அவள் சம்மதிக்கவில்லை என்னைத் தவிர்த்து வேறொருவரிடமும் பழகுகவுமில்லை மவுனமானாள் என் காகிதத்திற்கும் பரிவு காட்ட வில்லை காலப்போக்கில் எல்லாம் மாறிவிடு மென்று நானும் நினைத்தேன் அவள் பெற்றோர் களும் நினைத்தனர் மீண்டும் அவர்கள் அவளது திருமணத்தைப்பற்றி அவள் பெற்றோர்கள் பேச் செடுத்தார்கள் அவள் எந்தச் சந்தர்ப்பத்தி லும் எவரையும் தான் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை அப்படி தன்னை தொடர்ந்து தொல்லை தருவதாயின் தான் வீட்டைவிட்டு வெளியே போய்விடுவதாக எச்சரித்தாள் அவ-

ளின் முடிவைக்கேட்ட அவளது தாய் தந்தையர் தவறை உணர்ந்தார்கள் மனம் நொந்தார்கள் வேதனைப்பட்டார்கள் அவளது மனத்தை மாற்றுவதற்காக பல முயற்சிகள் எடுத்தார்கள் எதுவும் பலனளிக்கவில்லை கடைசியில் என் கதவைத்தட்டினார்கள் ஒரு நாள் பொழுது சாயும் நேரம் யாரோ ஒருவர் என் வீட்டருகே அங்கும் இங்குமாய் நடப்பதை நான் அவதானித்தேன் அவர் யாருக்காகவோ காத்திருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது சற்று நேரம் கழிந்தபின் அந்த மனிதர் மற்றொரு மனிதருடன் என் வீட்டுக்கதவை தட்டினார் ஒருவர் முகம் ஒரு வர் காணமுடியாத இருட்டு நான் சென்று திறந்தேன் கதவை யாரோ இரு வயதான மனிதர்கள் நான் வாங்கோ அய்யா யார் நீங்கள் என்ன வேணுமென்றேன் அந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மவுனமானார்கள் நான் என்னைய்யா வீடு மாறி வந்திட்டியளோ ஏதாவது உதவி வேண்டுமா என்று மீண்டும் கேட்டேன் அதில் ஒருவர் நாங்கள் வீடுமாறி வரவில்லை சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம் ஒரு விஷயத்தைப்பற்றி கதைக்க வந்தோம் தம்பி ஆத வனை சந்திக்கலாமா என்றார் ஆதவன் நான்தான் என்னவேண்டுமென்றேன் தம்பி பிரியாவை பற்றி கதைக்கத்தான் வந்தோம் என்றார் அந்த மனிதர் கோபமும் அதிர்ச்சியுமாயிருந்தது பிரியாவைப் பற்றி கதைப்பதற்கு நீங்கள் யார் என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டேன் அதற்கு அந்த மனிதரு டருடன் கூடவந்தவர் நான்தான் பிரியாவின் அப்பா என்றார் நான் திகைத்துபோனேன். என்ன ஆச்சரியம் உருக்குலைந்து உடல் மெலிந்து விழி கலங்கி நின்றார் நான் பார்த்ததும் அய்யா பிரியா விற்கு என்ன பிரச்சனை நான் என்ன செய்ய என்ற தும் என் கையைப்பிடித்து அழுதார் தம்பி என்னை

மன்னிச்சிடு நான் செய்த தவறை உணர்ந்துவிட்டேன் நீதான் என் பிள்ளையை ஒரு வழிக்கு கொண்டு வரணும் என்று சொல்லி புலம்பினார். அய்யா நான் என்ன உங்களை மன்னிப்பது நீங்கள் உணர்ந்தால் சரிதான் நான் உங்களை கேட்கிறேன் என்று கவலைப்படாதீர்கள் நாங்கள் அப்படியென்ன தவறை செய்துவிட்டோம் நீங்கள் உயிரை மாய்க் குமளவிற்கு அய்யா எனக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசத்தை கண்டுவிட்டீர்கள் உங்களைப் போல் உண்கிறோம் உடுக்கிறோம் சுவாசிக்கிறோம் நல்லதை கெட்டதை உணர்கிறேன் பார்க்கிறேன் கேட்கிறேன் ஏன் பேசுவதும் தமிழ்தான் உங்கள் இரத்தம்தான் எனக்குள்ளும் மாற்றுக் கிரகத் திலிருந்து வந்தவனல்ல நான். ஒன்றே ஒன்று என்னிடம் இல்லை உங்கள் தோளில் இருக்கும் அந்த பூனூல் என் தோளில் இல்லை அதுதான் என்னில் காணும் குறை அய்யா. சாதியைக் காட்டி எம்மை வெறுத்தீர்களே அதே சாதியைக்கொண்டு உங்கள் மகளின் மனதை மாற்றுங்கள் அய்யா. விம்மல் விக்கல் கண்ணீர் தும்மல் இருமல் எல்லாம் வரும் உயர்ந்தவனுக்கு வேறு தாழ்ந்தவனுக்கு வேறு என்று இல்லை காதல் எப்போதும் யாருக்கும் யார்மேலும் வரும் நீங்கள் தடுக்கமுடியாது ஏன் நீங்கள் விடும் கொட்டாவி கூட ஒருவர் பார்த்து ஒருவருக்கு வரும் அதற்கு சாதிமதம் தெரியாது. நாங்கள் உங்களுக்கு தகாது என்றால் நாங்கள் உங்களுக்கு தரும் தட் சணை உங்களுக்கு தகுமா நாங்கள் தொட்டால் தீட்டு என்றால் எங்கள் காட்டிலும் தோப்பிலும் துரவிலும் வளரும் காய் கறிகள் தித்திப்பா அய்யா. நீங்கள் போடும் பட்டைத் திருநீறு எங்கள் மாட்டு சாணியில் செய்தது அய்யா. அய்யா இதில் எது நீங்கள் கூடாதென்று சொல்வது அய்யா நாட்டில நடந்த போர் சாதிக்காகவும் மதத்திற்காகவும் நடக்கேலை அய்யா ஒட்டுமொத்தம் எமக்காக

நடந்ததய்யா இதில சாதி எங்கே மதமெங்கே போச்சு அய்யா நீங்கள் இப்பவும் உங்கள் மகள் வாழ்க்கைக்காக வரவில்லை அவளின் மனதை மாற்றத்தான் வந்தீர்கள். என்மூலம் அவளது ஆசை விருப்பத்தை எதாவது கேட்டறிந்தீர்களா? ஏன் என்னைத்தேடி வரும்போதும் ஒருவர்முகம் ஒருவர் பாராத நேரம்பார்த்துத்தான்வந்தீர்கள்அதற்கும்உங் கள் கௌரவம் இடங்கொடுக்கவில்லை இங்கு வந்ததும் அவளை ஏற்றுக்கொள் என்று சொல்ல வில்லை மனதை மாற்றும்படிதான் சொல்லுறீர்கள். என்னைய்யா அப்படி பெருமிதம் உங்களுக்கு கடவுளுக்கு அருகில் சென்று பூசை செய்தால் இறை வன் உங்கள் பக்கமில்லை நாங்கள் எட்டி நின்று வணங்குவதால் அவன் தூர செல்வதுமில்லை எல்லோருக்கும் பொது இறைவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லை அவனுக்கு பிறப்பும் மரணமும் அவன் நினைக்கின்றான் உயர்ந்தால் கூடுவதுமில்லை தாழ்ந்தால் மாறுவது மில்லை வேதங்களை கற்றறிந்த நீங்களும் போத னையை ஏற்கவில்லை என்றால் நான் என்ன செய்ய அய்யா மன்னிக்கவும் உங்கள் மனதை புண் படுத்து வதாக இதைச் சொல்லவில்லை எல்லாவற்றையும் புரிந்து நடவுங்கள் முதல் உங்கள் மகள் பிரியாவை இனியாவது புரிந்து அவள் விருப்பத்தை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் மாறுங்கள். நீங்கள் தூக்கிப் பிடிப்பதெல்லாம் உங்களுக்கு சொந்தமில்லை நீங் கள் கொண்டு போவதுமில்லை இனியாவது மனி சற்றை மனங்களைப் பாருங்கோ இறைவன் அங்கு தான் இருப்பான். தயவுசெய்து என்னை தொந்தரவு செய்யாதீர்கள் போய்விடுங்கள் என்றதும் இரு வரும் சோர்ந்த முகத்தோடு என் வீட்டைவிட்டு புறப்பட்டனர். எனக்கு மிக வேதனையாக இருந்தது என்மனதால்அவளைமறக்கமுடியவில்லை. ஓர்நாள் எதேச்சையாய் அவளை சந்தித்தேன் களையிழந்து

காணப்பட்டாள். வற்புறுத்தாமல் வாழக் கேட்டேன் அவள் மறுத்துவிட்டாள். இப்பிறப்பில் என் வாழ்க்கை முடிந்தது. இனி எப்பிறப்பும் காதல் வேண்டாம் என்று சலித்துக்கொண்டாள். இது தான்உன்நிலைப்பாடாஎன்றேன்இல்லைஎன்முடிவு என்றாள். நான் முகம்பார்த்து பேசவும் அவள் தலை கோணிக் குறுகவும் இனம்புரியாத வேதனை என் அடி நெஞ்சை பிழிந்தது தன் கண்ணீரை மட்டும் காணிக்கை தந்து எனைக்கடந்து போனாள் காலம் உருண்டோட தன்கனவுகளை நிஜமாக்க தொடங் கினாள் பிள்ளைகளை தத்தெடுத்தாள் தன் வாழ் நாளை செலவழித்தாள் தனை பெற்றவரை காலம் வரை தான் பெற்ற பிள்ளைபோல் பாதுகாத்தாள் அந்த உத்தமியை நான் நினைத்து நித்தம் நித்தம் ஏங்குகிறேன் அவள் எண்ணங்கள் நிறைவாக இறைவா என்றும் நீ கூடயிரு ஒளிரட்டும் அவள் எதிர்காலம் நன்றி வணக்கம்.

இவன் எழுத்தாணி பிடித்து எம்மை ஏற்றிவைக்கும் எம்மவன். புவியின் படைப்புகள் காலத்தைப் படம்பிடித்துக் காட்டும் காவியம் என்றுதான் என்னால் கணிப்பிடமுடியும். சொல் புதிதாய் பொருள் புதிதாய் நவ கவிதை எழுதும் அவனது ஆற்றலைக் கண்டு பல தடவைகள் நான் வியந்திருக்கின்றேன். எங்கள் வீட்டிற்கு அருகில்தான் இவனது வீடு இருந்தது. அதனால் சிறு பராயத்தில் இருந்தே இவளிடம் நிறைந்திருந்த திறமைகளை இளம்கன்றேன். அதை நான் அதிசயமாகப் பார்க்கவில்லை. ஏனென்றால் இவனது தந்தை, சித்தப்பா, பெரியப்பா எல்லோருமே ஏதோ ஒரு வகையில திறமைசாலிகளாக இருந்ததுதான். எனவேதான் ஆச்சரியப்படவில்லை. இவன் அவரகளையெல்லாம் முந்தியவாறு முன்வரிசையில் நிற்கின்றான். தந்தையாரின் வணிக நிலையத்தில் இவன் வரைந்த ஓவியம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. தத்ரூபமாக இருந்த அந்த ஓவியம் இவனைப் பாராட்டுமாறு அறைவதுபோல் இருந்தது. நான் பாராட்டினேன். "உனக்கான எதிர்காலம் ஒன்று காத்திருக்கின்றது" என்று அன்று சொன்னதை இன்று இவன் இந்நூல் மூலம் நிறுவிவிட்டான். 1993.10.16ல் சரஸ்வதி கலை அரங்கத்திலும் இவன் கதைவசனம் எழுதி இயக்கிய நாடகம் அரங்கேறி பலரது பாராட்டைப் பெற்றமை உணர்ந்து மகிழ்ந்தேன். 2005இல் பிரித்தானியாவில் இவனைச் சந்தித்தபோது சிறுவனாக இருந்த போது கவிதை எழுதியதுபோல இப்போது எழுதுவதில்லையா? எனக் கேட்டதும் தன் கால்சட்டைப் பைகுள் எழுதிய கவிதைத் தாள்களை எடுத்துத்தந்தான். அத்தனையும் பொத்திவைத்த முத்துக்கள். இவை எப்போது அரங்கேறும்? என் கேள்வி இது. இன்று இவன் அதற்கான விடையாக ஓலையை வெளிக் கொணர்ந்து நிறைவுதந்தான். இவனது திறன்மிக்க செயலை வாழ்த்தி நிற்கின்றேன்.

என்.கே. துரைசிங்கம் (பாரிஸ்)
ஊடகவியலாளர்.